REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 நவம்பர் 7 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 264 | Tuesday 07, November, 2023 | 16 பக்கங்கள் | 50/-




## அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கு நடவடிக்கை எடுக்கவும்

### விவசாய அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்புரை



அரிசி உற்பத்தியில் நாடு, தன்னிறைவு அடையும் வகையில் அடுத்த ஆறு பயிர் காலங்களில் நெற்செய்கையை இரட்டிப்பாக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விவசாய அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

06

## 2024 இல் கல்வி அமைச்சுக்கு ரூபா 237 பில்லியன் ஒதுக்கீடு

### புதிய பாடசாலைத் தவணை பெப்ரவரி 19இல் ஆரம்பம்



பட்ஜட்டில், கல்வி அமைச்சுக்காக 237 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கத் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இது, கல்விக்காக ஒதுக்கப்படும் முழுமையான தொகையல்ல எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

06

### சிறுநீரகம், புற்றுநோய் மருந்துகள் உட்பட

## அத்தியாவசிய மருந்துப்பொருட்கள் அடுத்த வாரமளவில் இறக்குமதி

### 54 வகையான மருந்துகளை தர பங்களாதேஷ் இணக்கம்



புற்றுநோய் மற்றும் சிறுநீரக நோய்களுக்கான மருந்துகள் உள்ளிட்ட 54 வகையான அத்தியாவசிய மருந்துகள் அடுத்த வாரத்திற்குள் கிடைக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், 58 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்து பொருட்களும் விரைவில் கிடைக்கவுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் டொக்டர்

06

### இடைக்கால குழு தொடர்பில் அமைச்சரவை எடுத்த தீர்மானம்

# கிரிக்கெட் நிறுவனத்தின் எதிர்கால செயற்பாடுகள்

### ஆராய அமைச்சர் அலி சப்ரி தலைமையில் நால்வரடங்கிய அமைச்சரவை உப குழு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

Sri Lanka Cricket

**நேற்று மாலை ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கிரிக்கெட் சபையின் இடைக்கால குழு மற்றும் அதற்கான வர்த்தமானி குறித்து ஆராய அமைச்சரவை உப குழு நியமிப்பு**

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சரவை உப குழு ஒன்றை நியமிப்பதற்கு நேற்று பிற்பகல் கூடிய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க இடைக்கால குழுவொன்றை நியமித்தமை தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவித்திருக்கவில்லை என தகவல்கள் வெளிவந்த நிலையில் புதிய இடைக்கால குழுவில் நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் தொடர்பிலும் ஜனாதிபதிக்கு அறிவித்திருக்கவில்லை என அந்தத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்ட தகவல்களின் பின்னரே ஜனாதிபதி அது தொடர்பில் அறிந்து கொண்டதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

அது தொடர்பில் விசாரிப்பதற்காக ஜனாதிபதி நேற்று முற்பகல் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவை பலமுறை தொடர்பு கொள்ள முயன்ற போதும் அது சாத்தியப்படவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தகைய பின்னணியிலேயே அமைச்சரவைக் கூட்டம் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றுள்ளது. அதன் போது கிரிக்கெட் புதிய இடைக்கால குழு தொடர்பில் விரிவாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

அதனையடுத்து கிரிக்கெட் நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும்

06

## கிழக்கில் 499 அதிபர்களுக்கு நியமனங்கள் வழங்கி வைப்பு



கிழக்கு மாகாணத்தில் அதிபர் தரம் மூன்றை நிறைவு செய்த 499 பேருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று (06) நியமனங்களை வழங்கினார். இந்நிகழ்வு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்

06



### 03

### பண்டிகைக் காலம் நெருங்குவதால்

## அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைக்க முடிவு

## கடற்றொழிலாளர்களுக்கு உதவ விரும்பும் ஜப்பான்

### அமைச்சர் டக்ளஸிடம் தூதுவர் தெரிவிப்பு



இலங்கை கடற்றொழிலாளர்களின் தொழில் மேம்பாடுகளுக்கு உதவ ஜப்பான் முன்வந்துள்ளது. இதுகுறித்து நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த ஜப்பான் தூதுவர் உறுதியளித்தார். கடற்றொழில் அமைச்சுக்கு வருகை தந்த

06

## சீனாவிலிருந்து கடலுணவு இறக்குமதி செய்யப்படாது

### குறிப்பாக வடமாகாணத்துக்கு இல்லை

**யாழ். விசேட, யாழ். குறூப் நிருபர்கள்**



சீனாவிலிருந்து கடலுணவு இறக்குமதி செய்யப்படாதெனவும் விசேடமாக இலங்கையின் வட மாகாணத்திற்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாதென்றும் இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் தெரிவித்தார். சீன தூதுவர் தலைமையிலான குழுவினர் நேற்று (06) யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்து நெடுந்தீவு பிரதேச மக்களுக்கென 500 உலருணவுப் பொதிகளை

06

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு முன்னாள் தலைவருக்கு அச்சுறுத்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

### இருவர் கைதாகி குற்றத்தடுப்பு பிரிவில் விசாரணை

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்கு, மரண அச்சுறுத்தல் விடுத்து கப்பம் கோரிய சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொலைபேசி மூலம் மரண அச்சுறுத்தல் விடுத்து 15 இலட்சம் ரூபாவை பலாத்காரமாக பெற்றுள்ள சம்பவம் தொடர்பில் பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க கிருளப்பனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

06

## நூறு மீற்றர் தூரத்தை 30 செக்கன்களில் கடந்து சிறுவன் உலக சாதனை

நூறு மீற்றர் தூரத்தை முப்பது செக்கன்களில் கடந்த சாத்விக் என்ற இரண்டு வயதுச் சிறுவன் உலக சாதனை நிகழ்த்தியுள்ளார். இதையடுத்து, இச்சிறுவன், சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார்.

பலாங்கொடையைச் சேர்ந்த ராஜீவ் காந்தி மற்றும் ரொஷானி தம்பதிகளின் புதல்வரான ஆரோன் சாத்விக் என்ற சிறுவனே

06

### நான்கரை வருடங்களின் பின்னர்

## தமிழரசு கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு திருமலையில்

TNA Tamil National Alliance தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இலங்கை தமிழரசுக் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாடு நான்கரை வருடங்களின் பின்னர் நடைபெறவுள்ளது. திருகோணமலையில் எதிர்வரும் ஜனவரி 28இல், இம்மாநாடு நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதனை முன்னிட்டு கட்சியின் தலைவர் உட்பட புதிய நிர்வாகிகளை தெரிவு செய்யும் கூட்டம் ஜனவரி 21இல், கூடவுள்ளதாகவும் தெரிய வருகிறது. இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் (05) வவுனியாவில் நடந்த கூட்டத்தில் இதுபற்றி தீர்மானிக்கப்பட்டது.

கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் திருமலையில் நடைபெறும்போது, தலைவர்

06

### டயனா, சுஜித் சஞ்சய, ரோஹண பண்டார

## பாராளுமன்ற கௌரவத்தை பாதிக்கும் வகையில் செயற்பாடு

### பிரதி சபாநாயகர் தலைமையிலான குழு தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்ற கட்டிடத்தில் கடந்த 20ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்சய, பெரேரா, மற்றும் ரோஹண பண்டார திசாநாயக்க ஆகிய மூவரும் பாராளுமன்றத்தின் கௌரவம் பாதிக்கும் விதத்தில் செயற்பட்டுள்ளதாக அது தொடர்பில்

06

## ஏழு இலட்சம் பேர்களின் மின் இணைப்புக்கள் துண்டிப்பு

### பத்து மாதங்கள் கட்டணம் செலுத்தாததால் நடவடிக்கை

பத்து மாதங்களாக கட்டணம் செலுத்தாத ஏழு இலட்சம் பாவனையாளர்களின் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. மின் கட்டணங்கள் அதிகரிப்பு, வரி உயர்வு, மற்றும் ரூபாவின் பெறுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளால் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளதை காரணமாகக் காட்டியே,

06

## போதையிலிருந்த பெண்கள் கான்ஸ்டபிள் மீது தாக்குதல்

### பம்பலப்பிட்டியில் இரு பெண்கள் கைது



போதையிலிருந்த பெண்கள் தாக்கியதில் பொலிஸ் கான்ஸ்டபிள் காயங்களுக்குள்ளானார். இவரை, அவசரமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்ததாக கறுவாக்காடு பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கிரகெரி வீதியில் இடம்பெற்றது.

06

## லாஃப்ஸ் எரிவாயு விலைகளில் எவ்வித மாற்றங்களும் இல்லை

### நிறுவன உயரதிகாரி அறிவிப்பு




லாஃப்ஸ் எரிவாயுவின் விலையை உயர்த்தப் போவதில்லை என, அந்நிறுவனம் அறிவித்துள்ளது. அக்டோபரிலிருந்த விலையிலேயே, நவம்பர் மாதமும் எரிவாயுவை விற்பனை செய்வதற்கு அந்நிறுவனம் தீர்மானித்துள்ளது.

உலக சந்தையில் எரிவாயுவின் விலைகளில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புடன் ஒப்பிடும் போது, இம்மாதம் எரிவாயுவின் விலையை அதிகரிக்க வேண்டியுள்ளது. இருந்தாலும், நடைமுறையிலுள்ள விலையிலேயே லாஃப்ஸ் எரிவாயுவை விற்பதற்கு

06

## சுமந்திரனின் கருத்துக்கு சம்பந்தன் மனவருத்தம்

### விரைவில் முடிவு வரலாமென்கிறார் மாவைசேனாதிராஜா



தன்னை, பதவி விலகுமாறு பொது வெளியில் சுமந்திரன் எம்.பி கூறிய கருத்தானது மிகுந்த கவலையளிப்பதாக இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் இரா. சம்பந்தன் எம்.பி தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை

06

### எரிவாயு விலைகள் உயர்ந்தாலும்

## பேக்கரி உற்பத்திகளின் விலைகளில் மாற்றமில்லை

### பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு



எரிவாயு விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்ட போதிலும், பாண் மற்றும் பேக்கரி உற்பத்திகளின் விலைகளை அதிகரிக்க விரும்பவில்லையென, அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எரிவாயுக்களின் தேவைகள் வெகுவாக குறைந்துள்ளதால், தொழில்துறையை

06

# நகர்வலம்



## வட மத்திய மாகாணத்திற்கு 325 புதிய அதிபர்கள் நியமனம்

### ஆளுநரால் நியமனக் கடிதங்கள் நேற்று வழங்கி வைப்பு



அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அதிபர் சேவை தரம் மூன்றிற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 325 புதிய அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று (06) வட மத்திய மாகாண கூட்ட மண்டபத்தில் வழங்கி வைக்கப்பட்டது.

வடமத்திய மாகாணத்தில் சிங்கள மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கே இவர்கள் அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் மற்றும் முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்ஜித் சமரகோன் ஆகியோரின் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிலையில் நேற்று வழங்கப்பட்ட புதிய நியமனங்களுடன் அதிபர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டு வடமத்திய மாகாண பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## எகிப்து தூதரக ஏற்பாட்டில் பாரம்பரிய கண்காட்சி

### பிரதம அதிதியாக சாகல ரத்நாயக்க பங்கேற்பு





ருஸைக் பாரூக்

கொழும்பிலுள்ள எகிப்து தூதரகம் இலங்கையின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் நோக்கில் "The Nine Provinces Bazaar II" கண்காட்சியொன்று கொழும்பு, சிட்டிசென்டரில் நவம்பர் 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான எகிப்து தூதுவர் மகேத் மொஸ்லே தலைமையில் நடைபெற்றது.

இலங்கையின் ஒன்பது மாகாணங்களைச்சேர்ந்த கைவினைஞர்கள், சிறு தொழில்முனைவோர், சிறப்புத்திறன் கொண்டோர் ஆகியோர் பங்குபற்றியதோடு விற்பனையகத்திற்கு பார்வையிட ஏராளமானோர் வருகை தந்தனர்.

இத்திறப்பு விழாவில் பிரதம அதிதியாக ஜனாதிபதி செயலக தலைமை அதிகாரியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்க கலந்து கொண்டார். பாகிஸ்தான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், துருக்கி, மலேசியா, பாலஸ்தீனம் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மின்னல் தாக்கி இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

கலன்பிந்துனுவெவ குடா கலன்பிந்துனுவெவ வயல் பகுதியில் மின்னல் தாக்குதலுக்குள்ளாகி இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக கலன்பிந்துனுவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கலன்பிந்துனுவெவ பொலிஸ் பிரிவின் குடா கலன்பிந்துனுவெவ பகுதியிலுள்ள வயல் பகுதியில் நேற்று முன்தினம் மாலை (05) இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

குடா கலன்பிந்துனுவெவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட 38 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; மின்னல் தாக்குதலில் உயிரிழந்த நபர் மாலை தனது வயல் நிலத்திற்கு சென்றிருந்தபோது மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலன்பிந்துனுவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### குவைத் நாட்டின் நிதியொதுக்கீட்டில்

## அநு./ தென்னாவ பகுதியில் சுத்தமான குடிநீர் திட்டம் மக்கள் பாவனைக்கு



அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

இபலோகம பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட, தென்னாவயில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை (03) மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் அல் ஹிமா இஸ்லாமிய அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம். நூருல்லாஹ் (நளீமி) இடம்விடுத்த வேண்டுகோளின் பேரில் குவைத் நாட்டு நிதி ஒதுக்கீட்டின் மூலம் தென்னாவ கிராமத்தில் அமைக்கப்பட்ட குடிநீர் திட்டம் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 15 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர்த்திட்டத்தின் மூலம் 400 இற்கும் மேற்பட்ட இப்பிரதேச குடும்பத்தினர் பயனடைவர். இதன் போது ஊர் பிரமுகர்கள் உட்பட ஏராளமான ஊர் மக்களும் கலந்து கொண்டனர்.




கொழும்பு, ஸாஹிரா கல்லூரி தமிழ்த் தினவிழா அண்மையில் கல்லூரி அப்துல் கபூர் மண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. அதிபர் ரிஸ்வி மரைக்கார் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக மொழியியல் தமிழ்த்துறைத் தலைவர் ரமீஸ் அப்துல்லாவும் கௌரவ அதிதியாக கொழும்பு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மும்தாஸ் பேகமும் விசேட அதிதியாக தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பக நிறுவுனர் முஸ்தபாவும் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களது கலை நிகழ்ச்சிகளோடு, நான்கு மாணவர்களின் நூல்களும் வெளியிடப்பட்டன.

# கிழக்கின் குரல்



## பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் பலி

மட்டக்களப்பு குறூப் நிருபர்

கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புளுட்டுமானோடை பிரதேசத்தில் பாம்பு தீண்டி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் (5) இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் திருமணமான (24) வயதுடைய பாரதிபுரம் ஐயங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த மார்ட்டின் சில்வா காசுதன் என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

மாடுகளை பராமரிப்பதற்காக புளுட்டுமானோடை பகுதி வாடியில் உறங்கிக்கொண்டிருக்கும் போது வாந்தி மற்றும் மயக்கமடைந்த நிலையில் அருகில் உள்ளவர்களின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

### நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி

## வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைக்கு பணிப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 04 இலட்சத்து 30 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை,தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 111 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, இதில் 77 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், இவ் வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 04 இலட்சத்தி 30 ஆயிரத்தி 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஏனைய வர்த்தகர்களுக்கு நீதி மன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

## கெப் - ஆட்டோ மோதி விபத்து; இருவர் காயம்

(றொட்டவெவ குறூப் நிருபர் )



திருகோணமலைமட்டக்களப்பு பிரதான வீதி கிளிவெட்டி 58ம் கட்டை பகுதியில் கெப் வாகனமும், முச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டியில் பயணித்த கணவர், மனைவி இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று (06) காலை இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த தெஹிவத்த மந்தனபுர பகுதியில் வசித்து வரும் டபிள்யு. எம்.சேனககு பண்டார (39வயது) மற்றும் அவரது மனைவி எச்.எம்.நிலந்தி (34வயது) ஆகியோர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கி வந்த கெப் வாகனமே மோதியதாகவும், கெப் வாகனத்தில் நான்கு பேர் இருந்ததாகவும் அதில் ஒருவர் வேட்டியுடன் இருந்ததாகவும் அவர் ஒரு அரசியல்வாதியாக இருக்கலாம் எனவும் விபத்தை நேரில் கண்டவர் ஒருவர் தெரிவித்தார்.

விபத்துடன் தொடர்புடைய கெப் வானத்தின் சாரதியை கைது செய்துள்ளதுடன் விபத்து தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜனாஸா நல்லடக்கத்திற்கு தேவையான உபகரணங்கள் மயோன் குழுவால் அன்பளிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



சாய்ந்தமருது பைன் ஸ்டார் விளையாட்டு கழகத்திடம் ஜனாஸாவை அடக்கம் செய்யத் தேவையான கபன் துணிகள் உட்பட்ட பொருட்களைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் சாய்ந்தமருது அல்ஜலால் பாடசாலையில் இடம் பெற்றது.

மயோன் குழுமத்தின் பூரண அனுசரணையில், பைன் ஸ்டார் (FINE STAR) விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.எம்.றியாஸ் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், மயோன் குழுமத்தின் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கௌரவ அதிதியாக லொய்ட்ஸ் குழும நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் ஐ.தே.க.வின் பொத்துவில் தொகுதி அமைப்பாருமான யூ.கே.ஆதம்லெப்பை கலந்து கொண்டதோடு, விஷேட அதிதிகளாக அல் அமானா வெல்வெபயார் அசோசியேஷனின் பணிப்பாளர் ஏ.எல்.ஏ. பரீட், டவுன் ட்ரவல்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.ஜே.எம். ஜலீல், எக்ரோ இன்ஜினியரிங் என்.டி.டி எம்.பி.கலீல், மரண விசாரணை அதிகாரி ஏ.எல். ஜவாஹிர், கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர் எம்.எம். இஸ்மாயில், ஏ.எல்.ரபீக், எம்.ஜே.எம். ராஜுதீன், ரீ.கே.எம்.ஜலீல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுமார் 15 வருட காலமாக விளையாட்டுக்கு மேலதிகமாக பல சமூக சேவைகளையும் செய்து வரும் பைன் ஸ்டார் விளையாட்டு கழகத்திடம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்காக இவ்வுதவியை வழங்கியுள்ளது.

## சிரேஷ்ட ஊடகவியலாளர் இரா. துரைரத்தினம் எழுதிய 'கிழக்கில் சிவந்த சுவடுகள்' நூல் மட்டக்களப்பில் வெளியீடு

(மட்டக்களப்பு விசேட நிருபர்)



கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான இரா. துரைரத்தினம் எழுதிய 'கிழக்கில் சிவந்த சுவடுகள்' தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை (04) நடைபெற்றது.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் மற்றும் மட்டு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் சிரேஷ்ட ஊடகவியலாளர் செல்லையா பேரின்பராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வரவேற்புரையை ஊடகவியலாளர் சிவம் பாக்கியநாதன் ஆற்றினார்.

நூல் அறிமுகவுரையை முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.சுகுமாரன், நூல் நயவுரையை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கி.துரைராசசிங்கம் ஆற்றினர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத்தின் செய்தியை சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல்.எம். சலீம் வாசித்தார். சிறப்புரையை ஊடகவியலாளர் அ.நிக்ஷனும், ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் இரா. துரைரத்தினமும் நிகழ்த்தினர்.

முதற் பிரதியை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனுக்கு நூலாசிரியர் வழங்கி வெளியிட்டு வைத்தார். இந்நிகழ்வில் அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார், முன்னாள் மாநகர முதல்வர் தி.சரவணபவன், மட்டக்களப்பு சிவில் சமூகத் தலைவர் எஸ்.மாமாங்கராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நூலின் அணிந்துரையை கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் தங்கமுத்து ஜெயசிங்கம் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 நவம்பர் 7 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.41
லுஹர் - 11.56
அஸர் - 03.17
மஃரிப் - 05.51
இஷா - 07.03

**இன்றைய சுபதினம்**
சோபகிருது வருடம் ஐப்பசி 21
ராகுகாலம் : மாலை : 3.05 - 4.36வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# 2024: கல்வித்துறை பாரிய திருப்புமுனையாக அமையும்

## மாணவர்களை மையமாகக் கொண்ட கல்விமுறையில் கவனம்





2024 ஆம் ஆண்டின் கல்வித் துறை பாரிய திருப்பு முனையாக அமையவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். ஹோமாகம மஹிந்த ராஜபக்ச வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடந்த விசேட கலந்துரையாடலிலே அமைச்சர் 06

**காஸாவுக்கான நிவாரண நிதி திரட்டல்**

## 48 மணி நேரத்துக்குள் 300 மில் சவூதி ரியால்களை எட்டியது

காஸாவின் நிர்க்கதியான நிலவரம் அனைவரின் கவனத்தினையும் ஈட்டியுள்ள நிலையில், காஸாவுக்காக சவூதி அரேபியாவில் தேசிய ரீதியாக நிதி சேகரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட நிதி,கடந்த ஞாயிறு வரை முன்னூறு மில்லியன் (முப்பது கோடி சவூதி ரியால்) என மதிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்த தகவல்களை கலாநிதி அம்ஜத் ராசிக் தினகரனுடன் பகிர்ந்து கொண்டார்.

நேற்று முன்தினம் மன்னர் சல்மான் மற்றும் பட்டத்து இளவரசர் ஆகியோர் வைபரீதியாக இந்நிதி சேகரிக்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். 06

# ம. காங்கிரஸிலிருந்து அலிசப்ரி ரஹீம் எம்.பி நீக்கம்; விசாரணையின் பின் உயர்பீடம் முடிவு!



அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நீக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தவிசாளர் எம். எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் மீது கட்சியின் ஒழுக்காற்றுக் குழு நடத்திய தொடர்ச்சியான விசாரணையின் பின்னரே, கட்சியின் உறுப்புரிமையிலிருந்து அவரை நீக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதியான அலிசப்ரி ரஹீம் சட்டவிரோதமாக தங்கத்தைக் கடத்திய சம்பவம், கட்சிக்கும் சமூகத்துக்கும் அவரை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கும் மற்றும் நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே, இவரின் உறுப்புரிமையை நீக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டது.

இது தொடர்பில், விசாரணை நடத்திய ஒழுக்காற்றுக் குழுவின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீடம், இந்த முடிவை எடுத்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கும் முஸ்லிம் தேசிய கூட்டமைப்புக்கும் (MNA) இடையில் ஏற்படுத்தப்பட்ட தேர்தல் உடன்படிக்கையின் பிரகாரம், 06

# பெரும்போக நெல் உற்பத்திக்கு உர நிவாரணமாக ரூ.1200 கோடி

## மாவட்ட செயலகங்களில் நேற்று வைப்பிலிடப்பட்டது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

விவசாயிகளுக்கு பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான உரத்தைக் கொள்வனவு செய்வதற்கு

முதலாம் கட்ட நிதியாக அரசாங்கம் நூறு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிதிகள், அந்தந்த மாவட்ட செயலாளர் அலுவலக வைப்புக் கணக்குகளில் நேற்று வைப்பிலிடப்பட்டதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.நெற்பயிர்ச் செய்கை விவசாயிகளுக்கு 01 ஹெக்டெயாருக்கு 15,000 ரூபா வீதம், சகல விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இம்முறை பெரும்போகத்தில் 8 இலட்சம் ஹெக்டெயார் நிலப்பரப்பில் நெற்பயிர்ச்செய்கையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந் 06

**பண்டிகைக் காலம் நெருங்குவதால்**

# அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைக்க முடிவு



எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த காலங்களில் பொருட்களின் விலை வேகமாக அதிகரித்தது.ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எடுத்த நடவடிக்கைகளையடுத்து விலைகள் ஓரளவு 06

# பாரிய மண்சரிவு அனர்த்தம்

**பதுளை பகுதி பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல்**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாரிய மண்சரிவு காரணமாக பதுளை – கொழும்பு பிரதான வீதியில் ஹல்துல்ல பங்கொட பிரதேசம் முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அப்பாதையூடாக பயணிக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி சேவையாளர்கள் பயணிப்பதில் அசௌகரியங்கள் ஏற்படுமானால், அப்பகுதி பாடசாலைகளில்

பணிபுரிபவர்கள் இன்றுமுதல் அருகில் உள்ள பாடசாலைக்கு சேவைக்கு சமூகமளிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியிலுள்ள 144 பாடசாலைகளைச் சேர்ந்த

அதிபர்களுக்கு பண்டாரவளை வலயக் கல்விப் பணிப்பாளர் தம்மிக்க ஹேரத் இது பற்றி அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வாறான 06


# விலைக்கோரலுக்கான அழைப்பு

## 2024ஆம் வருடத்தின் முதல் 06 மாதங்களுக்கான சமைக்கப்படாத உணவுகளை கொள்வனவு செய்தல்

## பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் – புத்தளம்

2024 ஜனவரி 01ஆம் திகதி முதல் 2024 ஜூன் 30ஆம் திகதி வரையான காலத்திற்கு புத்தளம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் உள்ள புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு சமைக்கப்படாத உணவுகளை வழங்குவதற்கு தகைமை வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. விலைமனுக்கள் மற்றும் ஏனைய விபரங்களை 2023-11-13ஆம் திகதி முதல் 2023-11-27ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் இந்த அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம்.

2. விலைக்கோரல் மாதிரிப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பிணை வைப்பு விபரங்கள்

| நிறுவனம் | மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப் படும் வைப்பு (ரூபா) | செயலாற்றுகை பிணை முறி (ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | ரொக்கப் பணமானால் (ரூபா) | வங்கிப் பிணை முறியானால் (ரூபா) |
| ஆதார வைத்தியசாலை புத்தளம் | 1,000.00 | 60,000.00 | 300,000.00 | 600,000.00 |

3. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வேண்டுகோள் கடிதத்துடன் தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. 02 பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட உங்களின் விலைக்கோரல் விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய இயைபுடைய ஆவணங்களைத் தாங்கி வரும் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **‘‘சமைக்கப்படாத உணவு வழங்குதல் - 2024’’** எனக் குறிப்பிட்டு 2023-11-29ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து இந்த அலுவலகத்தின் கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். (மேலதிக விபரங்களுக்கான மின்னஞ்சல்: rdhs.puttalam.acc@gmail.com - தொலைபேசி: 032-2248855

5. 2023-11-29ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

6. இந்த விடயம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**புத்தளம்.**



# ஹோமாகம பிரதேச சபை

(பகிரங்க அறிவித்தல்)

## உக்கிப்போகும் குப்பைகள் போக்குவரத்திற்காக விலைமனுக்கோரல் மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களின் விற்பனைக்காக விலைமனுக்கோரல்

ஹோமாகம பிரதேச சபை சேர்க்கின்ற உக்கிப்போகும் குப்பைகள் போக்குவரத்திற்காக மற்றும் திண்மக் கழிவுகள் பிரிவின் மூலம் வேறாக்கப்படுகின்ற அட்டவணையில் குறிப்பிடப்படும் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வேறுவேறாக 2024ம் ஆண்டிற்காக பொருத்தமான நிறுவனங்களிலிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விகள் விநியோகித்தல் | - 2023.11.07 அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை |
| கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் முடிவுறுத்தல் | - 2023.11.24 பி.ப. 3.00 |
| கேள்விப் பத்திரங்கள் எற்றுக் கொள்ளல் | - 2023.11.27 பி.ப. 2.00 வரை |
| கேள்விப் பத்திரங்கள் திறத்தல் | - 2023.11.27 பி.ப. 2.00 இற்கு |

கேள்வி விண்ணப்பங்கள் வேறுவேறாக 02 பிரதிகளுடன் (மூலப்பிரதி/ நகல்பிரதி) விநியோகிக்கப்படுவதுடன் அப்பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென இரு உறைகளில் இட்டு பொறியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மூலப்பிரதி/நகல்பிரதி உக்கிப்போகும் குப்பை சேவை வழங்குதல் அல்லது மீள் சூழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்களை கொள்வனவு செய்தல் என்று குறிப்பிட்டு செயலாளர், ஹோமாகம பிரதேச சபை, நீதிமன்ற வீதி, ஹோமாகம என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் குறித்த நேரத்திற்கு அனுப்பலாம். அல்லது எனது உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

சமர்ப்பிக்கப்படுகின்ற கேள்விகள் பற்றிய இறுதித் தீர்மானம் ஹோமாகம பிரதேச சபைக்குச் சொந்தமாவதுடன் இது பற்றிய மேலதிக விபரங்களை ஹோமாகம பிரதேச சபையில் பெற்றுக் கொள்ளலாம்.

**உக்கிப்போகும் குப்பைகளின் போக்குவரத்திற்காக**

| | |
|---|---|
| கேள்வி விண்ணப்பப் படிவக் கட்டணம் | - ரூ. 2000.00 |
| மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | - ரூ. 200,000.00 (இத் தொகை கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும் போது காசாக வைப்புச் செய்தல் வேண்டும். |

**மீள்சுழற்சிப் பொருட்கள் விற்பனைக்காக**

| | |
|---|---|
| கேள்வி விண்ணப்பப் படிவக் கட்டணம் | - ரூ. 200.00 |
| மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | - ரூ. 5000.00 (இத் தொகை கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளும் போது காசாக வைப்புச் செய்தல் வேண்டும்) |
| தொலைபேசி இலக்கம் | - 011 2855230 |
| பெக்ஸ் இலக்கம் | - 011 2857169 |

2023 நவம்பர் 06
**தலைமையகத்தில்.**

**செயலாளர்,**
**பிரதேச சபை, ஹோமாகம.**



# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

**கடன் தொடர்பு இல. 77660557, 77660888, 83673626, 82399715, 83921201, 85950229, 85950651.**

**இரத்தினபுரி, உட நிரிஅல்ல, வேரகம, என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. எலபாத விதானகே சந்திம அபயசேன மற்றும் திருமதி. செனரத் ஹந்தகிரியகே வசந்தி குசுமலதா செனரத் ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.**

2. இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023 ஆகஸ்ட் 11 ஆம் திகதி 2345 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023 ஆகஸ்ட் 07 ஆம் திகதி திங்கட்கிழமை தினகரன், தினமின, மற்றும் டேய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் சொக்மன் அன்ட் சமரவிக்ரம் கம்பனியின் ஏலதாரர் 2023 நவம்பர் 29 ஆம் திகதி புதன்கிழமை மு.ப.11.00 மணிக்கு ஆதனம் இல. 1 காணப்படும் இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேலே ஈட்டு முறி இலக்கங்கள் 849, 1814, 1103, 361, 2585, 2586, 2877, 2878, 2879, 2995,மற்றும் 3348 ஆகியவற்றில் குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.**

01. சபரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டம் நவதுன் கோரளை பல்லேபற்றுவில் எலபாத்த பிரதேச செயலகப் பிரிவில் மற்றும் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் வேரகம கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 184C இல் எலபாத்த கிராமத்தில் அமைந்த எலபாத்த எஸ்டேற்றின் பாகம் என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச்.பீ.எஸ்.ராஜபக்ஷ தயாரித்த 2000.09.10 திகதியிட்ட வரைப்படம் இல. 181 இல் விபரித்த காணித்துண்டு 02 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 181 இன் பிரகாரம் இரண்டு றூட் பூச்சியம் தசம் ஏழு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.02, பே.0.7) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் N.23/114 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

02. சபரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டம் நவதுன் கோரளை பல்லேபற்றுவில் எலபாத்த பிரதேச செயலகப் பிரிவில் மற்றும் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் வேரகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் வேரகம கிராமத்தில் அமைந்த வேரகம எஸ்டேற் அல்லது வேரகமவத்த என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். களுபஹன தயாரித்த 2011.06.07 திகதியிட்ட வரைபடம் இல.3647 இல் விபரித்த காணித்துண்டுகள் 1, 2, மற்றும் 3 என் அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டுகள் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3647 இன் பிரகாரம் பத்து ஏக்கர்கள் (ஏ.10, றூ.00, பே.00) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் N 05/121ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

03. சபரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டம் நவதுன் கோரளை பல்லேபற்றுவில் எலபாத்த பிரதேச செயலகப் பிரிவில் மற்றும் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் வேரகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் வேரகம கிராமத்தில் அமைந்த வேரகம எஸ்டேற் இன் பாகம் என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே.பீ.என். ஜயசுந்தர தயாரித்த 2013.05.17 திகதியிட்ட வரைபடம் இல. 9576 இல் விபரித்த காணித்துண்டு A என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 9576 இன் பிரகாரம் பத்து ஏக்கர்கள் இரண்டு றூட்கள் (ஏ.10, றூ.02, பே.00) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் N50/105இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

04. சபரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டம் நவதுன் கோரளை பல்லேபற்றுவில் எலபாத்த பிரதேச செயலகப் பிரிவில் மற்றும் நிவித்திகல பிரதேச சபை எல்லைகளுள் வேரகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் வேரகம கிராமத்தில் அமைந்த லிந்தகாவவத்த என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் றீ.பி.எஸ். சங்காரன்தெனிய தயாரித்த 2018.09.02 திகதியிட்ட வரைபடம் இல. 8833E இல் விபரித்த காணித்துண்டு 01 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல8833E இன் பிரகாரம் ஒரு ஏக்கர் மூன்று றூட்கள் பன்னிரெண்டு தசம் எட்டு மூன்று பேர்ச்சுகள் (ஏ.01, றூ.03.பே.12.83) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள் பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் N50/105இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை.**

| Item | Country of origin | make | Model | Manufacturing year and status | Serial No |
|---|---|---|---|---|---|
| INCTTO Tea color sorter | China | INCTTO | 6300 | 2018 and Brand New | DCS50000640 |

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**இலங்கை வங்கி**
**மேற்தரக் கிளை**
**இரத்தினபுரி.**

**திருமதி. கே.கே. சுவர்ணதிலகா**
**பிரதான முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 21ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் ஆகிர் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை

போர்க்களத்தில் எதிர்ப்புகளைத் தாங்கிப் படை நடத்தும் பொறுப்பு அதற்கான ஆற்றல் படைத்தவர்களிடம் இருப்பது போலத்தான், குடிமக்களைக் காப்பாற்றி உயர்வடையச் செய்யும் பொறுப்பும் அவர்களைச் சேர்ந்த ஆற்றலாளர்களுக்கே உண்டு.

# நீரிழிவு விடயத்தில் அலட்சியம் கூடாது!

தெற்காசியாவில் எழுத்தறிவைப் பெற்றவர்கள் அதிகம் வாழும் நாடாக விளங்குகிறது இலங்கை. அத்தோடு உயர்தரத்திலான சிறந்த சுகாதார சேவையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நாடாகவும் திகழ்கின்றது. இந்நாட்டில் நடைமுறையில் இருக்கும் இலவச சுகாதார சேவையும் இலவசக் கல்விக் கொள்கையும் இதற்கு பாரிய பங்களிப்பு நல்கி வருகின்றன.

இந்த இரண்டு சேவைகளும் இந்நாட்டு மக்களுக்கு முற்றிலும் இலவசமாக கிடைக்கப்பெற்று வருவதால், பலவிதமான அடைவுகளையும் பிரதிபலன்களையும் நாடும் மக்கள் அடைந்து கொண்டிருக்கின்றனர். அவற்றில் போலியோ உள்ளிட்ட பல தொற்றுநோய்களும், மலேரியா, யானைக்கால் நோய் போன்றனவும் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அத்தோடு எதிர்பார்க்கப்படும் உயிர்வாழும் ஆயுட்காலம் பெரிதும் அதிகரித்துக் காணப்படுவதும் இவற்றின் பிரதிபலனே அன்றி வேறில்லை.

அண்மைக் காலத்தில் இந்நாட்டினரின் நடத்தையிலும் உணவுப் பழக்கவழக்கங்களிலும் பெரிதும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக பெரும்பாலானவரின் வாழ்க்கையமைப்பு பரபரப்பாக மாற்றமடைந்திருப்பதும், உடலுழைப்பில் போதியளவில் ஈடுபடாமையும் உணவுப் பழக்கவழக்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கவையாகும்.

இவற்றின் விளைவாக உடல், உள ரீதியில் பல தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முகம்கொடுக்கும் நிலைக்கு இந்நாட்டு மக்கள் உள்ளாகியுள்ளனர். அவற்றில் இதயநோய்கள், புற்றுநோய்கள், சிறுநீரக நோய்கள் மற்றும் நீரிழிவு போன்ற தொற்றாநோய்கள் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. அந்நோய்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் பெரிதும் அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது. அதிலும் நீரிழிவு பாதிப்புக்கு ஆண் பெண் வேறுபாடோ, வயது வித்தியாசமோ கிடையாது. இந்நோய் எல்லா மட்டத்தினர் மத்தியிலும் அதிகரித்துக் காணப்படுகிறது. இதற்கு 'நடத்தை மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே முக்கிய காரணம்' என்று மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் இலங்கை அகச்சுரப்பிகள் மருத்துவ நிபுணர்கள் கல்லூரி மேற்கொண்ட ஆய்வொன்றில் நீரிழிவு தொடர்பில் அதிர்ச்சித் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. அதாவது, இந்நாட்டில் 23 வீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

அதேநேரம் உலகில் நீரிழிவு நோய்க்கு உள்ளானவர்கள் அதிகளவில் காணப்படும் முதல் பத்து நாடுகளில் ஒன்றாக இலங்கையும் காணப்படுவதாக அந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் நீரிழிவு தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட பேராசிரியர் டொக்டர் பிரசாத் கட்டுலந்த, 'இந்நாட்டில் நீரிழிவு நோயினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2006 இல் நடத்தப்பட்ட ஆய்வில் நாட்டின் மொத்த சனத்தொகையில் 10 வீதமானோர் இந்நோய்க்கு உள்ளாகி இருப்பதாகத் தெரியவந்தது. அவர்களில் பெரும்பகுதியினர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். ஆனால் தற்போது இது பெரிதும் அதிகரித்துள்ளது' என்று அவர் கூறியுள்ளார்.

நீரிழிவானது முன்னொரு போதுமே இப்போது போன்ற அதிகரிப்பை இந்நாட்டில் அடைந்ததில்லை. இது மருத்துவ துறையினர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினரின் அவதானத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது.

நீரிழிவு ஒரு தொற்றுநோய் அல்ல. என்றாலும் இதன் பாதிப்புகளும் தாக்கங்களும் மிகவும் பாரதூரமானவை. அதிக தாக்கம் கொண்டவை. இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான மரணங்களுக்கு துணைபுரிவதில் நீரிழிவு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள உண்மையாகும்.

உடலில் இயல்பாகவே இன்சுலின் சுரப்பதில் ஏற்படும் பலவீனங்களின் விளைவாகவே நீரிழிவு நோய் ஏற்படக் காரணமாக அமைகிறது. உடலின் உள்ளுறுப்புக்களை மெல்ல மெல்ல பாதிக்கச் செய்யும் இந்நோய், வெளியுறுப்புக்களையும் தாக்கக்கூடியது என்பதை மறந்து விடலாகாது. குறிப்பாக சிறுநீரகம், இதயம், கண்பார்வை நரம்புகள் என்பன மாத்திரமல்லாமல் கால், கைகளின் விரல்கள் மரத்துப் போதல் போன்றவாறான பாதிப்புக்கள் ஏற்படலாம்,

நடத்தை மற்றும் உணவுப் பழக்கவழக்கத்தை ஆரோக்கியத்திற்கு ஏற்ற முறையில் பேணிக் கொள்ளும் போது இந்நோயைத் தவிர்த்துக் கொள்ளலாம். அதேநேரம் இந்நோய்க்கு உள்ளானவர்கள் உரிய மருத்துவ ஆலோசனைகளுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ளும் போது இந்நோயைக் கட்டுப்பாட்டு நிலையில் வைத்துக்கொள்ள முடியும். அத்தோடு மருத்துவ ஆலோசனைகளுடன் நடத்தை மற்றும் உணவுப் பழக்கவழக்கத்தையும் ஆரோக்கியத்திற்கு ஏற்ப சீரமைத்துக் கொள்ளவும் தவறலாகாது. அப்போது நீரிழிவு ஒரு அச்சுறுத்தலாகவே இருக்கப் போவதில்லை.

editor.tkn@lakehouse.lk

# இனிய நந்தவனம் மாத சஞ்சிகையினால் இராமநாதபுரம் சிறப்பு மலர் வெளியீடு







தமிழ்நாட்டின் திருச்சியிலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் மாத சஞ்சிகை ஒவ்வொரு மாதமும் சிறப்புமலர்களை வெளியிட்டு வருகிறது. அந்த வரிசையில் நவம்பர் மாதம் இராமநாதபுரம் மாவட்டச் சிறப்புமலராக வெளியிடப்பட்டுள்ளது

இம்மலரின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் 11 ஆம் திகதி இராமநாதபும் தமிழ்ச்சங்கம் ஏற்பாட்டில் அரவிந்த அரங்கத்தில் நடைபெற்றது. இராமநாதபுரம் தமிழ்ச்சங்கப் பொருளாளர் கா.மங்கள சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற விழாவில் திருமதி இலதா சேஷாத்திரி இறைவாழ்த்துப் பாட, தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் தமிழ் இசை நிகழ்த்தினர்.

'குறளமுதம்' என்ற தலைப்பில் கவிஞர் மோகனபாரதியும், 'நல்ல தமிழ் நவில்வோம்' என்ற தலைப்பில் நல்லாசிரியை தமிழரசி உதயகுமாரும் உரை நிகழ்த்தினர். கவிஞர் பா. தீனதயாளன் 'சிரிக்க சிந்திக்க' என்ற தலைப்பில் பேசி அனைவரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார். தமிழ்ச் சங்கத் தலைவர் மை.அப்தூல்சலாம் 'இலக்கிய இன்பம்' என்ற தலைப்பில் மலைபடுகடாம் (எ) கூத்தராற்றுப்படை பற்றி உரை நிகழ்த்தினார்

இனிய நந்தவனம் இராமநாதபுரம் சிறப்புமலரை பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் அறிமுகப்படுத்த, முதல் பிரதியை தமிழ்ச் சங்கத்தின் மகளிர்அணித் தலைவி மருத்துவர் மதுரம் அரவிந்தன் வெளியிட்டார். கு.விவேகானந்தன், தமிழ்ச்சங்க துணைத்தலைவர் வைக்கிங் மு.ச.கருணாநிதி, நல்லாசிரியை கா. காளீஸ்வரி சுகுமார், இனிய நந்தவனம் இணையாசிரியர் கவிஞர் பா.தென்றல் ஆகியோர் பெற்றுக்கொண்டார்கள்.

இந்த இலக்கிய விழாவின் இன்னொரு சிறப்பு நிகழ்வாக சென்னை சி.கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரியின் முதல்வரும் எழுத்தாளருமான முனைவர் வா.மு.சே. ஆண்டவர் எழுதிய 'பன்முக நோக்கில் கலைஞரின் படைப்பிலக்கியம்', 'வனப்ப', 'மொழிப்போரும் தமிழ் கவிதையும்', 'செல்வக்கேசவராயம்' ஆகிய நான்கு நூல்கள் வெளியிடப்பட்டன. எழுத்தாளர் வெ.கா சேக்கிழார், சமூக ஆர்வலர் நா. காயாம்பு ஆகியோர் நூலாய்வு செய்தனர்.

'குரலற்றவர்களின் குரல்' என்ற தலைப்பில் கவிஞர் கா . மங்கள சுந்தரமூர்த்தி தலைமையுரையாற்ற, வழக்கறிஞர் இரா. ராஜீவ்காந்தி 'கலைஞரின் படைப்புலகம்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

அவர் பேசும் போது, தமிழ்நாட்டில் திருவள்ளுவருக்கு உருவம் கொடுத்து மிக உயர்ந்த சிலையையும் வள்ளுவர் கோட்டத்தையும் உருவாக்கி திருவள்ளுவரையும் திருக்குறளையும் மக்களிடம் கொண்டு சென்ற பெருமை முத்தமிழறிஞர் கலைஞருக்கு மட்டுமே உண்டு என்று குறிப்பிட்டார்.

நிறைவாக கவிஞர் செ.மாணிக்கவாசகம் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# பலஸ்தீன மக்களுக்காக சவுதி அரேபியா மனிதாபிமான உதவி, இராஜதந்திர நகர்வு





பலஸ்தீனத்தின் சோகம் தொடர்கதையாகி விட்டது. அம்மக்களுக்கு இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை. அவர்கள் தமது சொந்த நாட்டில் வாழும் உரிமை பறிக்கப்பட்ட துரதிர்ஷ்டசாலிகள். செய்யாத குற்றத்திற்காகக் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டவர்கள். இவர்களுக்கெதிராக மிகக் கடுமையான உக்கிரமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டபோதும், சர்வதேச சமூகத்தினால் கண்டு கொள்ளப்படாதவர்கள்.

உலகிலுள்ள அதிகாரவர்க்கத்தினரும் அரசியல் பலம் கொண்டவர்களும் அநியாயமிழைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வப்பாவி மக்களின் பக்கம் அவர்களுக்காகக் கைகோர்த்து அணிதிரளாமல் உள்ளனர்.

மனித உரிமைக்காகக் குரல் கொடுக்கும் நிறுவனங்களோ, நியாயசபைகளோ இந்த மக்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை. கொத்துக் கொத்தாக மடியும் பச்சிளம் பாலகர்களுக்கெதிராக இந்த உலகம் நியாயக்கண் கொண்டு இவர்களைப் பார்க்கவில்லை.

ஆனாலும் அரபு மக்கள் அவ்வாறு பார்த்துக் கொண்டிருக்கவில்லை. பலஸ்தீன விவகாரம் அரசியலாக்கப்படுவதையோ, பலஸ்தீன உதிரத்தை வைத்து வியாபாரம் செய்வதையோ அவர்கள் விரும்பவில்லை. விளம்பரமின்றி தம்மால் முடியுமான முன்னெடுப்புக்களை செய்தவண்ணமே இருக்கின்றனர்.

குறிப்பாக சவுதி அரேபிய அரசினால் மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர முயற்சிகள் பலருடைய தலையீடுகள், முட்டுக்கட்டைகள் காரணமாக பலனளிக்காமல் போயின.

இருப்பினும் சோர்ந்து விடாமல் இராஜதந்திர முயற்சிகளையும் தொடர்ந்தும் மேற்கொள்கின்றனர். இம்மாதம் 11 ஆம் திகதி சவுதி தலைமையிலான அரபு லீக் உச்சிமாநாட்டின் அமர்வொன்று நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. அங்கு காசா விவகாரம் பேசப்படப் போவதாக அறிய முடிகிறது. எகிப்திய தலைநகர் கெய்ரோவில் கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற அரபுலீக் மாநாடும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதேபோல் பத்ஹ், ஹமாஸ் ஆகிய குழுக்களுக்கிடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டபோது அவற்றின் பிரதிநிதிகளை அழைத்து சமரசம் செய்து வைப்பதற்காக, 2007 ஆம் ஆண்டு மக்கமா நகரில் நடைபெற்ற மக்கா மகாநாட்டையும் மறந்துவிட முடியாது. இம்மாநாடு மறைந்த மன்னர் அப்துல்லாஹ் பின் அப்தில் அஸீஸ் ஆல் சுஊத் அவர்களுடை தலைமையில் நடைபெற்றது.

மறுபுறம் மனிதாபிமான உதவிகளைச் செய்தவதில் சவுதி அரசு மாத்திரமன்றி மக்களும் இணைந்துள்ளனர். அவர்கள் தம்மால் முடியுமான உதவிகளை பலஸ்தீன மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இரு தினங்களுக்கு முன் ஸாஹிம் செயலியினுடாக பொதுமக்களிடமிருந்து நன்கொடைகளைச் சேகரிக்கும் திட்டமொன்றை இரு புனிதஸ்தலங்களின் காவலர் மன்னர் சல்மான் அவர்கள் தொடங்கி வைத்தார். தமது பங்களிப்பாக 30 மில்லியன் சவுதி றியால்களை அவர் வழங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து முடிக்குரிய இளவரசர் முஹம்மது பின் ஸல்மான் இருபது மில்லியன் றியால்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் தமது நன்கொடைகளை வழங்கி வருகின்றனர்.

இரண்டாம் நாள் முடிவில் சுமார் 28 கோடி 78 இலட்சத்து 53,386 சவுதி றியால்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் சேகரிப்புத் தொடர்ந்த வண்ணமிருக்கின்றது. மன்னர் சல்மான் நிலையமே இச்சேகரிப்பை முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மறைந்த மன்னர் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ் ஆல் சுஊத் ((ரஹ்) அவர்களின் ஆட்சிக் காலப்பகுதியில் றபாஹ் மற்றும் பைத் லாஹியா போன்ற பலஸ்தீன நகரங்களில் இஸ்ரேலினால் தாக்குதலுக்குள்ளான நகரங்களை மீளக் கட்டியெழுப்ப சவுதி பாரிய உதவிகளை பலஸ்தீன மக்களுக்குச் செய்திருக்கின்றது.

1700 குடியிருப்புத் தொகுதிகள், பாடசாலைகள், மருத்துவ நிலையங்கள், குடிநீர் வசதிகள், கலாசார நிலையங்கள் மற்றும் சந்தைத் தொகுதிகள் என தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் அமையப் பெற்ற பூரணமான நகரங்களை சவுதி அரசு தனது நிதியுதவியுடன் பலஸ்தீன மக்களுக்கு ஏற்படுத்தியிருந்தது. இப்பாரிய மனிதாபிமான உதவிகளை பலஸ்தீன மக்கள் இன்றும் நன்றியுணர்வோடு நினைவுகூருகின்றனர்.

மௌலவி எம்.ஏ.எம்.றபீஸ் (எம்.ஏ)

# அட்டாளைச்சேனை இரத்ததான முகாமில் ஏராளமானோர் பங்கேற்பு

## அக்/அந்நூர் ம.வி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு







அட்டாளைச்சேனை அக்/அந்நூர் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இம்முகாமில் ஏராளமானோர் பங்கேற்றனர். பழைய மாணவர் சங்கத்தின் செயலாளரும், ஊடகவியலாளருமான றிசாத் ஏ. காதர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆதார வைத்தியசாலை (அக்கரைப்பற்று) வைத்திய அத்தியட்சகர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர். றஜாப், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளரும், பாடசலை கல்வி மேம்பாட்டு இணைப்பாளருமான ஏ.எம். நௌபர்டீன் ஆகியோருடன் பிரதம பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மஜீத் (ஓய்வு) ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து சிறப்பித்திருந்தனர்.

விசேட அதிதிகளாக ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் உறுப்பினரும், எம்.ஜே.எஸ். குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான எம்.ஐ.எம். ஜரீன், அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஐ.எல்.அப்துல் ஹை, அந்நூர் மகாவித்தியாலய பிரதி அதிபர் எம்.எச். எம்.றமீஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். ஆதார வைத்தியசாலை (அக்கரைப்பற்று) இரத்த வங்கிப் பிரிவின் வேண்டுகோளுக்கு அமைவாக இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த இரத்ததான முகாம் நிகழ்வுக்கு அட்டாளைச்சேனை_ 08 சனசமூக நிலையம் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எம் .எப்.எம்.நவாஸ்
(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

# றொட்னி விதானபத்திரணவின் 'லண்டன் வெம்மை'_சில குறிப்புக்கள்

இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் இணைந்து வெளியிட்ட சு. முரளிதரன் சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்த ' லண்டன் வெம்மை' நாவல் மூலம் தமிழுக்கு அறிமுகமாகிறார் றொட்னி விதானபத்திரண.

றொட்னி விதானபத்திரண நான்கு தசாப்தங்களாக ஊடகவியலாளராக செயற்பட்டு வருகிறார். மக்கள் நேசிக்கும் பாடலாசிரியராக, திரைப்பட மற்றும் தொலைக்காட்சி இயக்குநராக அறியப்பட்டவர். 'தருணயா' செய்திப் பத்திரிகையின் ஆசிரியராக 23 வருடங்கள் கடமையாற்றி 'லங்காதீப' பத்திரிகையின் நிறைவேற்று மட்ட ஊடகவியலாளராக செயற்படுகின்றார். இவரின் முதலாவது நாவலான 'சாருமதிய' வை அடுத்து இரண்டாவது நாவலாக லண்டன் வெம்மை வெளிவந்துள்ளது.



றொட்னி விதானபத்திரண



சு. முரளிதரன்

**லண்டன் வெம்மை பற்றி சில குறிப்புக்கள்:**

நூலாசிரியர் துப்பறியும் கதை பாணியிலான இலகு வாசிப்புக்காக இந்த நாவலை நேர்கோட்டு (linear) முறையில் எழுதி இருப்பதாகச் சொல்கிறார். அவரது அதே குறிப்பில் இன்னுமொரு இடத்தில் "சாமானியர்களின் உணர்வுகளுடன் இணைத்து வாழ்க்கை மற்றும் சமூகத்தின் யதார்த்தத்தை சித்தரிக்க இதனூடாக விரும்பினேன்" என்கிறார். மொழிபெயர்ப்பாளர் குறிப்பிடுவது போல் "இந்த Light Reading எனச் எனச் சொல்லப்படும் சரள வாசிப்புக்கான நாவல் இது என்பதால் இலகுநடையில் மொழிபெயர்த்து இருக்கிறேன்" என்கிறார்.

காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளில் காலனித்துவம் புகுத்திய ஆங்கிலக் கல்வி முறைமை, அந்தந்த நாடுகளின் மொழிகளில் நவீனத்துவத்தை கொண்டு வருவதில் பெரும் பங்காற்றி இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் காலனித்துவம் விட்டுச்சென்ற கலாசார சமூக பொரூளாதார மற்றும் அரசியல் (ஆங்கில கல்வி முறைமை உட்பட) சிந்தனைகளாலும் முறைமைகளாலும் காலனித்துவ மனோபாவத்தை தக்கவைத்துச் சென்றது.

அதனால் காலனித்துவத்திலிருந்து விடுதலை அடைந்த நாடுகளின் பிரஜைகள் அதே காலனித்துவ நாடுகளில் அகதிகளாய் போனார்கள். அத்தோடு காலனித்துவ மனோபாவத்தின் நீட்சியாக, அதே நாடுகளுக்கு (மேலை நாடுகளுக்கு) கல்விக்காவும் , பணி நிமித்தமும் போனதோடு, அந்த நாடுகளின் பிரஜையாக மாறும் மோகத்தோடு சென்றார்கள். அப்படியாக சென்றவர்கள் சிலரைதான் இந்த நாவல் முக்கிய கதாபாத்திரங்களாகக் கொண்டிருக்கிறது.

அதனால்தானோ என்னவோ அவர்கள் வந்த நாட்டின்(இலங்கை) அந்தக் காலகட்டத்தின் அதாவது நாவல் நகரும் காலகட்டத்தில் இலங்கையின் சில சமூக அரசியல் பிரச்சினைகளை பற்றி பிரக்ஞையற்றவர்களாக, முழுக்க முழுக்க தனிநபர் பிரச்சினைகளுடன் ஊடாட்டம் செய்கிறார்கள். மொத்தத்தில் இலங்கைவாழ் சிங்கள் எழுத்தாளர் ஒருவர் வண்டனை தளமாகக் கொண்டு சிங்களத்தில் எழுதிய நாவலின் தமிழ்மொழிபெயர்ப்பில் வாசிப்பது என்ற வகையில், றொட்னி விதானபத்திரணவின் 'வண்டன் உணுசும' என்ற பேரில் எழுதிய நாவலை சு. முரளிதனின் தமிழ்மொழி பெயர்ப்பில் 'லண்டன் வெம்மை' என்ற பேரில் வாசிக்கக் கிடைத்திருப்பது புதிய வாசிப்பு அனுபவமாக இருக்கிறது.

மேமன்கவி




# "நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கைகளில் உள்ளன"

## நவம்பர் இறந்த ஆன்மாக்களை சிறப்பிக்கும் மாதம்

கத்தோலிக்க திருச்சபை இந்த மாதத்தை இறந்த ஆன்மாக்களை நினைவு கூறும் மாதமாக சிறப்பிக்கின்றது.

பரிசுத்த வேதாகமத்தின் சாலமோனின் நூல்கள் இவ்வாறு தெரிவிக்கின்றன.

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. கடுந்தொல்லை எதுவும் அவர்களைத் தீண்டாது. அறிவிலிகளின் கண்களில் இறந்தவர்களைப் போல் அவர்கள் தோன்றினார்கள். நீதிமான்களின் பிரிவு பெரும் துன்பமாகக் கருதப்பட்டது. அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து சென்றது பேரழிவாகக் கருதப்பட்டது. அவர்களோ அமைதியாக இளைப்பாறுகிறார்கள். மனிதர் பார்வையில் அவர்கள் தண்டிக்கப்பட்டாலும், இறவாமையில் அவர்கள் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளார்கள். சிறிதளவு அவர்கள் கண்டித்துத் திருத்தப்பட்ட பின், பேரளவு கைம்மாறு பெறுவார்கள்.

கடவுள் அவர்களைச் சோதித்தறிந்த பின், அவர்களைத் தமக்குத் தகுதியுள்ளவர்கள் என்று கண்டார். பொன்னை உலையிலிட்டுப் புடமிடுவது போல் அவர் அவர்களைப் புடமிட்டார்;



எரிபலி போல் அவர்களை ஏற்றுக்கொண்டார். கடவுள் அவர்களைச் சந்திக்க வரும்போது அவர்கள் ஒளிவீசுவார்கள்; அரிதாள் நடுவே தீப்பொறி போலப் பரந்து சுடர்விடுவார்கள்; நாடுகளுக்குத் தீர்ப்பு வழங்குவார்கள்; மக்கள் மீது ஆட்சி செலுத்துவார்கள். ஆண்டவரோ அவர்கள் மீது என்றென்றும் அரசாள்வார். அவரை நம்புவோர் உண்மையை அறிந்துகொள்வர்; அன்பில் நம்பிக்கை கொள்வோர் அவரோடு நிலைத்திருப்பர். அருளும் இரக்கமும் அவர் தேர்ந்துகொண்டோர் மீது இருக்கும்.

.நற்செய்தி வாசகம் இவ்வாறு தெரிவிக்கின்றது."அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியது: "வானதூதர் அனைவரும் புடைசூழ மானிடமகன் மாட்சியுடன் வரும்போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்றுகூட்டப்படுவர். ஓர் ஆயர் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்துச் செம்மறியாடுகளை வலப் பக்கத்திலும் வெள்ளாடுகளை இடப் பக்கத்திலும் நிறுத்துவது போல் அம்மக்களை அவர் வெவ்வேறாகப் பிரித்து நிறுத்துவார். பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப் பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, `என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள்; உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள்; தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள்; அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்; நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்; நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக் கொண்டீர்கள்; சிறையில் இருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள்' என்பார். அதற்கு நேர்மையாளர்கள் `ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம், அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக்கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத் தேடி வந்தோம்?' என்று கேட்பார்கள். அதற்கு அரசர், `மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்' எனப் பதிலளிப்பார். பின்பு இடப் பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, `சபிக்கப்பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தணிக்கவில்லை. நான் அன்னியனாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அளிக்கவில்லை. நோயுற்றிருந்தேன்,

சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை' என்பார். அதற்கு அவர்கள், `ஆண்டவரே, எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ, அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ இருக்கக் கண்டு உமக்குத் தொண்டு செய்யாதிருந்தோம்?' எனக் கேட்பார்கள். அப்பொழுது அவர், `மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்' எனப் பதிலளிப்பார். இவர்கள் முடிவில்லாத் தண்டனை அடையவும் நேர்மையாளர்கள் நிலைவாழ்வு பெறவும் செல்வார்கள்."

இந்த நற்செய்திதான் கிறிஸ்தவ நம்பிக்கையின் மையமாக இருக்கிறது. இயேசுவால் மட்டும்தான் கடவுளை நமக்கு காட்ட முடியும், இயேசு வழியாக மட்டும்தான் நாம் கடவுளை காணமுடியும் என்பதுதான் அந்த நம்பிக்கை. யோவான் நற்செய்தியாளர் இதனை வேறு விதமாக கூறுகிறார். "என்னைக்காண்பது தந்தையைக்காண்பது ஆகும்" (யோவான் 14: 9).

இயேசுவின் வார்த்தைகள் நமக்கு சொல்கின்ற செய்தி இதுதான்: நாம் கடவுளைப்பார்க்க வேண்டுமென்றால், கடவுளின் மனநிலையை அறிய வேண்டுமென்றால், கடவுளின் இதயத்தைப்புரிந்து கொள்ள வேண்டுமென்றால், கடவுளின் இயல்பைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், இயேசுவோடு நெருங்கி வர வேண்டும்.

இயேசுவை உற்றுநோக்க வேண்டும். இயேசுவின் வார்த்தைகளில் நம்பிக்கை வைக்க வேண்டும். அப்போது கடவுளை நாம் முழுமையாக அறிந்து கொள்ள முடியும். அவருடைய அன்பில்



நாம் நிலைத்திருக்க முடியும். திருச்சபை நம்மை ஒரு மிக முக்கியமான விடயத்தை சிந்திக்க அழைக்கிறது.

திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில், மீட்பை பற்றி பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது. "ஏனெனில், "இயேசு ஆண்டவர்" என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள்." இவ்வாறு உள்ளூர நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவர்; வாயார அறிக்கையிடுவோர் மீட்புப் பெறுவர். (உரோ. 10:910)

இயேசு ஆண்டவர், கடவுள் அவரை உயிர்த்தெழச் செய்தார் என்பதை உள்ளத்திலே நம்பி அதை வாயார அறிக்கையிடுவோர் மீட்பு பெறுவர்.

அப்படியானால் நாம் என்ன பாவம் செய்தாலும் விண்ணரசில் இடம் உண்டா? இதற்கு நற்செய்தி தெளிவான பதில் அளிக்கிறது. இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ வேண்டும். பணி வாழ்கையின் மூலம் இயேசுவின் சாட்சிகளாய் வாழ வேண்டும். இதுவே இயேசுவின் பாடுகளின் மூலம் பெற்ற மீட்பை காத்து கொள்ள சரியான வழி.

இவ்வுலகில் வாழும் போது எப்படி வாழ்ந்தால் இறை ஆட்சியில் நுழைய முடியும் எனபதை இயேசு தாமே தெளிவாகக் கூறுகிறார். ஒரே வாக்கியத்தில் சொல்ல வேண்டுமானால், "

இவ்வுலகில் வாழும் போது எப்படி வாழ்ந்தால் இறை ஆட்சியில் நுழைய முடியும் எனபதை இயேசு தாமே தெளிவாகக் கூறுகிறார். ஒரே வாக்கியத்தில் சொல்ல வேண்டுமானால், "தேவையில் இருக்கும் நம் சகோதர சகோதரிகளுக்கு நம்மாலான உதவிகளை செய்ய வேண்டும்".

எனக்கே ஆயிரம் துன்பம் இருக்க நான் எப்படி மற்றவருக்கு உதவி செய்ய முடியும்? என்று நினைக்கிறோமா? நம்மை சுற்றிப்பார்த்தால் நம்மை விட அதிக தேவையில் பலர் இருப்பதை காணலாம். சிறிது நேரம் அவர்களிடம் ஆறுதலாக பேசலாம். இயேசுவின் அன்பை எடுத்து சொல்லலாம். அவர்களுக்காக செபிக்கலாம். உதாரணமாக மருத்துவமனைகளில் சென்று பார்த்தால், ஆறுதல் மொழிக்காக ஏங்கும் பலரை காணலாம். யாரவது எனக்காக செபிக்க மாட்டார்களா? என்று ஏங்கும் உள்ளங்கள் எத்தனை?

பண தேவையைவிட, அன்புக்கும் ஆறுதலுக்கும் ஏங்கும் உள்ளங்கள் எத்தனை நம்மைசுற்றி? நாமே ஆறுதலுக்காக ஏங்கிய நேரங்கள் எத்தனை? எண்ணிப்பார்ப்போம். இறைவனின் சமாதானத் தூதுவர்களாக நாம் மாறுவோம்.

நாம் இரக்கத்தின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இயேசு மாட்சியுடன் வரும்போது அவர் நீதியின் அரசராய் செயல்படுவார். இறைவனிடம் திரும்பி வர, இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ நமக்கு அதுவரைதான் அவகாசம் உள்ளது.

அருட்பணி. ஜெ. தோமஸ் ரோஜர்

### இன்றைய புனிதர்

## அருளாளர் வின்செண்ட் குரோசி



வின்செண்ட் குரோசி கரித்தாஸ் என்ற பொது அமைப்பை ஆரம்பித்து சமூக பணிகளை தொடக்கி வைத்த அருளாளர்.

தன்னுடைய இளம் வயதிலேயே பள்ளியில் கற்கும்போது தன்னுடன் படித்த சக மாணவர்கள் வியக்கும் வகையில் அனைவரையும் சிரிக்கவைப்பார். தினமும் தவறாமல் ஆலயத்திற்கு சென்று, பங்குத்தந்தைக்கு உதவி செய்து வந்தார். தன் கல்வியை முடித்தப்பிறகு, 24 ஆம் வயதில் குருப்பட்டம் பெற்றார்.

பின்னர் தீர்க்கமுடியாத பிரச்சனைகள் நிறைந்த பங்கிற்கு அவர் அனுப்பப்பட்டார். அப்பங்கில் பல துன்பங்களை அனுபவித்தார். தகாத சொற்களால் அவமானப்படுத்தப்பட்டார்.

இருப்பினும் அவர் தன்னம்பிக்கையை இழக்காமல் அம்மக்களின் ஒற்றுமைக்காகவும், நலமான வாழ்வை சுமூகமான உறவைக் கொண்டு வருவதற்காகவும் அயராது உழைத்தார்.

அவரின் செயல்களைக் கண்டு அப்பங்கு மக்கள் அருட்தந்தைக்கு உதவினர். தங்களிடையே இருந்த எல்லாப் பிரச்சனைகளையும் அவர்களுக்குள்ளாகவே தீர்த்துக்கொண்டனர். பின்னர் வின்செண்ட் அம்மக்களின் ஒற்றுமையை தொடர்ந்து நிலைநிறுத்துவதற்காக கரித்தாஸ் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அவ்வமைப்பின் வழியாக சமூகப்பணிகளிலும் மக்களை ஈடுபடவைத்தார்.

அதன்பின்னர் இளைஞர்களுக்காக பல மன்றங்களையும் நிறுவி சிறப்பாக தன் மறைபணியை ஆற்றியுள்ளார். அவற்றின் ஊடாக பாரிய சமூகப் பணிகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எல்.எஸ்

# சென். ஜோசப் கல்லூரியின் உறுதிப்பூசுதல் அருட்சாதன நிகழ்வு



கொழும்பு, மருதானை புனித சூசையப்பர் கல்லூரியின் மாணவர்களுக்கான உறுதி பூசுதல் திருவருட்சாதன வழிபாட்டு நிகழ்வு அண்மையில் கொழும்பு உயர் மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு என்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. அதற்கான விசேட திருப்பலி ஆயரின் தலைமையில் நடைபெற்றதுடன் கல்லூரியின் ரெக்டர் அருட்தந்தை ரஞ்சித் அந்ராடி, அருட்தந்தையர்களான சமீஸ் அந்தனி, கமல் குமார, ரெஜினோல்ட் சபரமாது, ஆசிரியை நித்திய கல்யாணி உள்ளிட்ட ஆசிரியைகள் மற்றும் ஆசிரியர்களின் பங்களிப்புடன் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. (படங்கள் உதவி: எல்.செல்வா)

# இயேசு பறைசாற்றும் வெளிவேடக்காரர்கள்

பொதுக்காலத்தின் 31ஆம் ஞாயிறை கடந்த 5ஆம் திகதி நாம் நினைவு கூர்ந்தோம். அன்றைய வாசகங்கள் தங்களை மக்களின் தலைவர்களாகக் காட்டிக்கொள்பவர்கள் எப்படிப்பட்ட எடுத்துக்காட்டான வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும் என்பதை நமக்குக் கற்பிக்கின்றன.

இஸ்ரயேல் மக்களை ஆண்ட தலைவர்களிடம் விளங்கியதை அன்றைய முதல் வாசகம் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. "நீங்களோ நெறி தவறி நடந்தீர்கள். உங்கள் போதனையால் பலரை இடறி விழச்செய்தீர்கள். லேவியோடு நான் செய்த உடன்படிக்கையைப் பாழாக்கிவிட்டீர்கள்." என்று சொல்கிறார் படைகளின் ஆண்டவர். "ஆதலால் நானும் உங்களை மக்கள் அனைவர் முன்னிலையிலும் இழிவுக்கும் தாழ்வுக்கும் ஆளாக்குவேன்; ஏனெனில், நீங்கள் என் வழிகளைப் பின்பற்றி ஒழுகவில்லை; உங்கள் போதனையில் ஓரவஞ்சனை காட்டினீர்கள்."

என்று வெளிப்படும் இறை தந்தையின் கடுமையான வார்த்தைகள் குருக்களின் இறை நம்பிக்கையற்ற வாழ்வையும் கடவுளுக்கு எதிராக அவர்கள் இழைத்த துரோகச் செயல்களையும் எடுத்துக்காட்டுகின்றன.

ஞாயிறு நற்செய்தி வாசகத்தில் மக்கள் மத்தியில் தங்களைத் தலைவர்களாகக் காட்டிக்கொண்டு எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழாத மறைநூல் அறிஞரையும், பரிசேயரையும் கடுமையாகக் கண்டிக்கிறார் இயேசு. "மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோசேயின் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர். ஆகவே அவர்கள் என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள். ஆனால் அவர்கள் செய்வதுபோல



நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்கள் சொல்வார்கள்; செயலில் காட்ட மாட்டார்கள். சுமத்தற்கரிய பளுவான சுமைகளைக் கட்டி மக்களின் தோளில் அவர்கள் வைக்கிறார்கள்; ஆனால் அவர்கள் தங்கள் விரலால் தொட்டு அசைக்கக் கூட முன்வரமாட்டார்கள். தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்க வேண்டும் என்றே அவர்கள் செய்கிறார்கள்; தங்கள் மறைநூல் வாசகப் பட்டைகளை அகலமாக்குகிறார்கள்; அங்கியின் குஞ்சங்களைப் பெரிதாக்குகிறார்கள். விருந்துகளில் முதன்மையான இடங்களையும் தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் விரும்புகின்றார்கள்; சந்தைவெளிகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதையும் ரபி என அழைப்பதையும் விரும்புகிறார்கள்" என்று இயேசு கூறும் வார்த்தைகள்,

இறை தந்தை வெளிப்படுத்திய கடுமையான வார்த்தைகளை ஒத்திருக்கின்றன.

இயேசு ஆண்டவர் மறைநூல் அறிஞரையும், பரிசேயரையும் கண்டிப்பதை மிக நீண்டதாகக் கொடுத்திருக்கின்றார் மத்தேயு நற்செய்தியாளார்.

அதாவது 1 முதல் 36 வசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் முதல் 12 வசனங்களே இன்றைய நற்செய்தியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விருவரின் தவறான வாழ்வியல் நெறிமுறைகளையும், பொய்யும் புரட்டும் நிறைந்த போலியான வாழ்வையும் மக்களுக்கு எடுத்துக்காட்டும் இயேசு, அவர்கள் கூறுவது அனைத்தையும் செய்யுங்கள் என்று கூறுகின்றார்.

அப்படியென்றால் என்ன அர்த்தம்? இயேசு கூறும் இறையியல் கருத்துக்கள் பரிசேயரின் இறையியல் கருத்துக்களுடன் ஒத்திருந்தன. அவர்கள் வழிநின்று பழைய உடன்படிக்கையின் 39 நூல்களையும் இயேசு ஏற்றுக்கொண்டிருந்தார். அவர்களின் மரபு போதனைகளில் காணப்பட்ட திருச்சட்டச் சுருக்கமும், அவர்கள் போதித்து வந்த உயிர்த்தெழுதல் பற்றிய நம்பிக்கையும் அவருக்கு ஏற்புடையதாக இருந்தன.

இதுபோல இன்னும் பல போதனைகளிலும் கருத்துக்களிலும் இயேசுவின் கருத்துக்கள் பரிசேயரின் கருத்துக்களையே பிரதிபலித்தன. ஆகவே, இறையியல் போதனைகளைப் பொறுத்த வரையில் பரிசேயர்களைப் பின்பற்றுங்கள், ஆனால் அறநெறி போதனைகளைப் பொறுத்தவரையில் அவர்களின் வழிகளை ஏற்கவேண்டாம் என்பது இயேசுவின் கருத்தாக இங்கு ஒலிக்கின்றது. அதனால்தான் குருட்டு வழிகாட்டிகளே என்கின்றார். அத்துடன், வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! என்ற வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்தி அவர்களைக் கடுமையாகச் சாடுகின்றார் இயேசு.

இன்றைய கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் விளம்பரம் தேடும் கிறிஸ்தவர்களாகவே இருக்கின்றனர். எல்லாவற்றிலும் தங்கள் பெயர் முதலில் இருக்கவேண்டும் என்று விரும்புவதைப் பார்க்கின்றோம். மேலும் கல்வெட்டுகளில் தனது பெயரோ அல்லது குடும்ப பெயரோ பொறிக்கப்படுவதாக இருந்தால் எத்தனை பெரிய தொகையையும் கொடுக்க முன்வருகின்றனர் பலர்.

இல்லையென்றால், நமக்கென்னவென்று அப்படியே ஒதுங்கிக்கொள்கின்றனர். ஆனால் அதேவேளையில், எங்கள் பெயரை அறிவிக்க வேண்டாம் என்று கூறி உதவிசெய்யும் எத்தனையோ கிறிஸ்தவர்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றனர். இன்றையத் துறவற வாழ்விலும் கூட பல துறவியர் தான் ஒரு அருள்பணியாளர், அருள் சகோதரி என்பதைத் தாண்டி, சபைத்தலைவர், மாநிலத்தலைவர், இல்லத்தலைவர், தாளாளர், தலைமையாசிரியர், முனைவர், ஒருங்கிணைப்பாளர், முதன்மைகுரு, மறைவட்ட குரு என்ற பட்டங்களில் எதாவது ஒன்றைத் தனதாக்கிக் கொள்ள பாடாய்ப்படுகின்றனர். அதாவது இவ்வுலகம் தரும் வெற்றுப்புகழ்ச்சிகளிலும், ஆடம்பர இன்பங்களிலும் தங்களைத் தாங்களே முற்றிலும் கரைத்துக்கொள்கின்றனர்.

இன்றைய உலகின் மக்கள் விரும்புவது வார்த்தை ஜாலங்கள் நிறைந்த தலைவர்களை அல்ல மாறாக, தங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக் மக்களுக்காக அர்பணிக்கக் கூடியவர்களைத்தான். நன்கு விளைந்த பயிர்கள்தாம் தலைசாயும் என்பார்கள். அவ்வாறே, அறிவிலும், அனுபவத்திலும், மனதிலும் பக்குவப்பட்ட தலைவர்கள்தாம் தாழ்மையான மனதுடன் தலைநிமிர்ந்து வாழ்வர். இதனைத்தான் இயேசுவும், "தம்மைத்தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப்பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர்" என்று நற்செய்தியின் இறுதியில் கூறுவதைக் காண்கின்றோம். ஆகவே, நாமும் பணிவும் துணிவும் கொண்டவர்களாக முன்மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து இயேசுவுக்குச் சான்று பகரும் உண்மைத் தலைவர்களாக ஒளிர்வோம்.

அருட்பணி சூசைமாணிக்கம்

## 2024: கல்வித்துறை பாரிய...

இதனைத் தெரிவித்தார். இங்கு உரையாற்றிய அமைச்சர்:

எதிர்வரும் ஆண்டு மஹிந்த ராஜபக்ச கல்லூரிக்கும் நாட்டின் தேசிய கல்விக்கும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் ஆண்டாக அமையும். இலங்கைக்கான கல்வியை மாணவர்களை மையமாகக் கொண்ட கல்வி முறையாக மாற்றுவதற்கான, பத்தாண்டு திட்டத்திற்கு கடந்த வாரம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதன்படி இதுவரை நடைபெற்ற பரீட்சைகள் மத்திய மற்றும் வழமையான கல்வி முறைக்கு பதிலாக நவீன தொழில்நுட்ப முறைகள் மற்றும் கல்வி முறைகளுக்கு ஏற்ப உலகிற்கு வளமான மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதற்கான அங்கீகாரமே வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை உப செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவில் நானும் அங்கம் வகித்தேன். மேலும் அக்குழுவில் விசேட நிபுணர்களான 25 அங்கத்தவர்கள் முன்வைத்த யோசனைகளை கருத்தில் கொண்டு 2024 ஆம் ஆண்டு கல்வி முறையில் பாரிய மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது. நாட்டுக்கு வருடந்தோறும் பெருமளவிலானோர் சுற்றுலா வரும் நாடாகவும், ரஷ்ய பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு அதிகளவு புலமைப் பரிசுகளை வழங்கும் நாடாகவும் ரஷ்யா காணப்படுகிறது.இந்நிலையில், ரஷ்யாவுடனான தொடர்பு மேலும் வலுவடையும் என நான் நம்புகிறேன். மேலும், ஹோமாகம மஹிந்த ராஜபக்ச வித்தியாலயத்தை அபிவிருத்தி செய்வதற்காக பல திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. ஹோமாகம பிட்டிபன பிரதேசத்தில் தற்போது இலங்கையின் ஒரே ஒரு பசுமைப் பல்கலைக்கழகமான NSBM இல் பெருமளவு மாணவர்கள் உயர்கல்வியை கற்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். ரஷ்ய அரசாங்கம் மற்றும் ரஷ்ய கல்வி அமைச்சு என்பன எமது மாணவர்களுக்கு கல்வி சுற்றுலாவுக்கான ஏற்பாடுகளை செய்ததற்கமைய மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலய மாணவ மாணவிகள் 7 பேருக்கும், ஆசிரியர் இருவர் மற்றும் பெற்றோர்களின் பிரதிநிதி ஒருவருக்கும் ரஷ்யாவில் மூன்று மாத கால கல்வி சுற்றுலாவுக்கான விசேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பந்துல குணவர்தனவின் வேண்டுகோளுக்கிணங்கவே இவை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும், கல்லூரி நூலகத்திற்கு ரஷ்ய கல்வி புத்தகங்களின் தொகுப்பும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டதுடன், கல்லூரி அதிபரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அடிக்கல்லும் நடப்பட்டது.

## 48 மணி நேரத்துக்குள்...

இத்திட்டம் ஆரம்பித்து 48 மணி நேரத்தில் முன்னூறு மில்லியனை எட்டியுள்ளது.

இதில், சுமார் ஐந்து இலட்சத்து 16 ஆயிரம் நன்கொடையாளர்கள் பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர். இலங்கையர்களும் இதற்கான பங்களிப்புக்களை செய்துள்ளனர்.

சவூதியிலுள்ள பல கம்பனிகள் மில்லியன் கணக்கான நிதியை வழங்கியுள்ளதாகவும் அம்ஜத் ராசிக் தெரிவித்தார்.

## அத்தியாவசிய பொருட்களின்...

குறைந்தன. மக்களுக்கு மேலும் நிவாரணம் வழங்கும் வகையில் எதிர்வரும் பண்டிகை சமயத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாடு சுமுகமான நிலைக்கு திரும்பி வரும் நிலையில், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரிக்குமாறும் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.இதே வேளை, எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றின் விலைகளை குறைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

## பெரும்போக நெல் உற்பத்திக்கு...

நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து விவசாயிகளுக்கும் மேற்படி நிவாரண நிதி வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. இந்நிவாரணங்களுக்காக அரசாங்கம் மொத்தமாக 1200 கோடி ரூபாவை செலவிடவுள்ளது.

## ம. காங்கிரஸிலிருந்து அலிசப்ரி...

தராசுச் சின்னத்தில் அலிசப்ரி ரஹீம் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. இதற்கிணங்க, இவரது பதவி விலக்கல் குறித்த கடிதம் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லாவுக்கும், அலிசப்ரி ரஹீமுக்கும் தனித்தனியாக அனுப்பப்பட்டுள்ளது. கடிதத்தைப் பொறுப்பேற்றுள்ள முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் இதுகுறித்த நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்ததாகவும் கட்சியின் தவிசாளரான முன்னாள் பிரதியமைச்சர் அமீர்அலி தெரிவித்தார்.

## பாரிய மண்சரிவு அனர்த்தம்...

நிலையில், குறித்த பகுதியிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களின் வருகை மிகக் குறைவாக காணப்படுகிறது.

மேலும், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் அந்தப் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும் அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

## அரிசியில் உற்பத்தியில் தன்னிறைவு...

நெல் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்துள்ள நிலையிலுங்கூட, நாடளாவிய ரீதியில் உள்ள சகல மாவட்டங்களிலும் ஒரே மாதிரியான நெல் அறுவடையை பெற முடியவில்லை. நாட்டில், நெல்லின் சராசரி விளைச்சல் ஹெக்டேருக்கு 2.5 முதல் 4.5 மெட்ரிக் தொன் நெல் வரை மாறுபடும். மேலும், தென்கிழக்கு ஆசியாவிலேயே ஒரு ஹெக்டேருக்கு அதிக நெல் விளைச்சல் என நாட்டின் சில மாவட்டங்களிலுள்ள விவசாயிகள் 11 மெட்ரிக் தொன்கள் வரை பதிவு செய்துள்ளனர். நாட்டின் நெற்செய்கையின் விளைச்சலை அதிகரிப்பதுடன், அரிசியின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் இலங்கை அரிசிக்கான சர்வதேச தேவையை உயர்வாக பேணுவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.எனவே, விவசாயிகளுக்கு நெல் விளைச்சலை அதிகரிக்க புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் அதேவேளை, விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். இதற்குத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அரசாங்கம் வழங்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். தற்போது இலங்கையில் நெல் வயல்களின் எண்ணிக்கை 800,000 ஹெக்டேர்களாகும். இரண்டு பருவங்களில் பயிரிடப்படும் நெல்லின் அளவு ஆண்டுக்கு 1.3 மில்லியன் ஹெக்டேயராகும். நெல்லின் மொத்த விளைச்சல் சுமார் 5.2 மில்லியன் மெட்ரிக் தொன்னாக உள்ளது. இதனால்,உற்பத்தி செய்யக்கூடிய அரிசியின் அளவு 3.1 மில்லியன் மெட்ரிக் தொன் ஆகும். அதேவேளை 2.4 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி நாட்டில் வருடாந்தம் நுகர்வுக்கு தேவைப்படுகிறது. நாட்டில் போதியளவு அரிசியிருந்த போதிலும், அரசாங்கத்தின் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, குறைந்த விலையில் அரிசியை பெறுவதற்கு இடமளிப்பது அவசியம். இந்நோக்கில் அரிசி உற்பத்தியை அதிகரிப்பதே அரசாங்கத்தின் இலக்காகும்.

## போதையிலிருந்த பெண்கள்...

பொலிஸ் கான்ஸ்டபிளைத் தாக்கியதாக கூறப்படும் இரு பெண்களையும் கைது செய்த பொலிஸார், அவர்களது காரையும் கைப்பற்றினர். கொழும்பு 13 மற்றும் கொழும்பு 14 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 30 மற்றும் 43 வயதுடைய இரண்டு பெண்களே சந்தேகத்தின்பேரில், கைதாகியுள்ளனர். கொழும்பு மாநகர போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் இந்த பொலிஸ் கான்ஸ்டபிள், மேலும் பல பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் இணைந்து மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவராவார். இவ்வாறு பணிபுரிந்துவிட்டு,பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தபோதே, இப்பெண்கள் இவரைத் தாக்கியுள்ளனர்.

## சுமந்திரனின் கருத்துக்கு...

சேனாதிராஜா மற்றும் அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா,சம்பந்தன் ஆகியோர் அண்மையில் சந்தித்து பேசியிருந்தனர். இச்சந்திப்பிலே, இரா,சம்பந்தன் தனது மனவருத்தத்தை தெரிவித்துள்ளார்.

இரா.சம்பந்தன் பதவி விலக வேண்டுமென சுமந்திரன் வெளியிட்ட கருத்துக்களையடுத்து,தன்னை சந்திக்குமாறு மாவை சேனாதிராஜாவுக்கு சுமந்திரன் அழைப்பு விடுத்திருந்தார்.

இதையடுத்தே,இவ்விருவரும் சந்திப்புக்களில் ஈடுபட்டனர். முதலாவது சந்திப்பில் சுமந்திரனின் கருத்துக்கள் தொடர்பில் மனவருத்தத்தை வெளியிட்ட சமபந்தன், இவ்விடயம் சம்பந்தமாக விரிவான கலந்துரையாடலை மேற்கொள்ள உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும்,இதுகுறித்து உறுதியான தீர்மானம் எடுக்கலாமென்ற தொனிப்படவும் சம்பந்தன் கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

## லாஃப்ஸ் எரிவாயு விலைகளில்...

முடிவு செய்யப்பட்டுள்ளதாக லாஃப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் நிறைவேற்று குழு அதிகாரி நிரோஷன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, வாடிக்கையாளர்கள் 12.5 கிலோ கிராம் எடையுள்ள எரிவாயு சிலிண்டரை 3,985 ரூபாவிற்கும், ஐந்து கிலோ எரிவாயு சிலிண்டரை 1,595 ரூபாவிற்கும் தொடர்ந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் அந்நிறுவனம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.இதேவேளை, நவம்பர் 04 நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் லிட்ரோ எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய,12 கிலோ கிராம் எடையுள்ள லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 95 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. இதன் புதிய விலை 3,565 ரூபாவாகவுள்ளது. மேலும், 05 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 38 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 1,431 ரூபாவாக புதிய விலை உள்ளது.

## பேக்கரி உற்பத்திகளின்...

நிலைநிறுத்துவதற்கு தாங்கள் ஏற்கனவே போராடி வருவதாகவும், எனவே பேக்கரி பொருட்களின் விலையை உயர்த்தும் எண்ணம் இல்லை எனவும் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

எரிவாயு, எரிபொருள், மின்சாரம் மற்றும் மூலப்பொருட்களின் விலைகளின் தொடர்ச்சியான அதிகரிப்பு, உற்பத்தி செலவை உயர்த்தியுள்ளதால், தொழில்துறையை ஆதரிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை மேலும் அதிகரிப்பது, மக்களின் கொள்வனவு ஆற்றலை குறைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். இவற்றைக் கருத்திற்கொண்டே, பேக்கரின் உற்பத்தி பொருட்களின் விலைகளை அதிகரிக்காது பழைய விலைகளைப் பேணத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கிழக்கில் 499 அதிபர்களுக்கு...

தொண்டமான், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான கபில அத்துகோரல,வீரசிங்க, அதாவுல்லா, அலிஸாஹிர்மௌலானா,பிரதம செயலாளர் ஆர்,எம்,கே,எஸ், ரத்நாயக்க, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திசாநாயக்க உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நூறு மீற்றர் தூரத்தை...

இந்த சாதனையை படைத்துள்ளார். இந்நிகழ்வு, பலாங்கொடை விளையாட்டு மைதானத்தில் இன்று இடம்பெற்றிருந்தது.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கை கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ நாகவாணி ராஜா, இரத்தினபுரி மாவட்டத் தலைவர் பிரவீனா பாரதி உள்ளிட்டோர் இச்சாதனையை கண்காணித்து உறுதிப்படுத்தினர்.

## சீனாவிலிருந்து கடலுணவு...

கையளித்தனர். யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே, இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் இதனை தெரிவித்தார். இதுபற்றி சீன தூதுவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடியின்போது இலங்கையின் பொருளாதாரதாதை உயர்த்துவதற்கு சீனாவே முதன்முறையாக கை கொடுத்தது. எதிர்காலத்திலும் இவ்வாறான உதவிகளை சீனா செய்யவுள்ளது. இன்னும், 15 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகளை சீனா வழங்கவுள்ளது. இவற்றில், 5 மில்லியன் உணவு பொருட்களாகவும் 5 மில்லியன் மீனவர்களுக்காகவும் 5 மில்லியன் வீட்டு திட்டத்திற்கும் வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனா வந்தபோது இலங்கையின் கடலுணவுகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டது.

சீனாவிலிருந்து இலங்கைக்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது. விசேடமாக வட மாகாணத்திற்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது.

சீனா உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார நாடு. அங்கு மிகப்பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது. உங்களை இதற்கே வரவேற்கிறோம்.

இலங்கையின் வட மாகாணத்தில் முதலிட சீன தொழிற்றுறையினர் மற்றும் முதலீட்டாளர்கள் ஆர்வமாக உள்ளனர். வடக்கு மக்களும் இதனை வரவேற்க தயாராகவுள்ளதாகவே நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

## அத்தியவசிய மருந்துப்பொருட்கள்...

ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். இதற்கு மேலதிகமாக எதிர்வரும் நாட்களில் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உதவிகள், பங்களாதேஷிலிருந்து நாட்டுக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் மற்றும் சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் , இவ்விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன. நாட்டில் தற்போது நிலவும் மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், பங்களாதேஷ் அரசாங்கத்துடன் நீண்ட கால வேலைத்திட்டத்தை தயாரிப்பதன் அவசியம் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## 2024 இல், கல்வி அமைச்சுக்கு...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (06) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே, கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த,

2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் புதிய தவணை ஆரம்பிக்கப்படவுள்ளது. அடுத்த வருடத்திலிருந்து, தரம் ஒன்று முதல் தரம் 11 வரையிலான பாடத்திட்டத்தை அதே வருடத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

மாகாணப் பாடசாலைகளின் முதலீட்டுச் செலவுகள் மற்றும் நிர்வாக செலவுகள் அனைத்தும் மாகாண சபைகளின் கீழ் உள்ள கல்வி அமைச்சினாலேயே மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இந்நிதிகளையும் ஒன்று சேர்த்தே அரசாங்கம் கல்விக்காக ஒதுக்கும் முழுமையான தொகையைக் கணக்கிட வேண்டும்.

“நாட்டில் ஏற்பட்ட பல்வேறு சிக்கல்களால் புதிய தவணைக்காக இவ்வருடம் மார்ச்சில், பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டியிருந்தது. இவ்வாறான தாமதங்களைக் குறைத்து 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் புதிய தவணை ஆரம்பிக்கப்படும். அதன்படி, அடுத்த வருடத்தில் இருந்து, தரம் ஒன்று முதல் தரம் 11 வரையிலான பாடத்திட்டத்தை அதே வருடத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம். இதன் ஊடாக 2025 ஆம் ஆண்டு கல்வியாண்டை வழமை போன்று நடத்த முடியும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் உயர்தரப் பரீட்சையை நடத்த முடியுமென நினைக்கின்றேன். நேரத்தை முறையாக முகாமைத்துவம் செய்து தற்போது தாமதமாக நடத்தப்படும் அனைத்துப் பரீட்சைகளும் கட்டம், கட்டமாக நடத்தப்படும்.

இதன் மூலம் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டாகும் போது குறித்த வருடத்திற்குரிய பரீட்சைகளை அதே வருடத்தில் நடத்தி முடிக்க அவசியமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

அதேபோன்று, 2024 ஆம் ஆண்டு மே மாதத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது நடத்தி முடிக்கப்பட்ட சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இம்மாதம் மூன்றாவது வாரத்தில் வெளியிடப்படவுள்ளது. கல்வி நிர்வாக சேவையில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சைகளும் நிறைவடைந்துள்ளன. விரைவாக நேர்முகத் தேர்வுகளை நடத்தி அவர்களுக்கான நியமனங்களை வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

மேலும், ஆசிரியர் கல்வியியலாளர் சேவை, ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் ஆசிரியர் வெற்றிடங்கள் உட்பட கல்வி சேவையில் நிலவும் அனைத்து வெற்றிடங்களையும் அடுத்த வருடம் பாடசாலைகளை ஆரம்பிக்க முன்னர் நிரப்புவதற்கு அவசியமான பணிகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## தமிழரசு கட்சியின் 17ஆவது...

உட்பட புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். வவுனியாவில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நேற்று (05.11.2023) நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கட்சியின் அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டம் வரும் ஜனவரி 20 இல், நடைபெறும்போது கட்சித் தலைவர் உட்பட புதிய நிர்வாகிகள் தேர்வுக்கான நியமனங்கள் பற்றி ஆராயப்படும். இதில், தேர்தலின்றி, இணக்கமான தீர்வுகளை ஏற்படுத்த முயற்சிகள் மற்றும் பேச்சுக்களும் இடம்பெறவுள்ளன. இருந்தபோதும், மறுநாள் 21 ஆம் திகதி கட்சியின் பொதுக்குழு திருகோணமலையில் கூடி, புதிய நிர்வாகிகள் தெரிவு மற்றும் முக்கிய தீர்மானங்கள் குறித்து முடிவுகள் எடுக்கப்படவுள்ளன. இணக்கப்பாடுகள் எட்டப்படாவிடின்,தேர்தல் மூலம் தெரிவுகள் இடம்பறெவுள்ளன. இதன் பின்னர் ஜனவரி 27இல், கட்சியின் இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி மாநாடுகள் திருகோணமலையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு...

இதற்கிணங்க கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

அதற்கமைய இந்த சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் தலைமறைவாவதற்கு இடமளித்த மற்றும் நிதி அனுசரணைகளை பெற்றுக்கொடுத்துள்ள இரண்டு சந்தேக நபர்கள் தம்புள்ளை பெல்வெஹேர பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்கள் 38 – 40 வயதுடையவர்களாவர் அந்த சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

## இன்றைய பலன்கள்



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

**மேஷம்:**

புனித பயணங்களால் விரையங்கள் ஏற்படும். கைகூடுவது போல் இருந்த கல்யாண முயற்சி கடைசி நேரத்தில் கைநழுவி செல்லலாம்.

**ரிஷபம்:**

உத்தியோகத்தை பொருத்தவரை பாதிப்பு ஏற்படாது. உங்களுக்கு இடையூறு செய்தவர்கள் விலகுவர். மேலதிகாரிகள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும்.

**மிதுனம்:**

உடலில் தெம்பும் உற்சாகமும் குறையும். திடீர் திடீரென வரும் விரயங்கள் மனதை வாட வைக்கும். செய்யும் முயற்சிகளில் பலன் கிடைப்பது அரிது.

**கடகம்:**

பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் அரிய பல காரியங்களை செய்து முடிப்பீர்கள். கட்டிய வீட்டை பழுது பார்ப்பதிலும் கவனம் செலுத்துவீர்கள்.

**சிம்மம்:**

புதிய யுக்திகளை கையாண்டு வெற்றி பெறும் சூழ்நிலை உண்டு. உடன்பிறப்புக்களின் குணத்தில் மாற்றம் ஏற்படலாம். வழக்குகளில் திடீர் திருப்பங்கள் வரலாம்.

**கன்னி:**

குடும்ப ஒற்றுமை குறையலாம் வாக்குவாதங்களை தவிர்க்கவும். பிள்ளைகள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம்தான்.

**துலாம்:**

என்றைக்கோ வாங்கி போட்ட இடம் பல மடங்கு விலை உயர்ந்து விற்பனையாகி மகிழ்ச்சியை தரும். குறுக்கீடு சக்திகள் அகலும். கொடுக்கல் வாங்கல்கள் சரள நிலைக்கு வரும்.

**விருச்சிகம்:**

வாழ்க்கைத் துணை வலியே கொஞ்சம் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம் இது. உத்தியோகம் தொடர்பாக வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகள் ஆச்சரியப்பட வைக்கும்.

**தனுசு:**

உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்களை மேலதிகாரிகள் ஏற்றுக் கொள்வர். வீடு வாகனம் வாங்க கடன் உதவி கேட்டு விண்ணப்பித்திருந்தால் அது கைகூடும்.

**மகரம்:**

தொழிலில் கூட்டாளிகளுடன் பிரச்சினைகள் உருவாகலாம். பூர்வீக சொத்து பிரச்சினை மீண்டும் தலைதூக்கும். மனப்பயம் அதிகரிக்கும்.

**கும்பம்:**

வாகன பழுதுகளின் காரணமாக வாட்டம் ஏற்படும். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ள இயலாமல் போகலாம். கவனம் தேவைப்படும் நேரமிது.

**மீனம்:**

பயணங்கள் பலன் தரும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்து இணைவர்.

## ஏழு இலட்சம் பேர்களின்...

இவர்கள் மின் கட்டணங்களை செலுத்தாதிருந்துள்ளனர்.

ஆகஸ்ட் மாதத்திலேயே, அதிகளவான மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார். இந்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 20,474 ஆகும். ஜூலை மாதத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 481 நுகர்வோரின் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது. இதேவேளை, ஒரு இலட்சத்து 6106 பாவனையாளர்களின்மின் விநியோகங்கள் ஒக்டோபரில் துண்டிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## கடற்றொழிலாளர்களுக்கு...

ஜப்பான் தூதுவர், இது குறித்து அமைச்சருடன் நீண்ட கலந்துரையாடலை நடத்தினார். இதில் தூதரக அதிகாரிகள், அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர் மற்றும் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பாராளுமன்ற கௌரவத்தை...

மேற்கொள்ளப்பட்டுள்ள ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது. மேற்படி விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையிலான குழு நேற்று கூடியுள்ளதுடன், மேற்படி மூவருக்குமிடையில் இடம்பெற்றுள்ள சம்பவம் தொடர்பில் மேலும் விசாரணைகளை மேற்கொள்வதற்காக நாளை மறுதினம் 9ஆம் திகதி மீண்டும் கூடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் மேற்படி குழுவினால் தயாரிக்கப்படும் அறிக்கையை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கவுள்ளதாகவும் அந்த குழுவின் தலைவர் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். பாராளுமன்ற கட்டிடத்திற்குள் பகிரங்கமாக ஒருவரை ஒருவர் தூற்றியமை, தள்ளி விடுகின்றமை, மோதல்களை வீடியோ செய்தமை உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விசாரணைக் குழு தீவிர கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் பாராளுமன்றத்தின் கௌரவம், பாராளுமன்ற உறுப்பினர்களின் கௌரவம் பாதுகாக்கப்படும் வகையிலும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதே இந்த குழுவின் பிரதான நோக்கம் என்றும் பிரதி சபாநாயகர் இதன் போது தெரிவித்துள்ளார்.

## கிரிக்கெட் நிறுவனத்தின்...

குறித்த வர்த்தமானி தொடர்பில் ஆராய்வதற்காக குழு ஒன்றை நியமிக்க அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க அந்தக் குழு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த குழுவின் உறுப்பினர்களாக அமைச்சர்கள் டிரான் அலஸ், மனுஷ நாணயக்கார, கஞ்சன விஜேசேகர ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 6.30 மணியளவில் அமைச்சரவைக் கூட்டம் நிறைவடைந்துள்ள நிலையில் அதனையடுத்து ஆளும் கட்சியின் குழு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்திலும் மேற்படி விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, இலங்கை கிரிக்கெட் நிர்வாக குழு இடைநிறுத்தப்பட்டு ஏழு பேர் கொண்ட புதிய இடைக்கால குழு நியமிக்கப்பட்டதாக விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நேற்றுக் காலை அறிவித்திருந்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான அர்ஜுண ரணதுங்க தலைமையில் இந்த இடைக்கால நிர்வாக குழு நியமிக்கப்பட்டதாகவும் அந்த குழுவில் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர்களான எஸ். ஐ. இமாம் ரோஹினி மாரசிங்க, ஐரங்கனி பெரேரா, கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் உபாலி தர்மதாச, சட்டத்தரணி ரக்கித ராஜபக்ச, பட்டயக் கணக்காளர் ஹிஷாம் ஜமால்டீன் ஆகியோர் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி அந்த புதிய இடைக்கால குழு நியமனத்துடன் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா தலைமையிலான நிர்வாக சபையின் செயல்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# இன நல்லிணக்கத்தை வலியுறுத்தி மாத்தளையில் வாணி விழா



**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

இனங்களுக்கிடையே மத நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் நோக்கில் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நேற்று முன்தினம் (05) வாணி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்து கலாசார திணைக்களத்தின் மாத்தளை மாவட்ட காரியாலயத்தின் அனுசரணையுடன் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலன சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க ஆகிய சர்வமத தலைவர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். இதன் போது சகல மதங்களையும் பிரதிநிதிப்படுத்தும் அறநெறி 200 பாடசாலை மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் இங்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மதங்களுக்கு இடையே நல்லிணக்கம் தொடர்பாக மாத்தளை மாவட்ட தகவல் திணைக்கள காரியாலயத்தின் அதிகாரி நிஷாந்தி நிரோசனி விசேட சொற்பொழிவாற்றினார்.

மாத்தளை மாவட்டத்திலுள்ள அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் உட்பட ஆலய அறங்காவலர் சபை தலைவர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கொழும்பு – புத்தளம் ரயில் சேவைகள் நேற்று பாதிப்பு; ரயில் பாதைகளில் வெள்ளம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



கொழும்பு - புத்தளம் ரயில் சேவைகள் நேற்று திங்கட்கிழமை முதல் பங்கதெனிய வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

புத்தளம் கொழும்பு ரயில் மார்க்கத்தின் பத்துளு ஓயா பிரதேசம் வெள்ளத்தினால் மூழ்கியதன் காரணமாகவே மேற்படி கொழும்பு புத்தளம் வரையிலான ரயில் சேவைகள் பங்கதெனிய ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பத்துளு ஓயா ரயில் நிலையம் மற்றும் ரயில் தண்டவாளம் அதனை அண்டிய ரயில் தண்டவாளம் பிரதான வீதி உள்ளிட்ட பகுதிகளில் வெள்ள நீர் காணப்படுகிறது.

குறித்த பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் குறைவடைந்தால் ரயில் சேவைகள் வழமை போன்று இடம்பெறும் என புத்தளம் புகையிரத நிலையத்தின் கடமை நேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

புத்தளத்தில் இருந்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் வரை நாளாந்தம் நான்கு தடவைகள் ரயில் சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

புத்தளத்தில் இருந்து அதிகாலை 4 மணிக்கும், காலை 7.40 மற்றும் 11.55 மாலை 5.10 மணியளவில் குறித்த ரயில் சேவைகள் கொழும்பு நோக்கி பயணத்தை மேற்கொள்கின்றன.

இவ்வாறு திடீரென ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டமையால் நாளாந்தம் ரயிலில் போக்குவரத்து செய்யும் புத்தளம் , பாலாவி, மதுரங்குளி மற்றும் முந்தல் உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2023.11.05
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5289 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,024,168.00
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 7 4 6 3 6 1

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3531 — சீட்டிழுப்பு திகதி 2023.11.05 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,924,324.40
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 12 43 55 74 — விசேட எழுத்து J — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 29736

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1637 — 2023.11.05 — 78238 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 413,288,260.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 09 — வெற்றி இலக்கங்கள் 10 11 12 52
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 லக்கி** — திகதி 2023.11.05 — சீட்டிழுப்பு இலக்கம் 0115
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 9 5 0 0 1 1
L7 இலக்கம் 2 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 12,261,233.36

**ராசி சுப பலன்** — திகதி 2023.11.05 — சீட்டிழுப்பு இலக்கம் 598 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,386,892.40
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 15 32 35 43 — விசேட இலக்கினம் ரிஷபம்

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1319 — 2023.11.05 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,823,919.20
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 01 46 53 58 — விசேட எழுத்து V — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 11099


# தேசிய விஞ்ஞானக் கண்காட்சி நாளை 8ஆம் திகதி ஆரம்பம்

சர்வதேச விஞ்ஞான தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 8, 9 ,10 ஆகிய தினங்களில் அறிவியல் வலுவூட்டல் மூலம் சுபீட்சத்தை நோக்கி (Prosperity through Scientific Empowerment) என்னும் தொனிப் பொருளில் தேசிய விஞ்ஞான கண்காட்சி 2023 தேசிய அருங்காட்சியக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் கல்வி அமைச்சின் ஆய்வுகள் மற்றும் நவீன உற்பத்திகள் பிரிவால் நவீன விஞ்ஞான கொள்கை மற்றும் தொழில்நுட்பத்தை சிறுவர் சமுதாயம் மற்றும் மக்களிடையே பிரபல்யப் படுத்தும் நோக்கில் இந்த விஞ்ஞான கண்காட்சி நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சு, அமைச்சுடன் இணைந்த நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பலவற்றின் பங்களிப்புடன் பாடசாலைகளில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்காக விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் நவீன துறை தொடர்பான நிகழ்ச்சிகள் பல இந்த தேசிய விஞ்ஞான கண்காட்சிக்கு இணைந்ததாக நடத்தப்படவுள்ளன.


## சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு**

KU-4209 TOYOTA PRIUS, 2011, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 071366

**111 ஹொண்டா கார்கள் விற்பனைக்கு**

CAL-8855 HONDA GP5, 2014, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 071332

**118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

65-3494 TOYOTA LAND CRUISER, 1996, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 071343

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

AAH-4068 BAJAJ, 2013, ABI-5636 BAJAJ, 2015, ABO -2604 B AJAJ, 201 6, THREE W HEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810 . 071339

BGG-246 3 BAJAJ, A VENGER STREE T 2017, MOTOR C YCLE கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711210 810 . 071353

BHK-503 4 YAMAHA RAYZ R, 2018, MOTOR C YCL E கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0705999 163 . 071357

JF-6973 BAJAJ 2004, QQ-1990 BAJAJ, 2008, THREE-WHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0705 9 99 163 . 071347

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனுக்கோரல் (IFB)**

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 1 | மட்டக்களப்பில் புன்னையில் மூக்கிரியான் ஆற்றின் குறுக்கே விழும் மற்றும் மூக்கிரியான் ஓடை பாலத்தில் பாதை மற்றும் அடித்தளக் கட்டுமானம் |
| 2 | மரதன்கடவல ஹபரண திருக்கொண்டியாடிமடு வீதியில் 45/5 ம் இலக்க பாலத்தின் மீதமுள்ள அகலப்படுத்தும் பணி |

மேற்கூறிய பணிகளுக்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2023.11.06 ஆம் திகதி முதல் 2023.11.28 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## மக்கள் வங்கி
### பிராந்திய தலைமைக் காரியாலயம் - மட்டக்களப்பு

மக்கள் வங்கி மட்டக்களப்பு பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 06.12.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினம் - 07.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | மட்டக்களப்பு நகரக்கிளை - 113 |
|---|---|
| கிளைகள் | காத்தான்குடி, வாழைச்சேனை, ஏறாவூர் களுவாஞ்சிக்குடி, செங்கலடி, கல்லாறு, ஓட்டமாவடி, கொக்கட்டிச் சோலை |
| சேவை மையங்கள் | ஆரையம்பதி, கிரான்குளம், இருதயபுரம், வாகரை, கிரான், சித்தாண்டி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்தச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம் - மட்டக்களப்பு**
**இல. 25/1, கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு**
**தொலைபேசி இல. 065-22244746, 065-2222653**

PEOPLE'S BANK
Pride of the Nation

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

**பொது அறிவித்தல்**

1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வீதியின் பெயரிடல் மற்றும் நினைவுச்சின்னம் நிர்மாணச் சட்டம் மற்றும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயின் அதிகாரபூர்வ எல்லைக்குள் பெயர் இடுவதில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின், பின்வரும் அட்டவணையில், அத்தகைய ஆட்சேபனைகள் இந்த அறிவிப்பு திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் நகராட்சி ஆணையரிடம் எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிக்கப்படலாம்.

| தொ.இ | தற்போதைய பெயர் | முன்மொழியப்பட்ட பெயர் |
|---|---|---|
| 01. | உடஹமுல்ல புகையிரதப் பாதை வரிப்பணம் இலக்கம் 96, 96/2, 96/2B, 96/2C, 96/2D, 96/2D1, 96/2E, 96/2F, 96/2G, 96/2K, 96/2M, 96/2N, 96/2P, 96/3 , 96/5, 96/7, 96/8, 96/15, 96/16, 96/22, 96/23 , 96/25, 96/25 1/1 , 96/26 , 96/29, 96/30 , 96/30A, 96/35, 96/35A, 100 ,100 1/1 | “புகையிரதப் பாதை 3ஆம் ஒழுங்கை” |

2023.11.02
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை,
மாநகர சபை அலுவலகம்.

ஆர்,ஏ. ஷாலிக்கா எஸ். இரணவீர,
நகராட்சித் தலைவர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே மாநகர சபை.

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
### வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு
### வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

**கேள்வி அழைப்பு**

**தளபாடங்களைக் கொள்வனவு செய்தல்**

WL/2/21/Furniture/Girithale/2023

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் கிரிதலே தேசிய வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் தங்கும் விடுதிக் கட்டிடத்திற்குத் தேவையான தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள மற்றும் இதில் ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் இடம்பெறும்.
2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2023.11.07ஆம் திகதி முதல் 2023.11-24ஆம் திகதி வரையான அரச வேலை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பத்தரமுல்ல, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் 2023.11.24ஆம் திகதி வரை வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், பெயரில் செய்யப்படும் எழுத்துமூல வேண்டுகோளுடன் ரூ. 3500.00 மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை ரொக்கப் பணமாக திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தியதன் பின் பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்வி ஆவணங்களுடன் கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 120 நாட்கள் (2024.03.26) வரை செல்லுபடியாகுமாறு பெற்றுக் கொண்ட ரூ. 150,000.00 கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அதனை கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்ற அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் காசாளருக்கு 2023.11.24ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்பு பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணையை சமர்ப்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
5. கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் குறைந்தபட்சம் 90 நாட்கள் (2024.02.25) வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வெவ்வேறான கடித உறைகளில் இட்டு முத்திரை பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘தளபாடங்களைக் கொள்வனவு செய்தல - WL/2/21/Furniture/Girithale/2023” எனக் குறிப்பிட்டு 2023.11.27ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புலாம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறுவதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
7. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்களை 011 2888585 தொ. பே. இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானங்களை எடுக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இவ்வறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்படாத இப்பெறுகை செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றி தீர்மானம் எடுக்கும் உரிமையை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டிருப்பார்.
8. கேள்விப் பத்திரங்களை தயாரித்தல் சம்பந்தமாக ஏற்படும் எந்த செலவுகளுக்கும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் பொறுப்புக் கூறப்படமாட்டாது.
9. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும், அதன் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளும் அல்லது எந்தக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல.**

'புனர்வாழ்வு புதுவாழ்வு' அமைப்பின் ஏற்பாட்டில்

# யாழ். போதனா வைத்தியசாலையில் 5 நாட்களில் 1052 பேருக்கு இலவச கண்புரை சத்திர சிகிச்சை

## வட மாகாண ஆளுநர் சார்ள்ஸ் உட்பட பிரமுகர்கள் பங்கேற்பு

யாழ் வைத்தியசாலையில் ஐந்து நாட்களில் 1052 பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நிறைவுக்கு வந்துள்ளது. கண் பார்வை குன்றிய வயது முதிர்ந்த அனைவருக்கும் கண்புரை சத்திர சிகிச்சையின் மூலம் வடக்கில் தொடர்ந்து உதவிகள் வழங்க தயாராக உள்ளதாக 'புனர்வாழ்வு புதுவாழ்வு' அமைப்பின் இங்கிலாந்து நாட்டுக்கான தலைவர் பொறியியலாளர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் உலக பார்வையாளர் தினத்தை முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கான கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்கின்ற செயற்றிட்டத்தின் கீழ் கடந்த 30 ஆம் திகதி முதல் இம்மாதம் 3 ஆம் திகதி வரை வைத்தியசாலை அத்தியட்சகர் சத்தியமூர்த்தியின் வழிகாட்டலுடன் கண் சிகிச்சை வைத்திய நிபுணர் மலரவன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் ஆரம்ப நிகழ்வில் வட மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் கலந்து கொண்டு சிறப்பித்தார். இரத்தினபுரி, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் வைத்தியசாலைகளின் கண் சிகிச்சை வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதிமார் குழுவினர்கள் கலந்து கொண்டனர். இதில் அநுராதபுரம், யாழ்ப்பாணம், மதவாச்சி, பதவிய, வவுனியா பகுதிகளிலுள்ள 1052 பேர் ஐந்து நாட்களில் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இங்கிலாந்து நாட்டின் 'புனர்வாழ்வு புதுவாழ்வு' அமைப்பின் தலைவர் பொறியியலாளர் கலாநிதி சர்வேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்;**

நாடளாவிய ரீதியில் கண்பார்வை குன்றிய அனைத்து மக்களுக்கும் கண்புரை சத்திர சிகிச்கையினை இலவசமாக மேற்கொண்டு இந்நாட்டில் முற்றாக இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த சத்திர சிகிச்சையின் மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் இரு கண்களுக்கும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளக்கிடத்தமையை பாக்கியமாக கருதுகின்றனர்.

கடந்த காலங்களில் எமது புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் ஊடாக ஒரு கண் பார்வை குன்றியவர்களுக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு பார்வை பெற்றுக் கொண்டவர்கள் இத்தினத்தில் மறு கண்ணையும் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொண்டு கண் பார்வையைப் பெற்றுக் கொள்வது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாக இருக்கிறது. ஒரு நோயாளி ஏற்கனவே தன்னுடைய வலது கண்ணுக்கு கண்புரை சத்திர சிகிச்சை செய்து கண்ணொளியைப் பெற்றுக் கொண்டவர் விசேடமாக இத்தினத்தில் இடக் கண்ணில் கண்புரை சத்திர சிகிச்சையினை மேற்கொண்டு கண் பார்வையைப் பெற்றுக் கொண்டார். இதற்கு முக்கிய காரணம், யாழ் போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் மலரவனின் பங்களிப்பும் அவருடைய விடா முயற்சியும் கடும் உழைப்புமாகும்.

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய வைத்தியசாலைகளின் கண் சத்திர சிகிச்சை நிபுணர்களை ஒருங்கிணைத்து யாழ்ப்பாணத்தில் செய்வதற்கான அனுமதியை வழங்கியமை விசேட அம்சமாகும்.

கண் வைத்திய நிபுணர் மலரவன் வடக்கில் இருந்து முற்றாக கண்புரை சத்திர சிகிச்சையை மேற்கொண்டு வயது முதிர்ந்த கண் பார்வை குன்றிய அனைவருக்கும் கண் பார்வை வழங்குவதே அவரது நோக்கமாகும். அதற்கு நாங்கள் முழு ஆதரவையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம். அதே போன்று இந்த வேலைத் திட்டத்தை முழுக்க வட மாகாணத்தில் மட்டும் தான் செய்ய வேண்டும் என்று இல்லை. நாடு முழுக்கவும் செய்யத் தயாராக இருக்கின்றோம்.

வடக்கில் செய்வதைப் போன்று கிழக்கு, வடமேல், வட மத்திய மாகாணம் உள்ளிட்ட சகல மாகாணங்களிலும் செய்யலாம். வட மாகாணத்தில் உள்ள கண் வைத்திய நிபுணர்களினால் வழங்கப்படும் ஒத்துழைப்புக்களைப் போன்று மேற்படி மாகாணங்களிலும் கிடைக்கப்பெற்றால் ஏனைய மாகாண மட்டங்களில் இத்திட்டத்தை மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றோம். அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்யவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் ஊடாக இலங்கை வாழ் மக்களுக்கு சமூகப் பணியாற்றி வருகின்றேன். யுத்தத்தின்போது அரசாங்கத்தினால் மீளக் குடியேற்றப்பட்ட பகுதிகளில் பாடசாலைக் கட்டடங்கள், புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் கட்டட நிர்மாணப் பணிகள், மலசல கூடங்கள், தண்ணீர் வசதிகள் எனப் பல அபிவிருத்திப் பணிகளையும் வாழ்வாதார உதவிகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் செய்து வருகின்றோம்.

வாழைச்சேனை பறங்கியாமடு, திருகோணமலை போன்ற மீள் குடியேற்றப்பட்ட பகுதிகளில் வீடமைப்பு வசதிகளையும் வாழ்வாதார உதவிகளையும் நாங்கள் மேற்கொண்டுள்ளோம். அதே போன்று அங்குள்ள பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காகவும் செயற்பட்டு வருகின்றோம்.

மலேசியாவிலுள்ள அலாகா பவுண்டேசன் மற்றும் ஆனந்தா பவுண்டேசன் எங்களுடைய சேவையை அவதானித்து கண்புரை சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான நிதி உதவிகளை வழங்கி வருகின்றனர். 2013 ஆம் ஆண்டு முதல் இந்த கண் சத்திர சிகிச்சையை மேற்கொண்டு வருகின்றோம். இது வரையிலும் நாடளாவிய ரீதியில் 20,000 பேரளவுக்கு சத்திர சிகிச்சை மேற்கொண்டுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**வடமாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் உரையாற்றும் போது;**

கண்புரை சத்திர சிகிச்சை இலவசமாக மேற்கொள்வதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இப்படியான வைத்தியசாலையில் முதன் முறையாக மிகவும் குறைந்த வசதிகளைக் கொண்ட மாகாணத்தில் மிகப் பெறுமதியான வேலைகளைச் செய்வது என்பது மிகமிக பாராட்டத்தக்கது. இதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வைத்தியசாலையின் அத்தியட்சகர் சத்தியமூர்த்தி, கண் சத்திர சிகிச்சை நிபுணர் மலரவன், தாதிமார்கள், உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நோயாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது அரச வைத்தியர்களின் முக்கிய பொறுப்பாகும். குறிப்பாக அரச வைத்தியசாலைகள் தூய்மையாக காணப்படாத நிலைமையே காணப்படுகிறது. ஆனால் அதற்கு மாறாக இன்று வைத்தியசாலைகள் தனியார் வைத்தியசாலைகள் போன்று அரச வைத்தியசாலைகள் காட்சியளிக்கின்றது. யாழ் வைத்தியசாலையை பார்க்கின்றபோது இங்கே அனைத்துச் சேவைகளும் நோயாளிகளுக்கு உரித்தான சலுகைகளும் வசதிகளும் தனியார் வைத்தியசாலை போல இயங்குகின்ற நிலைமைதான் இங்கு பார்க்கும் போது எனக்கு வியப்பாகவுள்ளது. எனவே இதனைச் செயற்படுத்துகின்ற யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி மற்றும் கண் சத்திர சிகிசைக்குப் பொறுப்பான வைத்திய நிபுணர் ஆகியோருக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதேபோன்றே வைத்தியசாலையின் அனைத்துச் சேவைகளும் உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும். மேலும் அரச வைத்தியசாலைகளுக்கு வருகின்ற நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும்.

இப்படியான சேவைகளை வழங்குவது இலகுவான காரியமல்ல. ஒரு சவால்மிக்க விடயம். அந்தச் சவால்களை எப்படி எதிர்கொள்வது அந்தச் சவால்களை எப்படி வெற்றிகரமாக மாற்றிக் கொள்வது என்பது நாம் எல்லோரும் நன்றாக அறிந்திருக்க வேண்டிய விடயம். இந்த விடயங்களை இந்த வைத்தியசாலை செய்து கொண்டிருக்கிறது.

பார்வை குன்றியவர்களுக்கு பார்வை வழங்குவது என்பது மிகவும் முக்கியமான விடயம். இது சாதாரண விடயமல்ல. இந்த சிகிச்சைகளை தனியார் வைத்தியசாலையில் பெறுவது என்றால் போக்குவரத்து தங்குமிடம் வசதிகள் என்று பார்த்தால் சுமார் இரண்டு இலட்சம் ரூபா செலவாகும். ஆகவே இந்த சத்திர சிகிச்சையின் பெறுமதி என்னவென்று நாங்கள் நன்கு அறிந்து கொள்ளலாம். எனவே இந்த சேவையின் பெறுமதி பற்றி நான் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. ஐந்து நாட்களுக்குள் 1000க்கும் மேற்பட்டோருக்கு கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப் போகின்றார்கள். இந்தச் சேவைக்கு நிதி உதவி செய்ய வேண்டியவர்கள் ஆதரவளிப்பவர்கள் தொடர்ந்து உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

தானத்தில் சிறந்த தானம் கண் தானம் என்பார்கள். இது ஒரு முக்கியமான பணி. இதற்காக உழைக்கின்ற அனைவரையும் இறைவன் ஆசிர்வதிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**யாழ். போதனா வைத்தியசாலையின் அத்தியட்சகர் சத்தியமூர்த்தி இங்கு கருத்து தெரிவிக்கையில்;** 1000க்கும் மேற்பட்டவர்களுக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்வது இலகுவான காரியமல்ல. ஏனைய வைத்தியசாலைகளிலுள்ள கண் சத்திர சிகிச்சை நிபுணர்களோடு ஒன்று சேர்ந்து இந்தச் சிகிச்சை திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு துணைபுரிகின்ற தாதியர்களாக இருக்கலாம், தொழில்நுட்பவியல் உத்தியோகஸ்தர்களாக இருக்கலாம் எவராக இருந்தாலும் திட்டமிட்டு தங்களுடைய கடமையை இரவு பகலாய் செய்வதன் மூலமே இந்தக் கண்புரை சத்திர சிகிச்சையை சிறப்பாக முன்னெடுக்க முடியும். அதேபோல், ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து வருகை தந்துள்ள வைத்திய நிபுணர்கள், தாதியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

விசேடமாக, எல்லாவற்றிற்கும் மேலாக இங்கே இரவு பகலாக நித்திரையின்றி கடமை புரிகின்ற ஒருவர் இருக்கின்றார். அவர்தான் பொறியியலாளர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன், புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் தலைவர். கண்சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் வைத்தியர் மலரவன் மற்றும் ஏனைய வைத்தியர்களோடு சேர்ந்து அவர், அலாகா பவுண்டேசன், ஆனந்த பவுண்டேசன் ஆகியோர்களுடைய நிதி உதவியைப் பெற்று இலங்கையில் வடக்கு மாகாணத்தில் ஆயிரக் கணக்கான கண் சத்திர சிகிச்சைகளைச் செய்வதற்கு மிகவும் காரணமானவர்.

அவர் நோயாளிகளை தன்னுடைய அம்மா, அப்பா போன்று தாங்கி அழைத்து வந்து இங்கு செய்யும் தொண்டை நான் மெச்சிப் பாராட்டுகின்றேன். ஒருவர் அல்ல எல்லோரும் ஒரே குழுமமாக இருந்து செய்யும் பணி மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**இரத்தினபுரி வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் ஜமெந்த பீரிஸ் இங்கு கருத்து தெரிவிக்கையில்;** இந்த வைத்தியசாலைக்கு நட்பு ரீதியான உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இங்கு வருகை தந்துள்ளேன். யாழ்ப்பாணம் என்பது இலங்கையில் ஏனைய பகுதிகளுக்கு ஒரு முன்மாதிரியான இடமாகக் கொள்ள முடியும் என்று நான் கருதுகின்றேன். சிகிச்சை செய்யக் கூடிய வசதி வாய்ப்புகள், அதற்குரிய ஆளணிகள், நவீன முறையில் அமைந்துள்ள வாட் வசதிகள் எல்லாம் அமைந்துள்ளன. அவை இல்லாவிட்டால் இந்தப் பெரு எண்ணிக்கையிலான மக்களுக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடியாது. எல்லோருடைய ஒத்துழைப்பும் அதற்குரிய வசதிகளும் அவசியம். யாழ் போதனா வைத்தியசாலை அதற்கு சிறப்பாக அமைந்துள்ளது. எனினும் இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் முக்கியமாக பொறியியலாளர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரனின் பங்களிப்பு அளப்பரியவை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு எல்லைப் பிரதேசத்திலுள்ள மதவாச்சி 31 பேர், அநுராதபுரம் 69 பேர் பதவிய, கெப்பித்திகொள்ளாவ சிங்கள கிராமப்புறங்கள் உட்பட யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, வட பகுதியில் இருந்து வருகை தந்த 150 பேர் வரை எல்லாமாக மொத்தம் 217 பேர் வரை கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டன.

இதற்கான அனுசரணையினை புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்புச் செய்து வருகின்றது. இவ்வமைப்பின் தலைவர் பொறியியலாளர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன் எந்நாளும் எங்களோடு இருக்கிறார். அதற்கான உதவிகளை அவரே செய்து தருகிறார். எல்லா மருத்துவப் பொருட்களையும் அவர் வாங்கித் தருவார். நீண்டகாலமாக சத்திர சிகிச்சை செய்ய இயலாமல் இருந்த ஆட்களை அந்த இடத்தில் இருந்து இங்கு அழைத்து வந்து சிகிச்சைகளை குறைவின்றி மேற்கொண்டு வருகிறார். ஒரு நாளைக்கு 200 பேராக ஐந்து நாட்களில் 1000 க்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்தனர் என்றார்.

**இங்கு சிகிச்சை பெற்ற ஒருவர் கருத்து தெரிவிக்கையில்;** நான் ஊரணியைச் சேர்ந்தவன். வயது 69. இரண்டு மாதங்களுக்கு முன் எங்களுடைய ஊரில் கண் பரிசோதனை நடைபெற்றது. அப்பொழுது எனது தொலைபேசி இலக்கத்தை எடுத்துக் கொண்டு குறித்த தினத்தில் என்னை தொடர்பு கொண்டு இன்றைக்கு கண்புரை சத்திர சிகிச்சை இடம்பெறவுள்ளது என்று வரும்படி அழைத்தார்கள். போக்குவரத்து வசதிகளையும் அவர்களே ஏற்பாடு செய்து தந்தார்கள்.

நாங்கள் இங்கு நிறையப் பேர் வந்துள்ளோம். எங்களிடம் எந்தவிதமான கட்டணங்களும் அறவிடப்படவில்லை. இந்த உதவியைச் செய்து தந்தவர்களுக்கு கோடிப் புண்ணியம் கிடைக்க வேண்டும் என்று நல்லாசி புரிகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

எஸ். சந்திரகுமார்



















## கனகபுரம் பகுதியில் கால்நடைகள் திருட்டு

### அச்சத்தில் பொதுமக்கள்



(கிளிநொச்சி குறூப் நிருபர்)

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் 10 பண்ணைகளில் தொடர்ச்சியாக கால்நடைகள் திருடப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்டு வருகின்ற கால்நடைகள் திருடப்பட்டு பயன்படுத்தப்படாத காணிகளில் வைத்து வெட்டப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பல குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்து பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

பகல் வேளைகளில் வீடு புகுந்து கத்தி முனையில் பணம், நகைகள் என்பனவும் கொள்ளையிடப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் இரவுவேளைகளில் மட்டுமின்றி பகல் வேளைகளிலும் வீடுகளில் தனியாக இருப்பது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# யாழில் நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ். விசேட நிருபர்)

நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு வடமாகாணத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

உலக சுகாதார நிறுவனம் வருடந்தோறும் நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பு விழிப்புணர்வு வாரத்தை பிரகடனம் செய்து வருகின்றது. இலங்கையிலும் தற்போது இவ் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடைபெற்றுவருகின்றன.

அதன்பிரகாரம் வடமாகாணத்தில் வைத்தியர்களின் பங்குபற்றுதலில் இக்கருத்தரங்கு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பாக்டீரியாக்கள், வைரஸ்கள், பூஞ்சைகள் மற்றும் ஒட்டுண்ணிகள் காலப்போக்கில் பல்வேறு வகையான மாற்றம் அடைகின்றன.



இதனால் நோய்த்தொற்றுகளுக்கு சிகிச்சையளிப்பதை கடினமாக்குகிறது.

இவை வழமையான Antibiotics களுக்கு எதிராக வளரும் ஆற்றலை பெறும் அபாயம் காணப்படுகிறது.

இதன் விளைவாக நோய் பரவல், கடுமையான நோய் மற்றும் இறப்பு அபாயம் அதிகரிக்கும். ஆகவே Antibiotics கட்டுப்பாட்டுடன் பாவிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

## வடக்கின் உதயம்

# பிரதமர் – முன்னாள் எம்.பி சந்திரகுமார் சந்திப்பு

வடக்கில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (06) கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது வடக்கில் வனவள திணைக்களத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொது மக்களின் காணி மற்றும் விவசாய நிலங்கள், வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற குடிநீர் விநியோக திட்டங்களின் போது ஏற்படுகின்ற தடைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான வீதிகளை விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்க வேண்டிய தேவைகள், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் நிலவுகின்ற வளப் பிரச்சினைகள் என்பன தொடர்பில் பிரதமரின் கவனத்திற்கு சந்திரகுமாரினால் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இவ்விடயங்களை கேட்டறிந்துகொண்ட பிரதமர் சில விடயங்கள் தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்துவதாகவும், ஏனைய விடயங்களில் எதிர்காலத்தில் கவனம் எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.









யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் நிறுவுநர் பரிசளிப்பு விழா அதிபர் வ. நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் கலந்துகொண்டார். இங்கு நடைபெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

# கவனிப்பாரற்ற அவலநிலையில் கரவெட்டியின் முக்கிய வீதி!



வடமராட்சி, கரவெட்டியில் முக்கியமான ஒரு வர்த்தக மையமாக வளர்ந்துவரும் நெல்லியடி நகருக்கு மிகவும் அருகாமையில் இருக்கும் சாமியன் அரசடி சந்தியிலிருந்து தெற்கு நோக்கி சோனப்பு மயானவெளிக்குச் செல்லும் சுமார் ஒரு கிலோ மீற்றர் வீதி சில வருடகாலமாக செப்பனிடப்படாமல் இருப்பதன் காரணமாக மக்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

இந்த வீதியில் இரு வைத்தியசாலைகள் இருக்கின்றன. இரு முக்கிய பாடசாலைகளுக்கும் தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்துக்கும் இந்த வீதியூடாகவே செல்ல வேண்டும்.

கோடை காலத்திலேயே மோசமான நிலையில் காணப்படும் இந்த வீதியில் மாரிகாலத்தில் மக்கள் அறவே பயணம் செய்யமுடியாத அளவுக்கு ஆங்காங்கே வெள்ளநீர் தேங்கிக் காணப்படுகிறது.

வீதியைச் செப்பனிடப்படுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது சிலர் செய்ததாகக் கூறப்படும் இடையூறுகள் காரணமாக அது நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. குண்டும் குழியுமாக காணப்படும் இந்த வீதிக்குச் சமாந்தரமாக இருக்கும் பல வீதிகள் செப்பனிடப்படுகின்ற போதிலும், இதை செப்பனிடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது கரவெட்டி மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கரவெட்டி உடுப்பிட்டி தேர்தல் தொகுதியின் முக்கிய பகுதியாகும். யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேரில் நான்கு பேர் உடுப்பிட்டி தொகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

இவ்வாறான நிலையில் தங்கள் கிராமத்தின் மத்தியில் உள்ள முக்கிய வீதி ஒன்று இத்தகைய அவலநிலையில் இருப்பதையிட்டு கரவெட்டி மக்கள் பெரும் கவலை கொண்டுள்ளனர்.

சோனப்பு மயானத்துக்குச் செல்லும் வீதி என்பதால்தான் இவ்வாறு அலட்சியம் செய்யப்படுகிறதோ என்று சிலர் சமூக ஊடகங்களில் கேலி செய்வதையும் காணக்கூடியதாக இருந்தது. இந்த வீதியைச் செப்பனிடுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் காரணிகளை அடையாளம் கண்டு துரிதமாக செப்பனிடும் பணிகளை முன்னெடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

**பாலன்**



வட மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென் ஹொங் தலைமையிலான குழுவினர் நேற்றைய தினம் பருத்தித்துறை பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

(படம்: நாகர்கோவில் விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்)

## மலைச்சாரல்

# வைத்தியரின் பரிந்துரையின்றி மருந்துகளை உட்கொள்வதால் மரண வீதம் அதிகரிப்பு

(அக்குறணை குறூப் நிருபர்)

வைத்தியரின் பரிந்துரையின்றி மருந்துகளை உட்கொள்வதால் ஏற்படும் மரண வீதம் அதிகரித்துள்ளதாக பேராதனை போதனா வைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரி பிரபாத் சேரசிங்க தெரிவித்தார்.

கண்டி செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற, கண்டி மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



வைத்தியர் ஒருவரின் பரிந்துரையின்றி மருந்தின் அளவை விடவும் அதிகளவு மருந்தை உட்கொள்வது, வைத்தியரின் பரிந்துரையின்றி தான் நினைத்த விதத்தில் மருந்து வகைகளை உட்கொள்ளல் போன்ற காரணங்களால் மரணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனை பரவலாக அவதானிக்க முடிவதாக அவர் தெரிவித்தார்.

வைத்திய ஆலோசனையின் படி குறிப்பிட்ட மாத்திரை அளவை மட்டுமே உட்கொள்ள வேண்டும். சிலர் தாம் நினைத்தவாறு மாத்திரை அளவை மாற்றி மருந்துகளை உட்கொள்கின்றனர்.

இவற்றை தவிர்க்க வேண்டும். வைத்தியரின் பரிந்துரையின்றி வலி நிவாரணி மருந்துகளை தாம் நினைத்தவாறு நினைத்த போதெல்லாம் உட்கொள்கின்றனர்.

அதேபோல் இரண்டு மூன்று நோய் பாதிப்புகள் உள்ளவர்கள் ஒரு வைத்தியரின் ஆலோசனைப்படி பெற்றுக் கொண்ட மருந்துகளை பிறிதொரு வைத்தியரிடம் கூறாது விடுவதால் மருந்தின் வீரியம் மாற்றப்படுவதுடன் அவற்றின் கலவையானது புதிய ஒரு இரசாயன மாற்றத்திற்கு உட்படலாம். அதாவது ஒன்றுக்கு ஒன்று பொருந்தாத மருந்துகளை ஒரே நேரத்தில் உட்கொள்வதால் மருந்துச் சேர்வை மாற்றப்படலாம்.

எனவே இதுபோன்ற விடயங்கள் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் அறிந்து வைத்திருப்பதுடன் பொதுமக்களும் இதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென அவர் தெரிவித்தார்.





கனடா நாட்டில் வாழும் மலையக தமிழர்களின் நிதியுதவியுடன், கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் பங்களிப்போடு, அமைக்கப்பட்ட அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயக ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

# பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 'குறிஞ்சிச் சாரல்' கலைநிகழ்ச்சி

(மாவத்தகம தினகரன் நிருபர்)







பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறை பெருமையுடன் வழங்கும் 97 ஆவது குறிஞ்சிச் சாரல் நிகழ்வும் மலையக எழுத்தாளர் மு. சிவலிங்கத்துக்கு சங்கச் சான்றோர் விருது வழங்கும் வைபவமும் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் 'எட்டுத்திக்கும் எங்கள் கலை' என்ற தொனிப்பொருளில் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவரும், தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவருமான பேராசிரியர் எஸ். பிரசாந்தன் மற்றும் 97வது செயற்குழுத் தலைவர் மு. வினோ ஆகியோர் தலைமை தாங்கினர்.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஆர். மகேஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக முன்னாள் புவியியற்துறை தலைவர் பேராசிரியர் வை. நந்தகுமார், முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன், முன்னாள் முகாமைத்துவ துறைத் தலைவர் வ. தர்மதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வரவேற்பு நடனம், குழுப்பாடல், கிராமிய நடனம், ஐவகை நிலங்களைக் குறிக்கும் நடனம், நாடகம் ஆகிய நிகழ்வுகளும் கண்டி திருத்துவக் கல்லூரியின் வில்லுப் பாட்டு, விஹாரமகாதேவி கல்லூரியின் நடனம், மோப்ரே கல்லூரியின் கர்நாடக இசை ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

இதில் பேராதனை பல்கலைக் கழகத்தால் பெருமையுடன் வழங்கப்படும் சங்கச் சான்றோர் விருது இம்முறை மலையக எழுத்தாளர் மு. சிவலிங்கத்துக்கு வழங்கப்பட்டது.

# வவுனியா மாவட்ட நீதிமன்றின் பிஸ்கால் மூலமான பகிரங்க ஆதன ஏல விற்பனை

## வவுனியா மாவட்ட நீதிமன்றிலே

**மக்கள் வங்கி**
**இல.75**
**சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை**
**கொழும்பு - 02**

-வழக்காளி-

வழக்கு இல : MB/82/19
தன்மை : பணம்
நடைமுறை : வழமை

எதிர்

1. அப்துல் ஹமீட் சுபைர்
2. நிஹாராசுபைர்
ஒட்டறாக்குளம், செட்டிகுளம், வவுனியா.

-எதிராளிகள்-

மேற் சொல்லப்பட்ட வழக்கில் 31.01.2022ம் திகதியன்று வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் எதிராளி / தீர்வைக்கடனாளிகளுக்கு எதிராக பதியப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்வையின் பிரகாரம் வழக்காளி வங்கிக்கு ரூபா 2,307,288.30 தொகையும் 26.10.2018ம் திகதியிலிருந்து குறித்த பணத்தொகையை செலுத்தி முடிக்கும் வரையிலான காலப்பகுதிக்கு ரூபா 2,215,266.72 தொகைக்கு 19.59% வட்டியும் வழக்குச் செலவும் எதிராளியால் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

குறித்த தீர்ப்பு மற்றும் தீர்வை என்பன புறத்தொதுக்கப்படாததுடன் வலிதாகவுள்ள நிலையில் குறித்த தீர்வையானது திருப்திப்படுத்தப்படாதுள்ள காரணத்தால் மேற்குறித்த வழக்கில் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற்கமைய எதிராளிகளுக்குச் சொந்தமான பின்வரும் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2023 ஆண்டு மார்கழி மாதம் 6 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளேன்.

அத்துடன் உறுதிகள், வரைபடங்கள் தொடர்பான மேலதிக விபரங்களை மக்கள் வங்கி வவுனியா கிளை முகாமையாளரினை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**2023ஆண்டு நவம்பர் மாதம் 2 ம் திகதியன்று**

**ஆதன அட்டவனை**

வடக்கு மாகாணம், வவுனியா மாவட்டம், வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் வெங்கல செட்டிகுளம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாங்குளம் கிராமத்தில் சின்னசிப்பிகுளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் (210A)“மாங்குளம் காணி” என்று அழைக்கப்படும் 1040 இலக்கப்படத்தில் 1ம் துண்டு. இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் V.S.விஸ்வலிங்கம் அவர்களின் 08.03.2004ம் ஆண்டு விபரிக்கப்பட்டுள்ளது. இதன் விசாலம் இரண்டு றூட் (ஏ00-றூ02-பே00). இதன் எல்லைகள் கிழக்கு- கிரவல்பாதை, வடக்கு - M.Y.அபுதாகிர் ஆதனம், தெற்கு-மு.சேகலியின் ஆதனம் மேற்கு-A.அஹமட் ஆதனம் இதனடங்களும் கட்டிடங்கள், பயிர்கள் உள்ளடங்கலாக இதைச் சேர்த்தனைத்தும் பதியப்பட்டுள்ளது.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# குண்டசாலை பிரதேச சபை

## வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் திட்டப்பட வரைஞர்களைப் பதிவு செய்தல் — 2024ம் வருடம்

2024ஆம் வருடத்திற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் திட்டப்பட வரைஞர்களை பதிவு செய்து கொள்வதற்கு குண்டசாலை பிரதேச சபை தீர்மானித்துள்ளது. இதன்பொருட்டு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் பிரகாரம் 2024ஆம் வருடத்தில் குண்டசாலை பிரதேச சபைக்கு வழங்கல் மற்றும் சேவைகளுக்கான பதிவுக் கட்டணம் பின்வருமாறாகும்.

**வழங்கல்கள்**

| தொ. இல. | வழங்கல்கள் | 2024 பதிவுக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01 | அலுவலக உபகரணங்கள், மரத் தளபாடங்கள் மற்றும் உருக்குத் தளபாடங்களை வழங்குதல் | 1250.00 |
| 02 | காகிதாதிகள் வழங்குதல் | 1250.00 |
| 03 | கணனி இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள், அச்சுப் பொறிகள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்களை வழங்குதல் | 1500.00 |
| 04 | மின்சார உபகரணங்கள், வீதி விளக்கு உபகரணங்கள் மற்றும் வீதி விளக்கு பராமரிப்பு உபகரணங்கள் வழங்குதல் | 1500.00 |
| 05 | கட்டிடப் பொருட்கள் வழங்குதல் (மணல், செங்கல், கல், சிறு கற்கள், சுண்ணாம்பு, ஓடுகள், தரையோடு வகைகள், சீமெந்து கட்டிடங்களுக்குத் தேவையான கம்பி, யன்னல் கண்ணாடிகள், கூரைத் தகடுகள், அஸ்பெஸ்டாஸ்) | 1250.00 |
| 06 | கொங்கிறீட் தூண்கள், ஹியூம் குழாய்கள் மற்றும் கொங்கிறீட் உற்பத்திகளை வழங்குதல் | 750.00 |
| 07 | கைத்தொழில் கருவிகள் மற்றும் வீதி கருவிகள் வழங்குதல் (தாச்சி, மண்வெட்டி, ரேக்கை, வீச்சுக்கத்தி, வீல்பரோ) | 500.00 |
| 08 | சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்களை வழங்குதல் (தூரிகைகள், கிருமி நாசினிகள், மருந்துகள், மழை அங்கிகள், கையுறைகள், பூட்ஸ், தும்புத்தடி, விளக்குமாறு, கூடைகள் போன்றன) | 1250.00 |
| 09 | நீர் வேலைகளுக்கான உபகரணங்களை வழங்குதல் (நீர்க்குழாய்கள், பிளாஸ்திக் தாங்கிகள், நீர்ப் பம்பிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் போன்றன) | 750.00 |
| 10 | மோட்டார் வாகனங்கள் மற்றும் வாகன இயந்திராதிகள் மற்றும் டிராக்டர்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை வழங்குதல் | 1250.00 |
| 11 | மோட்டார் வாகனங்கள் மற்றும் டிராக்டர்களுக்கான டயர், டியூப், பெட்டறிகளை வழங்குதல் | 1250.00 |
| 12 | குப்பை வண்டிகள் மற்றும் அழுக்குகளைக் கழுவும் உபகரணங்களை வழங்குதல் | 750.00 |
| 13 | சீருடைத் துணிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் | 500.00 |
| 14 | நூலகப் புத்தகங்கள் புதினப் பத்திரிகைகள் போன்றன வழங்குதல் | 1250.00 |
| 15 | பெயர்ப் பலகைகள், அறிவித்தல் பலகைகள், பதாகைகள் மற்றும் வரி இலக்கத் தகடுகளை வழங்குதல் | 500.00 |
| 16 | பாலர் பாடசாலை உபகரணங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்களை வழங்குதல் | 500.00 |
| 17 | நிறப்பூச்சுகள் மற்றும் வார்ணிஷ் போன்றன வழங்குதல் | 1000.00 |
| 18 | அனைத்து வகையான மரங்கள் வழங்குதல் | 1000.00 |
| 19 | தார் வழங்குதல் | 500.00 |
| **சேவைகள்** | | |
| 01 | மோட்டார் வாகனங்கள் மற்றும் டிராக்டர்களை சேர்விஸ் செய்தல் | 1250.00 |
| 02 | மோட்டார் வாகனங்கள் மற்றும் டிராக்டர்களின் திருத்தவேலைகள் | 1250.00 |
| 03 | அபாயகரமான மரங்களை வெட்டும் வேலைகள் | 500.00 |
| 04 | மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் | 1000.00 |
| 05 | பாவித்த பத்திரிகைகள், வெற்று போத்தல்கள், பழைய இரும்புகளைக் கொள்வனவு செய்தல் | 500.00 |
| 06 | டியூப்களை ஒட்டுதல், வல்கனைசிங் செய்தல் மற்றும் டயர்களை மீளநிரப்புதல் | 750.00 |
| 07 | போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல் | 750.00 |
| 08 | காணி மற்றும் வீதி வேலைகளுக்கான சேவைகளை வழங்குதல் மற்றும் நில அளவை வேலைகள் | 500.00 |
| 09 | நிர்மாண வேலைகளுக்கான மனிதவலு வழங்குதல் மற்றும் இயந்திராதிகளை வாடகைக்கமர்த்துதல் (மண் வெட்டும் இயந்திரம், வீதி அழுத்தும் இயந்திரம், கொங்கிறீட் கலவை இயந்திரம், லொறி, டிப்பர், டிராக்டர் போன்றன) | 750.00 |
| 10 | சட்ட நடவடிக்கைகளுக்கான சட்ட ஆலோசனைகளை வழங்குதல் | 1250.00 |
| 11 | காகிதாதிகள் மற்றும் ஆவணங்களின் அச்சு வேலைகள் | 1000.00 |

**ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024**

| | | |
|---|---|---|
| 01. | ரூபா 50,000.00 வரை | 750.00 |
| 02. | ரூபா 50,000.00 முதல் 100,000.00 வரை | 1000.00 |
| 03. | ரூபா 100,000.00 முதல் அதிகரிக்கும் ஒவ்வொரு இலட்சத்துக்கும் அல்லது அதன் பகுதிக்கு 250.00 ரூபாவும் செலுத்துதல் வேண்டும். | 1500.00 |

**திட்டப் படவரைஞர்களைப் பதிவு செய்தல்**

2024 வருடத்திற்கான திட்டமிடுநர்களைப் பதிவு செய்தல் 5000.00

நிபந்தனைகள்

1. வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் திட்டமிடுநர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரர்கள் பதிவுக் கட்டணம் மற்றும் பின்வரும் மாதிரிப் படிவத்திற்கமைய சுயமாகத் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களை செயலாளர், குண்டசாலை பிரதேச சபை எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசோலையுடன் 2023-11-30ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் இந்தச் சபைக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். அல்லாவிடில் ரொக்கப் பணம் சகிதம் நேரில் கொண்டு வந்து அலுவலகத்தில் ஒப்படைக்கலாம்.
2. இந்த விண்ணப்பப் படிவங்களுடன் தமது தகுதியை உறுதி செய்யும் ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். (வியாபார பெயர் பதிவுச் சான்றிதழ் உட்பட)
3. 2023ஆம் வருடத்தில் சபையுடன் பதிவு செய்து கொண்டுள்ள அனைத்து திட்டப்பட வரைஞர்களும் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளல் வேண்டும்.
4. 2023ஆம் வருடத்தில் அபகீர்த்தியாளர் பட்டியிலுக்கு உள்ளான நிறுவனங்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் பிரதேச சபையின் செயலாளரிடம் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

தொலைபேசி இல.: 081-2375624, 081-2375409

**செயலாளர்,**
**குண்டசாலை பிரதேச சபை,**
**மெனிக்ஹின்ன.**

# போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

## வழங்குநர்களையும் ஒப்பந்ததாரர்களையும் பதிவுசெய்தல் - 2024

யாழ் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2024ம் ஆண்டிற்குப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மீளளிக்கப்படாத பணம் வைப்புப் ரூபா.1,000.00ஐ எமது அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் பெயருக்கு காசுக்கட்டளையை விண்ணப்பப் படிவத்துடன் பெறப்பட்ட பிரதான அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் காசாக்கக்கூடிய காசுக்கட்டளையை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடது இடது பக்க மேல் மூலையில் ”வழங்குநர்கள் பதிவு செய்தல்- 2024” எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2023.12.07ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம். மேலும் இது தொடர்பான விபரங்களை யாழ் போதனா வைத்தியசாலை மின்னஞ்சலில் www.thjaffna.lk பார்வையிடலாம்.

| உருப்படி இல | பொதுபொருட்கள் |
|---|---|
| A-01 | அலுவலக காகிதாதிகள், எழுதுபொருட்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைவர் போன்றவை) |
| A-03 | கணனிகள் கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், போட்டோபிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதி-பண்ணும் இயந்திரங்கள் (Duplo), CCTஏகமராக்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் என்பன. |
| A-04 | ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A-05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள், நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A-06 | சகலவிதமான வீட்டுப்பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக், கேத்தல், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை) |
| A-07 | தும்புமெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் மற்றும் பஞ்சினாலான தலையணைகள் போன்றவை. |
| A-08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வார்ணிஸ் மற்றும் சகல ஹாட்வெயார் பொருட்கள் மணல், கல் தீராந்தி, சலாகை போன்றவை. |
| A-09 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும். |
| A-10 | புற்பாய், தும்புத்தடி. விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A-11 | எல்லாவிதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணிதுவைக்கும் தூள், பார் சவர்க்காரம், சுத்தப்படுத்துவ-தற்கான திரவ வகைகள், சவர்க்காரத்தூள், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A-12 | டயர், டியூப், பற்றிகள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| A-13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள், எல்லாவிதமான பாதணிகள். |
| A-14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், DVD player மற்றும் அதன் உதிரி-ப்பாகங்களும். |
| A-15 | சகலவகையான ரெக்சீன் துணிகள், பொலித்தின் பைகள், கழிவகற்றும் பொலித்தின் பைகள் போன்றவை. |
| A-16 | இறப்பர் முத்திரை வகைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை, தினமுத்திரைகள் தயாரித்தல். பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பானங்கள். |
| A-17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பானங்கள். |
| A-18 | LP வாயு மற்றும் வாயுறெகுலேட்டர், காஸ் பனர், காஸ் குழாய். |
| A-19 | சத்திரசிகிச்சைக்கு தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர், தாதியினர், சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை, கட்டில் விரிப்பு, தலையணை உறை, GS Towel) |
| A-20 | அலுவலக அடையாள அட்டை மற்றும் பெயர்ப் பலகை தயாரித்தல். |
| A-21 | மருந்துகள் இடும் உறை / Xகதிர் அட்டை இடும் உறை மற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| D-01 | சத்திரசிகிச்சை, மருத்துவ உபகரணங்கள் போன்றவை. |
| D-02 | ஆய்வு கூட உபகரணங்கள். |
| D-03 | சத்திரசிகிச்சை, மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப் பொருட்கள் (biopsy needles, catheter, Distill water, surgical spirit, & other such things etc) |
| D-04 | பதிவு செய்யும் சுருள்கள் (Recording Paper (ECG, ETT, CTG, EEG recording paper & other such things) |
| D-05 | சத்திரசிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திரசிகிச்சைக் கருவிகள், கதிர்வீச்சு போன்றவை |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C-01 | உருக்கு மற்றும் மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C-02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, தொலை காட்சிப் பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C-03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும், மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C-04 | அலுவலக உபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம், புகைப்படபிரதி இயந்திரம், Fax இயந்திரம்) |
| C-05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C-06 | சலவை சேவைகள் |
| C-07 | காற்றுக் குளிராக்கி பராமரித்தல் Air Conditioner Maintenance |
| C-08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C-09 | வாயு அடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C-10 | வீட்டு உபயோகப் பொருட்கள் திருத்துதல், பொலிசிங் செய்தல், கதிரை பின்னுதல் |
| C-11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C-12 | தையல் வேலைகள். |
| C-13 | கழிவுகளை அகற்றுதல் தொடர்பான சேவை |

| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தல் |
|---|---|
| D-01 | சகலவிதமான வாகனங்கள் திருத்துதல், வாகன மின்சார, குளிரூட்டி திருத்த வேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D-02 | சகல விதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E-01 | கட்டிட நிர்மாணம், கட்டிடபுனரமைப்பு, கட்டிடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமானப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E-02 | அலுமினிய நிர்மாண வேலைகள். |
| E-03 | தொலைபேசி இணைப்பு மற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F-01 | (கண்ணாடி, பிளாஸ்டிக் போத்தல், அலுமினியப் பாத்திரம், X-கதிர் அட்டை, X-கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகலவிதமான பொருட்கள் அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

| உருப்படி இல | உணவுப் பொதிகள் மற்றும் குளிர்பான வகைகள் |
|---|---|
| G-01 | (சிற்றுண்டி வகைகள், உணவுப்பொதிகள் மற்றும் குளிர்பானங்கள் போன்றவை) |

**விதிமுறையும் நிபந்தனைகளும்:**

01. வழங்கல்கள், சேவைகள் 2024 ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. விண்ணப்பதாரர்கள் இலங்கையில் பதிவு செய்யப்படுவதுடன், பதிவு செய்யப்பட்ட வர்த்தக ஸ்தாபனத்தின் தொலைபேசி, தொலைநகல், மற்றும் மின்னஞ்சல் வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும். (வணிகப் பதிவின் நகல் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
03. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளிமூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.
04. ஏதேனும் சந்தர்ப்பங்களில் பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பதாரரின் தகுதிகள் திருப்திகரமாக இல்லை என தெரியவரும் போது காரணங்கள் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.
05. பொருட்கள் மற்றும் சேவைகளை ஆகக் குறைந்தது ஒருமாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
06. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.
07. அனைத்து வழங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
08. வழங்குநர்களைப் பதிவுசெய்யும் போது, வியாபாரப் பெயர் பதிவுச் சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருள்களும் வியாபார நிலையங்களில் இருந்தும் சந்தைப்படுத்தப்படுகின்ற மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராக பதிவு செய்யப்படும்.
09. மேலதிக விபரங்கள் பெற விரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
10. உருப்படி இலக்கம் B (அறுவைச் சிகிச்சை மற்றும் மருத்துவ பொருட்களுக்கு நீங்கள் பதிவு செய்யும் போது பின்வரும் தகவல்களையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.
    A).தயாரிப்பு எல்லை (Product range)
    B). உற்பத்தியாளர் அங்கீகாரக் கடிதம் (Copy of manufacturer authorization letter)
    C). CDDA நகல்
    D).நிறுவுதல் அடிப்படை - (Installation Base) (இது தொடர்பான மேலதிக தகவல்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்க முடியும்)

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்**

# இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை

## பணியாளர் வெற்றிடங்கள்

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை (CAASL) மூலோபாய திட்டமிடல், தொழில்முறை வழிகாட்டுதல் மற்றும் கடுமையான கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் நன்கு நிறுவப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பின் கீழ், தேசிய சட்டத் தேவைகள் மற்றும் சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு (SARPs) இணங்க பாதுகாப்பான திறமையான வழக்கமான மற்றும் சுற்றுச்சூழல் நட்புடன் தேசிய சிவில் விமானச் சேவை அமைப்பின் செயல்பாட்டை உறுதி செய்கிறது. இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையானது பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் சிறந்த தகுதி மற்றும் விரிவான அனுபவத்தைக் கொண்ட ஆற்றல் மிக்க, அனுபவமுள்ள மற்றும் சுய உந்துதல் கொண்ட பணியாளர்களைத் தேடுகின்றது.

### பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கூட்டுவர்த்தக முகாமைத்துவம்)
### Deputy Director General (Corporate Management)
**பதவிக் குறியீடு HM-2-1-DDG2 பதவிகளின் எண்ணிக்கை - 01**

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (HM 2-1) - ரூபா 91,645 – 12 x 2,700 -124,045 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 184,945.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 135 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

| வெளிவாரி விண்ணப்பதாரிகள் | உள்வாரி விண்ணப்பதாரிகள் |
|---|---|
| இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத பொருளியல், கணக்கியல், முகாமைத்துவம், வர்த்தகம் மற்றும் நிர்வாகத் துறையில் இளமாணிப் பட்டம்<br>மற்றும்<br>பொருளியல், கணக்கியல், முகாமைத்துவம், வர்த்தகம் மற்றும் நிர்வாகத் துறையில் பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை அல்லது நிதி முகாமைத்துவம் அல்லது நிர்வாகத் துறையுடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்<br>மற்றும்<br>கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் நிதி முகாமைத்துவம், நிர்வாகம் அல்லது கணக்காய்வுத் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினெட்டு (18) வருடங்கள் சேவை அனுபவம். | விருப்பத் தேர்வு 1<br>வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்<br>விருப்பத் தேர்வு 2<br>இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் பணிப்பாளர் (மனித வளங்கள் மற்றும் ஆதன முகாமைத்துவம்), பணிப்பாளர் (நிதி மற்றும் வருமான முகாமைத்துவம்) அல்லது பணிப்பாளராக (தரம் மற்றும் உள்ளக கணக்காய்வு) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால சேவை அனுபவம்.<br>மற்றும்<br>கடந்த ஐந்து வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு, மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்<br>மற்றும்<br>வருடாந்த செயற்றினில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல்.<br>மற்றும்<br>பல - ஒழுங்குக் குழுக்களை வழிநடத்துவதற்கும் மற்றும் தலைமை தாங்குவதற்குமான நிரூபிக்கப்பட்ட திறன், மனித மற்றும் ஏனைய வளங்களின் சரியான வளர்ச்சி மற்றும் திறமையான முகாமைத்துவத்தில் அனுபவம் |

### பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்)
### Director (Information and Communication Technology)
**பதவிக் குறியீடு HM-1-1-D12 பதவிகளின் எண்ணிக்கை - 01**

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (HM 1-1) - ரூபா 80,295 – 15 x 2,270 -114,345 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 173,595.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

| வெளிவாரி விண்ணப்பதாரிகள் | உள்வாரி விண்ணப்பதாரிகள் |
|---|---|
| இலங்கை பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஒரு இளமானிப் பட்டம்<br>மற்றும்<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் ஒரு பட்டப் பின்படிப்பு (முதுமாணி) தகைமை<br>மற்றும்<br>கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதின்மூன்று (13) வருட கால அனுபவம். | விருப்பத் தேர்வு 1<br>வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்<br>விருப்பத் தேர்வு 2<br>தகவல் மற்றும் தொடர்பாடல் துறையில் முகாமைத்துவ வகுதி (MM1-1) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலத்தை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் |

### பணிப்பாளர் (வான் போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குபடுத்தல்)
### Director (Air Transport and Economic Regulation)
**பதவிக் குறியீடு HM-1-1D8 பதவிகளின் எண்ணிக்கை - 01**

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (HM 1-1) - ரூபா 80,295 – 15 x 2,270 -114,345 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 173,595.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

| வெளிவாரி விண்ணப்பதாரிகள் | உள்வாரி விண்ணப்பதாரிகள் |
|---|---|
| விருப்பத் தேர்வு 1<br>இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வான் போக்குவரத்து, பொருளாதாரம் அல்லது முகாமைத்துவ துறையில் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம்<br>அத்துடன்<br>வான் போக்குவரத்து, பொருளாதாரம் அல்லது முகாமைத்துவ துறையில் பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்<br>மற்றும்<br>கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் விமான சேவைகள் துறையில் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் அனுபவம்.<br>மற்றும்<br>சர்வதேச விமான போக்குவரத்து தொடர்பான மரபுகள் பற்றிய முழுமையான அறிவு<br>விருப்பத் தேர்வு 2<br>விமானப் போக்குவரத்து தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு அல்லது அதுபோன்ற சர்வதேசப் புகழ் பெற்ற அமைப்பு அல்லது ஏதேனும் ஒரு நிறுவனத்தால் நடத்தப்படும் ஆறு (06) வாரங்களுக்கு குறையாத விமான போக்குவரத்து தொடர்பான பயிற்சி கற்கை நெறியை (முகாமைத்துவ நிலை) முடித்திருக்க வேண்டும் அல்லது சர்வதேசப் புகழ் பெற்ற அமைப்பு அல்லது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பினால் அங்கீகரிக்கப்படும் இதற்கு நிகரான தகைமை.<br>கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் விமான சேவைகள் துறையில் குறைந்தபட்சம் பதின்மூன்று (13) வருடங்கள் அனுபவம். | விருப்பத் தேர்வு 1<br>வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்<br>விருப்பத் தேர்வு 2<br>விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குபடுத்தல் துறையில் முகாமைத்துவ வகுதி (MM1-1) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலத்தை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்<br>மற்றும்<br>கடந்த ஐந்து (5) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு, மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்<br>சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் நடாத்தப்படும் ஆறு (06) வாரங்களுக்குக் குறையாத விமானப் போக்குவரத்து துறையில் அதிகார சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட உயர் பயிற்சிக் கற்கை நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்<br>கடந்த ஐந்து (05) வருடங்களுக்கான வருடாந்த செயற்றின் மதிப்பீட்டில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல். |

### பணிப்பாளர் (மனித வளங்கள் மற்றும் ஆதன முகாமைத்துவம்)
### Director (Human Resource and Property Management)
**பதவிக் குறியீடு HM-1-1D9 பதவிகளின் எண்ணிக்கை - 01**

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (HM 1-1) - &gh 80,295 – 15 x 2,270 -114,345 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 173,595.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).

பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

| வெளிவாரி விண்ணப்பதாரிகள் | உள்வாரி விண்ணப்பதாரிகள் |
|---|---|
| விருப்பத் தேர்வு 1<br>இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம், நிர்வாகம் அல்லது முகாமைத்துவத் துறையில் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம் | விருப்பத் தேர்வு 1<br>வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல் |
| அத்துடன்<br>வர்த்தகம், நிர்வாகம் அல்லது முகாமைத்துவத் துறையில் பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்<br>மற்றும்<br>கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் விமான சேவைகள் துறையில் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் அனுபவம். | விருப்பத் தேர்வு 2<br>மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவத் துறையில் முகாமைத்துவ வகுதி (MM1-1) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலத்தை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்<br>மற்றும்<br>கடந்த ஐந்து (5) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு, மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்<br>மற்றும்<br>கடந்த ஐந்து (05) வருடங்களுக்கான வருடாந்த செயற்றின் மதிப்பீட்டில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல். |

### பணிப்பாளர் (சுற்றாடல், ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டங்கள்)
### Director (Environment, Research and Projects)
**பதவிக் குறியீடு HM-1-1-D4 பதவிகளின் எண்ணிக்கை - 01**

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (HM 1-1) - ரூபா 80,295 – 15 x 2,270 -114,345 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 173,595.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).

பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

| வெளிவாரி விண்ணப்பதாரிகள் | உள்வாரி விண்ணப்பதாரிகள் |
|---|---|
| விருப்பத் தேர்வு 1<br>இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டங்கள், விஞ்ஞானம், முகாமைத்துவம் அல்லது கலைத் துறையில் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம். எவ்வாறாயினும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் துறையில் இளமானப் பட்டத்தைக் கொண்டுள்ள அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>மற்றும்<br>பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்<br>மற்றும்<br>கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் அனுபவம்.<br>விருப்பத் தேர்வு 2<br>ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் துறையில் பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை அல்லது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்<br>மற்றும்<br>கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் துறையில் குறைந்தபட்சம் பதின்மூன்று (13) வருடங்கள் அனுபவம். | விருப்பத் தேர்வு 1<br>வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்<br>விருப்பத் தேர்வு 2<br>ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் துறையில் முகாமைத்துவ வகுதி (MM1-1) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலத்தை திருப்திகரமான பூர்த்தி செய்திருத்தல்<br>மற்றும்<br>கடந்த ஐந்து (5) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு, மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்<br>மற்றும்<br>கடந்த ஐந்து (05) வருடங்களுக்கான வருடாந்த செயற்றின் மதிப்பீட்டில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல். |

### சிரேஷ்ட சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (பறக்கும் விமான செயற்பாடுகள்)
### Senior Civil Aviation Inspector (Aircraft Flight Operations)
**பதவிக் குறியீடு MM-1-1-OP1 பதவிகளின் எண்ணிக்கை - 01**

| கிரிந்திவெல நிறைவேற்று பொறியிலாளர் பணிமனையினால் நிறைவேற்றப்படுகின்ற கிராமிய வீதி செயற்றிட்டத்தின் பியகம பிரதேச செயலாளர் பிரிவிற்கு சொந்தமான வீதி கொங்கிறீட் செய்வதற்கு தேவையான G-25 ரெடிமிக்ஸ் கொள்வனவு செய்தல் | 450 | 2000.00 +15% வெட் | 70,000.00 | 140,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.11.07 முதல் 2023.11.17 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை தலைமையகத்தில் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.
03. இதற்கான கேள்விப் பிணை முறியை காசாக அல்லது வங்கி/காப்புறுதி பிணை முறி மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்காக கேள்வித் தொகை ரூ. 5.0 மில்லியனுக்கு மேற்படாத வேளைகளில் கேள்விதாரரால் குறித்த 1987 இல. 03 பொது ஒப்பந்தச் சட்டத்தின் 08ம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பொது ஒப்பந்த பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2023.11.20 மு.ப. 11.00 ஆவதுடன் கேள்விகள் திறத்தல் அவ் வேளையிலேயே இவ் அலுவலகத்தில் நடைபெறும்.
06. இவ் வேளையில் வழங்குநர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா),**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12**
**011-4549825,011-4849845**

# மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA)

**சுற்றாடல் அமைச்சு**

## விலைக்கோரலுக்கான அழைப்பு

**மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தெரிவுசெய்யப்பட்ட பிராந்திய அலுவலகங்களுக்கு வாடகைக்கு வாகனங்களை வழங்குதல் - 2023/2024**

**கேள்வி இல. CEA/AD/Proe/RE/79/2023**

1. பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தலைமை அலுவலகத்திற்கு 06 எண்ணிக்கையான 09 ஆசனங்கள் கொண்ட (சாரதி ஆசனம் தவிர்ந்த) இரட்டை வளிச்சீராக்கம் செய்யப்பட்ட (Dual AC) வாடகை வேன்களை பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

2. வாகனத் தேவைப்பாடுகள் பின்வருமாறாகும்:

| அலுவலகத்தின் பெயர் | வகை | ஒரு பொதிக்கான ஆகக் குறைந்த கி.மீ. | தேவைப்படும் வாகனங்களின் பதிவு வருடம் | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| வவுனியா | வேன் | 1,000 | 2010 மற்றும் அதற்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் | ரூபா 10,000.00 ஒரு வாகனத்திற்கு |
| மன்னார் | வேன் | 800 | | |
| புத்தளம் | வேன் | 1,300 | | |
| பொலன்னறுவை | வேன் | 2,000 | | |
| காலி | வேன் | 2,000 | | |
| மாத்தளை | வேன் | 600 | | |

3. உத்தேச சேவைக் காலம் 12 மாதங்களாகும்.

4. விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) ஊடாக இடம்பெறும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, இல. 104, ''பரிசர பியச'', மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் (நிர்வாக) பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 0112872278, 0112873447, மற்றும் 0112124623) மற்றும் 2023-11-07ஆம் திகதி முதல் 2023-11-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பத்தரமுல்ல, இல. 104, ''பரிசர பியச'', மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் தேவையான ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிதிப் பிரிவு, காசாளருக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 கட்டணத்தைச் செலுத்தியும் மற்றும் 2023-11-07ஆம் திகதி முதல் 2023-11-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பத்தரமுல்ல, இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, (நிர்வாகப்) பணிப்பாளருக்கு முகவரியிட்டு விலைக்கோருவதற்கு எதிர்பார்க்கும் வாகனத்தின் எண்ணிக்கை மற்றும் பட்டியலை உள்ளடக்கிய எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

7. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுவின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை ஏனைய சரியான, தேவைப்படும் ஆவணங்களை ஒரு கடிதவுறையில் இட்டு 2023-11-27ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது கூரியர் சேவை மூலம் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

8. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்களுக்கு வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் - 2023/2024'' (விலைக்கோரல் இல. CEA/AD/Proc/RE/79/2023) எனக் குறிப்பிடுமாறு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். விலைக்கோரல் முடிவுறுத்தல் நேரத்தின் பின் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

9. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 2024-02-15ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தேவைப்பட்டால் முன்மொழிவை நீடிக்கவும் மற்றும் உத்தரவாதக் காலத்தை நீடிக்கவும் விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படலாம்.

10. எந்தவொரு விலைமனுவையும் முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது மற்றும் இது தொடர்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

11. தேவையான வாகன மாதிரிகளில் ஒரு (01) மாத அறிவித்தலின் பேரில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை,**
**பரிசர பியச,**
**பத்தரமுல்ல.**

# இலங்கை அஞ்சல் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**2024ஆம் வருடத்தில் அஞ்சல் தலைமையகத்தின் சிற்றுண்டிச்சாலையை நலன்புரி அடிப்படையில் நடாத்திச் செல்லல்**

அஞ்சல் திணைக்களத்தின் சார்பில் அஞ்சல் திணைக்களத்தின் திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவரால் கொழும்பு-10, இல. 310, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை எனும் முகவரியில் அமைந்துள்ள அஞ்சல் தலைமையகத்தின் சிற்றுண்டிச்சாலையை 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு நலன்புரி அடிப்படையில் நடாத்திக்கொண்டு செல்வதற்கு தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

02. விலைக்கோரலை கையளிக்கப்பெறுவதற்கு விலைமனுதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- செல்லுபடியாகும் வியாபாரப் பதிவு
- சிற்றுண்டிச்சாலையை நடாத்திக் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தை தெரிவு செய்யப்படும் விலைமனுதாரரின் செலவில் மாநகர சபையில் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- சிற்றுண்டிச்சாலையை நடாத்திக்கொண்டு செல்வதற்கான இயலுமை தொடர்பில் மற்றும் உணவு பானங்களை வழங்கலை நடாத்திச் செல்வதற்கு பதிவைப் பெற்றுள்ளமைக்கான ஆவணங்கள் மற்றும் முன்னர் நிறைவேற்றிய சேவைகள், சான்றிதழ்கள் மற்றும் ஏனைய தரச் சான்றிதழ்கள் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. பின்வரும் முகவரியிலுள்ள தரை தளத்தில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவிற்கு வருகை தந்து எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்ததன் பின் அஞ்சல் அதிபதியின் பெயரில் மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா தொகையைச் செலுத்தி விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவரால் 2023 நவம்பர் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.

04. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023 நவம்பர் 21ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் நேரம் முடிவுற்றதன் பின் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

05. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் முதல் 91 நாட்காட்டி நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

06. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது சகல விலைமனுக்களுடனும் 10,000.00 இலங்கை ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் அஞ்சல் தலைமையகத்தின் 8ஆம் மாடியிலுள்ள பிரதான காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. இந்த பெறுகையை கையளிப்பதற்கு முன் எந்தவொரு வேளையிலும் பெறுகையை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை இரத்துச் செய்யும் உரிமையை பெறுகைக் குழு தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

08. இது தொடர்பில் ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 2023-11-07ஆம் திகதி முதல் 2023-11-20ஆம் திகதி வரையில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரியிலுள்ள பெறுகைப் பிரிவிற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இலவசமாக விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். (தொலைபேசி இல. 011-4927249).

**கணக்காளர் (பெறுகைகள்),**
**அஞ்சல் தலைமையகம், தரை தளம்,**
**அஞ்சல் திணைக்களம்,**
**இல. 310, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

09. பெறுகை இலக்கம்: POST/PMD/04/38/2023

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அஞ்சல் திணைக்களம்,**
**இல. 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**2023-11-07ஆம் திகதி.**

# விவசாயத் திணைக்களம் — கிழக்கு மாகாணம்

**கிழக்கு மாகாண விவசாயத் திணைக்கள**
**பெறுகைக் குழுவின் தலைவரினால்**
**பின்வரும் விடயம் தொடர்பான கேள்வி கோரப்படுகின்றது.**

| S No | Bid NO | Details | Qty | Bid Security Amount | Non Refundable fee Rs | Bid Security Validity Period | Programme |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | Electric Water Pump -1'' | 66 | | | | |
| 02 | | Electric Water Pump – 2'' | 35 | | | | |
| 03 | | Kerosene Water Pump –2" | 20 | | | | |
| 04 | | Power Sprayer | 105 | | | | |
| 05 | | Electric Sprayer (Battery Sprayer) | 54 | | | | |
| 06 | | Knapsack Sprayer | 58 | | | | |
| 07 | | Grass Cutter/ Brush Cutter | 35 | | | | |
| 08 | | Inter Cultivator (Power Weeder ) | 25 | 300,000.00 | 4,000.00 | 2024.03.07 | PSDG |
| 09 | GOSL/EP/25/ PRO/Agri. Equipments (Inputs) /2023-01 | Drum Seeder/ Highland Seeder | 80 | | | | |
| 10 | | Garden Hose – 1'' | 150 | | | | |
| 11 | | Wheel barrow | 100 | | | | |
| 12 | | 5 L Sprayer | 100 | | | | |
| 13 | | Mammoty | 100 | | | | |
| 14 | | Secatear | 100 | | | | |
| 15 | | Grow Bag | 3,000 | | | | |
| 16 | | Pruning Saw | 100 | | | | |
| 17 | | Horse pipe | 100 | | | | |
| 18 | | Mini Spray Irrigation Unit | 14 | | | | |
| 19 | | Solar-Powered Irrigation System | 01 | | | | |
| 20 | | Chilli Grinder | 07 | | | | |
| 21 | | Rice Flour Grinder | 12 | | | | |

1. பெறுகை ஆவணங்களினை 07.11.2023 ஆம் திகதியிலிருந்து 20.11.2023 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் காலை 9.00 மணியில் இருந்து மாலை 3.00 மணிவரை திருகோணமலை கன்னியாவீதி, வரோதய நகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக இலங்கை வங்கி திருகோணமலை பிரதான கிளையில் (கிளை இல.006) மாகாணப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், கிழக்கு மாகாணம், என்ற பெயரில் கணக்கு இலக்கம் 0005849161 இற்கு மீளச் செலுத்த முடியாத வைப்புப் பணமாக ரூபா.4,000.00 இனை ஆவணத்திற்குச் செலுத்த வேண்டும்.

2. பெறுகை ஆவணங்களை மூடப்பட்ட உறையிலிட்டு 21.11.2023ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முதல் கிடைப்பதற்காக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, விவசாயத் திணைக்களம், கிழக்கு மாகாணம், கன்னியாவீதி, வரோதயநகர், திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது கையால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கும் பெறுகை ஆவணத்தின் உறையின் இடது பக்க மூலையில் பெறுகை இலக்கத்தினை குறிப்பிடுவது கட்டாயமானதாகும்.

3. உரிய நேரத்திற்கு பின் உடனே (21.11.2023) மு. ப. 10.00 மணிக்கு பெறுகை ஆவணங்கள் திருகோணமலை கன்னியாவீதி, வரோதயநகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் திறக்கப்படும். இதற்காக பெறுகைதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்ற முடியும்.

4. இவ் விலைமனுக் கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்ட ஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலை மனுக் கோரலை இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

5. மேலதிக விபரங்களை கன்னியாவீதி, வரோதயநகர், திருகோணமலை கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில், மாகாணப் பணிப்பாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

தொலைபேசி : **026-2222665/ 026-2223077**
தொலைநகல் : **026-2222153/026-2223077**

**Dr. S.M.ஹுசைன் (Ph.D)**
**மாகாணப் பணிப்பாளர்,**
**விவசாயத் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்,**
**கன்னியாவீதி, வரோதயநகர்,**
**திருகோணமலை.**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| EW/04/ PT/2023/ MA/24/17-3 | TENDER FOR SUPPLY AND INSTALLATION OF NEW EXHAUST MUFFLERS AND EXHAUST LINE ACCESSORIES FOR LAUNCH PILOT 17 | 25,000.00 | 2,000.00 | 2023-11-28ஆம் திகதி பி.ப. 2.00 மணி |

1. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும்.

2. விலைமனுதாரர்கள் வடிவமைப்பு, கட்டுருவாக்கம், உருக்கு கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் நிலைநிறுத்துதலில் ஆகக் குறைந்தது பத்து (10) வருட கடந்தககால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு 01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் கடல்சார் பொறியியல் பிரிவின் பிரதான பொறியியலாளர் (கடல்சார்) அவர்களிடமிருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: **0094 11 2482330/** தொலைநகல்: **0094 11 2342537** / மின்னஞ்சல்: **jagath_kumara@slpa.lk** என்பதுடன் 2023-11-06ஆம் திகதி முதல் 2023-11-27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் இதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

4. மீளளிக்கப்படாத கட்டணமான 2,000.00 (12% VAT அடங்கலாக) ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்திய பின்னர், 2023-11-06ஆம் திகதி முதல் 2023-11-27ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை பிரதான பொறியியலாளர் (கடல்சார்) அவர்களுக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் பொறியியல் வேலைகள் கிளையிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

5. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறிகளுடனான விலைமனுக்களை விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்படும் திகதியான 2023-11-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பிந்தாமல் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கை, கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபை, கொழும்புத் துறைமுக ஆணைக்குழு கட்டிடம், தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடனேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகளின் சமுகத்தில் திறக்கப்படும். அவர் பின்வரும் முகவரியில் உள்ள மாநாட்டு அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் நேரடியாகக் கலந்துகொள்ளலாம்.

**பிரதான பொறியியலாளர் (கடல்சார்),**
**கடல்சார் பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு 01**

# மாத்தறை பிரதேச சபை

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கு மற்றும் சேவைகளை மேற்கொள்வதற்காகப் பதிவு செய்து கொள்ள ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024' எனக் குறிப்பிட்டு 2023.12.15ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னர், செயலாளர், மாத்தறை பிரதேச சபை, கெக்கணதுர, மாத்தறை எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 041-2222906 அல்லது 041-2229512 எனும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**01. வழங்கல்கள்**

01. அனைத்து வகையான அலுவலக காகிதாதிகள்
02. கணனி மற்றும் அவை சார்ந்த துணைப்பாகங்கள் (கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள்)
03. புகைப்படப்பிரதியிடல் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், நகல்பிரதியிடல் இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள் போன்ற அலுவலக அச்சிடல் உபகரணங்கள்.
04. அலுவலக மரத் தளபாடங்கள் மற்றும் இரும்புத் தளபாடங்கள்
05. அலுவலக மின் உபகரணங்கள் மற்றும் வீதி விளக்குகளுக்குத் தேவையான பொருட்கள்
06. அனைத்து வகையான அச்சு இயந்திரங்களிற்கான டோனர்கள், கார்ட்ரிஜ், ரிபன்கள்.
07. அனைத்து வகையான கட்டிடப் பொருட்கள்
08. மை வகைகள், அவை சார்ந்த உபகரணங்கள் மற்றும் உபகரணங்கள் .
09. வீச்சுக்கத்திகள், முள்ளுகள், மண்வெட்டிகள், கத்திகள் போன்ற வீதிப்பராமரிப்பு உபகரணங்கள்.
10. மழை அங்கிகள், கம்பூட்ஸ், கையுறைகள், ஹெல்மட்டுகள், பிளாஸ்டிக் கண்ணாடிகள் போன்ற வீதி மற்றும் சுகாதாரத் தொழிலாளர்களுக்குத் தேவையான துணைப்பாகங்கள்
11. சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புப் பொருட்கள்
12. நீர்க்குழாய் துணைப்பாகங்கள்.
13. மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் (கெப், ட்ரக்டர், கைட்ரக்டர், முச்சக்கரவண்டி, க்றூகெப், பெக்கோ வாகனம், டிப்பர்)
14. அனைத்து வகை வாகனங்களுக்குமான டயர், டியுப்
15. செவிப்புல கட்புல பதிவு செய்யும் உபகரணங்கள்.
16. முன்பள்ளி உபகரணங்கள்.
17. விளையாட்டுப் பண்டங்கள்.
18. வளிச்சீராக்கி இயந்திரங்கள்.
19. விரல் அடையாளப் பதிவு இயந்திரங்கள்.
20. புல் வெட்டும் இயந்திரங்கள்.
21. கண்ணாடிகள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள்
22. நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்கள்
23. பொலித்தீன் உறைகள் மற்றும் பசளை உறைகள்.
24. சீருடைகளுக்குத் தேவையான துணி வகைகள்.

**02. சேவைகள்**

25. அச்சு வேலைகள்.
26. நில அளவையாளர் சேவைகள்.
27. சட்டத்தரணிகளின் சேவைகள்.
28. பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத தொழிலாளர்களின் சேவைகள்.
29. புகைப்படம் பிடித்தல், வீடியோ பதிவு செய்தல் மற்றும் படங்களை சட்டகப்படுத்தல் போன்ற சேவைகள்.
30. கட்டிடங்களைப் புதுப்பித்தல் (தகனச்சாலைகள் உட்பட)
31. மொழிபெயர்ப்புச் சேவைகள்.
32. அனைத்து வாகனங்களையும் சேர்விஸ் பண்ணுதல்.
33. வாகனங்கள், இயந்திராதிகளைப் புதுப்பித்தல்.
34. கணனி இயந்திரங்கள், அச்சுப்பொறிகள் உட்பட அவை சார்ந்த உபகரணங்களின் திருத்தவேலைகள்
35. புகைப்படப்பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள், லெமினேட்டின் இயந்திரங்கள், போன்ற அச்சு இயந்திரங்கள் போன்ற உபகரணங்களின் திருத்தவேலைகள்
36. வாகனங்களை மற்றும் இயந்திராதிகளை வாடகைக்கு வழங்கல்.
37. வீச்சுக்கத்தி, முள்ளுகள், கத்திகள், மண்வெட்டிகள் போன்ற வீதிப்பராமரிப்புக் கருவிகளின் திருத்தவேலைகள்.
38. டிஜிட்டல் அறிவித்தல் பலகைகள், பெனர்கள், கட்டவுட்டுகள், ஸ்டிக்கர் அச்சுச் சேவைகள்.
39. சீருடைகளைத் தைத்தல்.
40. மரங்களை வெட்டுதல்.

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்தின் பின்னர், தினமொன்றில் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டு அல்லது காசோலை மூலம் மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
02. மேற்படி ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியாக விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் அதற்காக தனித்தனியாகக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.
03. பதிவுக்காகச் சமர்ப்பிக்கப்படும் வழங்கல்கள் அல்லது சேவைகளுக்கான விண்ணப்பத்துடன் 1000.00 ரூபா செலுத்த வேண்டுமென்பதுடன் அத்தொகையை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இவ்வலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அல்லது 'செயலாளர், மாத்தறை பிரதேச சபை' என்ற பெயருக்குக் காசோலை ஒன்றை அனுப்புவதன் மூலம் கொடுப்பனவை மேற்கொள்ளலாம். காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
04. 2024ஆம் ஆண்டில் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து, விலைகள் கோரப்படுவதுடன், சமர்ப்பிக்கப்படும் விலைகள் ஆறு (06) மாத காலத்திற்கு மாற்றமடையாத நிலையான தன்மையில் வைத்திருத்தல் வேண்டும். தேவையெனக் கருதப்படும் சந்தர்ப்பங்களில், பதிவு செய்யப்படாத ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக விலை கோரும் உரிமையை பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
05. இதற்காக தம்மால் சுயமாகத் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
06. கோரும்போது கேள்விகளைச் சமர்ப்பிக்கத் தவறும் மற்றும் தருவித்தற் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டதும் பொருட்களை வழங்குவதற்குத் தவறும் வழங்குநர்களினதும் உரிய தரத்தின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்காத வழங்குநர்களினதும் பதிவு இரத்துச்செய்யப்பட்டு பெயர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படும்.

**மாத்தறை பிரதேச சபையில் பதிவு செய்து கொள்ளும் வழங்குநர்களிற்கான தகைமைகள்:-**

1. கூட்டுத்தாபனமொன்றெனின், அதற்காக சட்டபூர்வமாக வழங்கப்படும் சான்றிதழ்
2. தனிநபர் வியாபாரமொன்றெனின், பதிவுச் சான்றிதழ்
3. கம்பனியொன்றெனின் கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்
4. இதற்கு முன்னர் அரச நிறுவனங்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கியிருப்பின் அதனை உறுதிசெய்யும் ஆவணங்களை அனுப்புதல் வேண்டும்.
5. வாகன திருத்தவேலைகள் தொடர்பில் தென் மாகாண மோட்டார் கராஜ் ஒன்றாக இருத்தல் விஷேட தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
6. உத்தரவாதக் காலம் இருப்பின், பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான உத்தரவாதக் காலம் குறிப்பிடப்படல் வேண்டும்.
7. ஏனைய விஷேட தகைமைகள் ஏதும் இருப்பின் அவற்றைக் குறிப்பிடவும்.

2023 நவம்பர் 07ஆம் திகதி
**மாத்தறை பிரதேச சபை அலுவலகத்தில்**

**செயலாளர்,**
**மாத்தறை பிரதேச சபை**

# உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## மருத்துவ உபகரணங்கள் துணைப்பாகங்கள் மற்றும் உதிரிபாகங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்படும் உருப்படிகளுக்கான இணக்கமான துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கான தகைமையும் தகுதியும் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர்கள் சார்பாக கொழும்பு 10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படி | எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) (மில்லியனில்) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | Bronochoscope and Thoracoscoscope System for DGH - Negombo | 101 | 23 | 3,500.00 |
| 02 | Accessories for BP Apparatus | 9000 | 6 | 500.00 |
| 03 | NIBP Pumps for Patient Monitors | 1210 | 3 | 500.00 |

2. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுக்கோரல் முறைமையின் ஊடாக நடத்தப்படும்.
3. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலை மனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும்.
4. கொழும்பு 10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, கணக்காளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக திறக்கப்படும்.
5. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு ஒவ்வொரு விலைமனுவும் இ. ரூ. 5 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்வித் தொகையை கொண்டிருத்தல் வேண்டும். 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த இல. 03இன் பந்தி 8இன் கீழ் கம்பனிகள் பதிவாளரால் வழங்கப்படும் சான்றிதழை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. மேற்படி ஒவ்வொரு உருப்படிக்கும் ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தியதன் அடிப்படையில் மற்றும் 2023.11.07 முதல் 2023.11.27 வரை பகிரங்க வேலை நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவுக்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக இருக்கும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் அசல் மற்றும் நகல்களாக இரண்டு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். பொதியிடப்பட்ட கடித உறைகளில் முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகள் வெவ்வேறாக உள்ளிடப்படல் வேண்டும். பின்னர் இரண்டு உறைகளும் ஓர் தனி உறையில் உள்ளிடப்படல் வேண்டும். அத்துடன் உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிடல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2023.11.28 திகதி 10.00 (மணிக்கு) அல்லது அதற்கு முன்பு கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு பிராந்திய பெறுகைக் குழு, தலைவருக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது சமுகமளிக்கும் அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டபின்பு உடனடியாகத் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024.02.27 வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனுப் பிணை நிபந்தனையற்றதாக இருப்பதுடன் வங்கிப் பிணை உத்தரவாதம் 2024.03.26 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
9. மேலதிக தகவல்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு கணக்காளரிடமிருந்து தொ.பே. இலக்கம் 2684732 மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு -10.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## தொழில் திணைக்களம் - கொழும்பு 05

## பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கான சேவை வழங்குநர்களைத் தெரிவு செய்தல் — 2024

**FG/TB/36/2023**

கொழும்பு 05, நாரஹென்பிட்டியில் அமைந்துள்ள தொழிற் செயலகக் கட்டிடம் மற்றும் மெஹெவர பியச கட்டிடங்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தொழில் ஆணையாளர் நாயகம் அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் நிறுவனத்தில் ஆகக் குறைந்தது 50 ஊழியர்களை வேலைக்கமர்த்தியிருத்தல் வேண்டும் என்பதுடன் பாதுகாப்பு சேவை வழங்குவதில் 5 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர் பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு சேவை வழங்குநராக பதிவு செய்திருத்தல் வேண்டும்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியான விலைக்கோரல் முறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
4. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-05, மெஹெவர பியச, 9ஆம் மாடி, தொழில் திணைக்களம், நிதிக் கிளையில், பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி: 011-2104837) என்பதுடன் 2023 நவம்பர் 07ஆம் திகதி முதல் 2023 நவம்பர் 27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக 4,000.00 ரூபாவைச் செலுத்துவதன் பேரில் வேலை நாட்களில் பி.ப. 3.00 மணிக்கு முன் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-05, மெஹெவர பியச, 9ஆம் மாடி, தொழில் திணைக்களம், நிதிப் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். (கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்)
6. விலைமனுக்களை 2023 நவம்பர் 28ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் நேரடியாக ஒப்படைக்கலாம் அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை), நிதிப் பிரிவு, தொழில் திணைக்களம், 9ஆம் மாடி, கொழும்பு-05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனுக்கள் கொழும்பு-05, தொழில் திணைக்களம், தொழில் செயலகக் கட்டிடத்தின் 9ஆம் மாடியில் விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2024 ஜனவரி 30ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. சகல விலைமனுக்களுடனும் VIIஆம் பிரிவின் பிரகாரம் 2024 பெப்ரவரி 13ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் ''தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு'' முகவரியிடப்பட்டதும், இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை வங்கி உத்தரவாதமாக 150,000.00 ரூபாவுக்கான விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023 நவம்பர் 22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தொழிற் செயலகக் கட்டிடத்தின் 4ஆம் மாடியில் இடம்பெறும். இந்த விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றுதல் தொடர்பாக கணக்காளர் (பெறுகைகள்) தொலைபேசி: 011-2104837 அல்லது dol.fin.procurement@gmail.com எனும் மின்னஞ்சலின் ஊடாக உறுதி செய்தல் வேண்டும்.

**தொழில் ஆணையாளர் நாயகம்,**
**தொழில் திணைக்களம்,**
**கொழும்பு 05.**

**தொலைபேசி: 011-2104837/011-2104825**
**தொலைநகல் இல. 011-2581393**
**மின்னஞ்சல் முகவரி: dol.fin.procurement@gmail.com**

# இலங்கை கிரிக்கெட்டுக்கு அர்ஜுன ரணதுங்க தலைமையில் 'இடைக்கால சபை' நியமனம்

இலங்கை கிரிக்கெட் சபையை நேற்று (06) கலைத்த விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் இடைக்கால சபை ஒன்றை நியமித்துள்ளார்.

உலகக் கிண்ணத்தில் இந்தியாவுக்கு எதிராக இலங்கை அணி 55 ஓட்டங்களுக்கே சுருண்டு மோசமான தோல்வியை சந்தித்து சில நாட்களிலேயே அமைச்சர் இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளார்.

எனினும் இலங்கையின் மிகச் செல்வந்த விளையாட்டு அமைப்பாக உள்ள இலங்கை கிரிக்கெட் சபைக்கும் விளையாட்டு அமைச்சருக்கும் இடையில் பல மாதங்களாக முறுகல் நீடித்து வந்தது. குறிப்பாக இலங்கை கிரிக்கெட் ஊழல் விவகாரங்கள் தொடர்பில் அமைச்சர் குற்றம் சாட்டி வந்தார்.

1996 ஆம் ஆண்டு இலங்கைக்கு உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த அணித் தலைவரான 59 வயது அர்ஜுன ரணதுங்க புதிய இடைக்கால சபையின் தலைவராக செயற்படுவார் என்று அமைச்சரின் அலுவலகம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட்டை கட்டியெழுப்புவதற்கு ரணதுங்க பொருத்தமானவர் என்று அமைச்சர் கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். “அணியின் ஆட்டத் திறமையை மேம்படுத்துவதற்கே முன்னுரிமை அளிக்கப்படும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஏழு பேர் கொண்ட இந்த இடைக்கால சபையில் ஊழல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு உதவியாக மூன்று நீதிபதிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில் கிரிக்கெட்டை கட்டியெழுப்பும் சவாலை ஏற்றதாக ரணதுங்க தெரிவித்துள்ளார். “நாட்டில் ஊழல் மிக்க நிறுவனமாக இலங்கை கிரிக்கெட் மாறியுள்ளது” என்று கூறிய அவர், “அந்த நிலையை மாற்ற நான் விரும்புகிறேன்” என்றார்.



இலங்கை கிரிக்கெட்டில் இரண்டாவது உயர் பதவி வகிக்கும் அதிகாரியான, செயலாளர் மொஹான் டி சில்வா பதவி விலகி ஒருநாளைக்குப் பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி இந்தியாவிடம் 302 ஓட்டங்களால் தோல்வி அடைந்ததை அடுத்து இலங்கை கிரிக்கெட் சபையின் அனைவரும் பதவி விலக வேண்டும் என்று அமைச்சர் ரணசிங்க முன்னதாக கூறியிருந்தார்.

இந்தியா நிர்ணயித்த 358 ஓட்ட வெற்றி இலக்கை துரத்திய இலங்கை ஒரு கட்டத்தில் 14 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்திருந்ததோடு 55 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து உலகக் கிண்ண வரலாற்றில் நான்காவது மிகக் குறைந்த ஓட்டங்களை பதிவு செய்தது.

இந்தத் தோல்வியை அடுத்து இலங்கை கிரிக்கெட்டுக்கு எதிர்ப்பு வலுத்ததோடு சிலர் இலங்கை கிரிக்கெட் சபை தலைமையகத்திற்கு முன் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். இதனால் நேற்றைய தினத்திலும் அங்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

1999 ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு காரணங்களுக்காக விளையாட்டு அமைச்சரால் இலங்கை கிரிக்கெட் சபைக்கு இதுவரை 10 தடவைகள் இடைக்கால சபைகள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் கிரிக்கெட் நிர்வாகத்தில் அரசியல் தலையீட்டை எதிர்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அமைச்சர் ரணசிங்க கடந்த சனிக்கிழமை (04) ஐ.சி.சி. முழு அங்கத்துவ நாடுகளுக்கு தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதத்தில் தனது நிலைப்பாட்டை வெளியிட்டிருந்ததோடு, இடைக்கால நடவடிக்கை ஒன்று பற்றியும் கூறியிருந்தார்.

கடந்த மே மாதம் தொடர்ந்து மூன்றாவது தடவையாக இலங்கை கிரிக்கெட் சபை தலைவராக நியமிக்கப்பட்டிருந்த ஷம்மி சில்வாவை நீக்கியது தொடர்பில் ஐ.சி.சி உடன் எந்த பதிலும் அளிக்கவில்லை என்பதோடு ஷம்மி சில்வா தரப்பில் இருந்தும் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

சர்வதேச கிரிக்கெட்டில் முதல்முறை

## 'டைம் அவுட்' முறையில் ஆட்டமிழந்தார் மத்தியூஸ்



ஐ.சி.சி போட்டி விதிகளின்படி இரண்டு நிமிடங்களுக்குள் முதல் பந்துக்கு முகம்கொடுக்காததால் கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக அஞ்சலோ மத்தியூஸ் ஒரு பந்துக்குக் கூட முகம்கொடுக்காமல் ‘டைம் அவுட்’ முறையில் ஆட்டமிழந்தார்.

பங்களாதேஷுக்கு எதிராக டெல்லி, வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்ற உலகக் கிண்ண லீக் போட்டியில் மத்தியூஸ் ஆறாவது வீரராக துடுப்பெடுத்தாட ஆடுகளம் வந்தபோது துடுப்பெடுத்தாடும் முன்னரே தலைக் கவசத்தை மாற்ற முயன்றார்.

ஷகீப் அல் ஹசனின் பந்துக்கு துடுப்பெடுத்தாடுவதற்கு தனது தலைக் கவசத்தை சரிசெய்யும்போது அதன் பட்டி அறுந்தது. இந்தத் தருணத்தில் துடுப்பாட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய 2 நிமிடங்களும் கிட்டத்தட்ட முடிந்திருந்தது.

எனினும் சாமிக்க கருணாரத்ன மாற்று தலைக்கவசத்தை எடுத்துவரும்போது ஷகீப் ஆட்டமிழப்புப் பற்றி நடுவரிடம் கோரியதை அடுத்து நடுவர் மரைஸ் எரஸ்முஸ், மத்தியூஸுக்கு ஆட்டமிழப்பை வழங்கினார்.

ஆரம்பத்தில் மத்தியூஸ் இதனை நகைச்சுவையாக கருதியபோதும், உண்மையை அறிந்ததை அடுத்து நடுவருடன் நீண்ட விவாதத்தில் ஈடுபட்டார். தொடர்ந்து கோபத்தில் வெளியேறி அவர் தனது தலைக்கவசத்தை பௌண்டரி ஓரத்தில் வீசிவிட்டுச் சென்றார்.

இதன்போது நடுவர், ஷகீபிடம் தமது முறைப்பாட்டை வாபஸ் பெறுவது தொடர்பில் கோரிக்கை விடுத்தபோதும், மத்தியூஸ் அவருடன் பேசிய போதும் அவர் அதனை வாபஸ் பெறவில்லை.

இலங்கை அணி 24.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்களை பெற்றிருந்தபோதே இந்த ஆட்டமிழப்பு நிகழ்ந்தது.

கிரிக்கெட் விதிகளின்படி ஒரு விக்கெட் வீழ்த்தப்பட்டு அல்லது துடுப்பாட்ட வீரர் காயத்தில் வெளியேறிய பின் அடுத்து வரும் வீரர் இரண்டு நிமிடத்துக்குள் பந்தை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முதல்தர கிரிக்கெட்டில் 6 முறை டைம் அவுட் முறையில் ஆட்டமிழப்புகள் இடம்பெற்றிருந்தபோதும் சர்வதேச கிரிக்கெட்டில் இது தான் முதல் முறை.

சரித் அசலங்கவின் சதத்துடன் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.3 ஓவர்களில் 279 ஓட்டங்களை பெற்றது.



## சர்வதேச செய்திகள்

# போர் நிறுத்த அழைப்புகளுக்கு மத்தியில் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல் தீவிரம்

போர் நிறுத்தத்திற்கான அழுத்தங்களை பொருட்படுத்தாத இஸ்ரேல் காசா மீதும் தொடர்ந்து உக்கிர வான் தாக்குதல்களை நடத்தி வருவதோடு அதன் தரைப்படை பலஸ்தீன போராளிகளுடன் சண்டையிட்டு வருகிறது.

சனநெரிசல் மிக்க காசாவில் இஸ்ரேலிய துருப்புகள் ஹமாஸ் போராளிகளுடன் வீடு வீடாக சண்டையிட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. 2.3 மில்லியன் மக்கள் தொகை கொண்ட காசாவில் ஏற்கனவே 1.5 மில்லின் மக்கள் பாதுகாப்புத் தேடி வீடுகளில் இருந்து வெளியேறி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசா நகரை சுற்றிவளைத்ததாக குறிப்பிட்டிருக்கும் இஸ்ரேல் இராணுவம், முற்றுகையில் உள்ள காசாவை இரண்டாக பிரித்திருப்பதாக தெரிவித்துள்ளது. “அது வடக்கு காசா மற்றும் தெற்கு காசா என்று மாறியுள்ளது” என்று இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் டானி ஹகரி செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார். ஹமாஸுக்கு எதிரான இஸ்ரேலிய போரில் இது முக்கியமான கட்டம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இஸ்ரேலிய துருப்புகள் அடுத்த 48 மணி நேரத்திற்குள் காசா நகருக்குள் நுழையும் என்று இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் இஸ்ரேலிய துருப்புகள் பலஸ்தீன போராளிகளிடம் இருந்து தொடர்ந்தும் கடும் எதிர்ப்பை சந்தித்து வருகின்றன. சுரங்க பாதைகளில் மறைந்து போராளிகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இஸ்ரேலின் மற்றொரு வீரர் கொல்லப்பட்டதை இஸ்ரேல் இராணுவம் நேற்று உறுதி செய்தது. கவசப் படையின் 9ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாக அது கூறியது.

இதன்படி இஸ்ரேல் காசாவில் தரை நடவடிக்கையை ஆரம்பித்தது தொடக்கம் கொல்லப்பட்ட இஸ்ரேலிய வீரர்களின் எண்ணிக்கை 30ஆக உயர்ந்துள்ளது.

காசா மீதான இஸ்ரேலிய தாக்குதல் ஆரம்பித்தது தொடக்கம் கடந்த 24 மணி நேரத்தில் வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக தாக்குதல் உச்சம் பெற்றிருந்ததாக அங்கிருக்கும் ரோய்ட்டர்ஸ் செய்தியாளர் ஒருவர் விபரித்துள்ளார்.

இந்த உக்கிர தாக்குதல்களுக்கு முன்னதாக காசாவில் இணையதளம் மற்றும் தொலைபேசி இணைப்புகள் மீண்டும் ஒரு முறை துண்டிக்கப்பட்டன. இதனால் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளும் ஸ்தம்பித்தன. காசா நகர் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளை இலக்கு வைத்தே பெரும்பாலான தாக்குதல்கள் இடம்பெற்றன. இதில் இந்தோனேசிய மருத்துவமனை மற்றும் ஜபலியா அகதி முகாமுக்கு அருகிலும் தாக்குதல்கள் இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை மத்திய காசாவில் இருக்கும் இரு அகதி முகாம்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 53 பேர் கொல்லப்பட்டதோடு மகாசி அகதி முகாமில் நடத்திய தாக்குதலில் மேலும் 40 பொதுமக்கள் பலியாகினர். இந்நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் குறைந்தது 200 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் காசாவில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை 9,922 ஆக உயர்ந்துள்ளது.

**போர் நிறுத்தம்**

உயிரிழப்புகள் அதிகரிக்கும் சூழலில் சர்வதேச கவலையும் அதிகரித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து வெளியிட்ட கூட்டு அறிவிப்பில், காசாவில் பொதுக்களின் உயிரிழப்புகள் குறித்து கோபத்தை வெளியிட்டதோடு, உடன் மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தது.

“சுமார் ஒரு மாதமாக, இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பிரதேசத்தில் நிகழ்ந்து வரும் நிலைமையை உலகம் அதிர்ச்சி மற்றும் திகிலுடன் பார்த்துக்கொண்டிருக்கிறது” என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் யுனிசெப், உலக உணவுத் திட்டம் மற்றும் உலக சுகாதார அமைப்பு உட்பட நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளடங்குகின்றனர்.

“எமக்கு அவசர மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்று தேவை. இப்போது 30 நாட்களாகிறது. இது போதும். நிறுத்தப்பட வேண்டும்” என்று அரிதாக வெளியிடப்பட்ட இந்த கூட்டு அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனினும் போர் நிறுத்தம் ஒன்றை இஸ்ரேல் தொடர்ந்து மறுத்து வருகிறது. மத்திய கிழக்கிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கனிடம் அரபுத் தலைவர்கள் அவசர போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழுத்தம் கொடுத்திருந்தனர். ஆரம்பத்தில் இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்ட அவர் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை, ஜோர்தான், ஈராக், சைப்ரஸ் மற்றும் துருக்கிக்கும் பயணித்தார்.

துருக்கி இஸ்ரேலுக்கான தனது தூதுவரை திரும்ப அழைத்து பென்ஜமின் நெதன்யாகுவுடனான தொடர்புகளை துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான் துண்டித்திருக்கும் நிலையிலேயே பிளிங்கன் நேற்று துருக்கி சென்றிருத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் போர் நிறுத்தம் ஒன்று பற்றி அமெரிக்கா உறுதியான நிலைபாடு எதனையும் வெளியிடவில்லை. போர் நிறுத்தம் ஹமாஸ் அமைப்புக்கு சாதகமாக அமையக் கூடும் என்று அமெரிக்கா தொடர்ந்து கூறி வருகிறது.

எனினும் நெதன்யாகு தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதோடு, “பணயக்கைதிகள் திரும்பும் வரை போர் நிறுத்தம் ஒன்று இல்லை” என்று நெதன்யாகு உறுதி அளித்துள்ளார்.

இஸ்ரேலிய துருப்புகளிடம் கடந்த ஞாயிறன்று பேசிய நெதன்யாகு, “தமது அகராதியில் இருந்து இதனை (போர் நிறுத்தம்) அவர்கள் நீக்க வேண்டும். எமது நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் இதனை கூறிக்கொள்கிறோம்” என்றார். “நாம் வெற்றிபெறும் வரை முன்னேறுவோம். எமக்கு மாற்று வழி இல்லை” என்றும் அவர் தெரிவித்தார்.



உயிரிழப்பு எண்ணிக்கை 10,000ஐ நெருங்கியது

**தெற்கு செல்ல அழுத்தம்**

அகதி முகாம்கள் பிரதான நீர் மூலங்கள் தாக்கப்படுவதன் மூலம் வடக்கில் உள்ள மக்கள் வாழ முடியாத சூழலை ஏற்படுத்த இஸ்ரேல் முயல்வதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர். வடக்கில் உள்ள ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களை தெற்கு காசாவுக்கு செல்லும்படி இஸ்ரேல் கூறிவருகின்றபோதும் அது தெற்கு காசா மீது தாக்குதல்களை நடத்தி வருகிறது. அதேபோன்று வடக்கு மற்றும் தெற்கிற்கான வீதி இணைப்புகளையும் அது அழித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் ஜோர்தான் விமானப் படை காசாவுக்குத் தேவையான மருத்துவ விநியோகங்களை வான் வழியாக வழங்கியுள்ளது. காசாவில் காயமடைந்திருக்கும் சகோதரர்களுக்கு உதவுவது தமது பொறுப்பாகும் என்று ஜோர்தான் மன்னர் இரண்டாவது அப்துல்லாஹ் தெரிவித்துள்ளார்.

தமது நட்பு நாடான ஜோர்தானுடனான ஒருங்கிணைப்பில் இந்த உதவிகள் வானில் இருந்து வழங்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

காசாவில் இஸ்ரேல் முழுமையான முற்றுகையை செயற்படுத்தி இருக்கும் நிலையில், அங்கு உணவு, எரிபொருள் மற்றும் நீர் விநியோகங்கள் தீர்ந்து வருகின்றன.

காசாவில் இதுவரை 200,000க்கும் அதிகமான குடியிருப்பு கட்டடங்கள் தகர்க்கப்பட்டிருப்பதோடு அது காசாவின் மொத்த குடியிருப்புப் பகுதிகளில் 50 வீதம் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தவிர பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தில் 42 கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில் காசாவில் சராசரிப் பலஸ்தீனர் ஒரு நாளைக்கு வெறும் 2 ரொட்டித் துண்டுகளை உண்டு வாழ்ந்துவருவதாக ஐக்கிய நாடுகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எகிப்திலிருந்து ராஃபா எல்லை வழியாக நாளொன்றுக்குச் சராசரியாக 30 லொறிகள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த லொறிகளில் மருந்து, உணவு, தண்ணீர் ஆகியவற்றுடன் மற்ற அத்தியாவசியப் பொருட்களும் கொண்டுசெல்லப்படுகின்றன. ஆனால் எரிபொருளைக் கொண்டு செல்ல அனுமதியில்லை.

போர் ஆரம்பிப்பதற்கு முன் காசா வட்டாரத்துக்குள் அன்றாடம் சுமார் 500 லொறிகள் நுழைவது வழக்கம்.

இதற்கிடையே ராஃபா எல்லை வழியாகக் காசாவிலிருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

காசாவுக்கு அப்பால் தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் மூன்று குழந்தைகள் மற்றும் அவர்களின் பாட்டி கொல்லப்பட்டதாக லெபனான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது தொடர்பில் ஐக்கிய நாடுகளிடம் முறையிடப்போவதாக லெபனான் வெளியுறவு அமைச்சர் அப்துல்லாஹ் பவு ஹபிப் தெரிவித்துள்ளார்.

இதில் எட்டு தொடக்கம் 14 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களே கொல்லப்பட்டதாக இந்தத் தாக்குதல் இடம்பெற்ற பின்த் ஜிபைல் பகுதியைச் சேர்ந்த ஹிஸ்புல்லா பாராளுமன்ற உறுப்பினரான அப்துல்லாஹ் பவு ஹபீப் தெரிவித்துள்ளார். “பொதுமக்களுக்கு எதிரான குற்றத்திற்காக எதிரிகள் விலைகொடுப்பார்கள்” என்று அவர் குறிப்பிட்டார்.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேல் மற்றும் லெபனானின் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்புக்கு இடையே பரஸ்பரம் தாக்குதல் இடம்பெற்று வருகின்றன. மேற்குக் கரையிலும் பதற்றம் நீடிப்பதோடு நேற்றும் ஒரு பலஸ்தீனர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் கடந்த ஒக்டோபர் 7 தொடக்கம் அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 154 ஆக உயர்ந்துள்ளது.

## மத்திய கிழக்கு விரைந்தது அமெரிக்க அணு நீர்மூழ்கி



அமெரிக்கா தனது அணு சக்தி நீர் மூழ்கிக் கப்பல் ஒன்றையும் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு அனுப்பியுள்ளது. இஸ்ரேல் மற்றும் காசா போர் வெடித்தது தொடக்கம் அமெரிக்கா பிராந்தியத்தில் படை பலத்தை பலப்படுத்தி வருகிறது. ஏற்கனவே இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்கள், போர் விமானங்கள் மற்றும் துருப்புகளை இஸ்ரேலை ஒட்டி, பிராந்தியத்தில் அதிகரித்துள்ளது. எனினும் தமது படைகளை இஸ்ரேலுக்கு அனுப்பும் எண்ணம் இல்லை என்று அமெரிக்கா கூறியுள்ளது. மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்காவின் 40,000க்கும் அதிகமான படைகள் நிலைகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. பணிப்பாளர் வில்லியம் பேர்ன்ஸ் நேற்று முன்தினம் இஸ்ரேல் பயணமானார். அங்கு அவர் இஸ்ரேலிய தலைவர்கள் மற்றும் உளவுப் பிரிவு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தொடர்ந்து பிராந்திய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.